# சமணத்
# தமிழ் இலக்கிய வரலாறு

ஆசிரியர் :

பல்கலைச் செல்வர்

**திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,**
எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.,

தமிழ்த் துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

○

கலைக்கதிர் வெளியீடு, கோவை-1.

முதற் பதிப்பு: பிப்ரவரி, 1961.

விலை ரூ. 2-50

கலைக்கதிர் அச்சகம்,

கோவை-1.

# மதிப்புரை

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களின் பெரும் புலமையும் அவர் ஆற்றிவரும் அரும் பணியும் தமிழகம் நன்கு அறியும். பல்கலைச் செல்வராய், பன்மொழிப் புலவராய் அவர் பல்லாண்டுகளாகத் தமிழுக்கு ஆக்கந் தந்து வருகிறார். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல இளைஞர்களுக்குத் தமிழறிவித்து அவர்கள் சிறந்த புலவர்களாய் ஒளிரும் வண்ணம் செய்துள்ளார். தமிழில் எம். ஏ. பட்டம் பெற விரும்பியோர்க்குத் தனி வகுப்பு நடத்தித் தேர்ச்சி பெற உதவியுள்ளார்.

பத்துப்பாட்டு மாநாடு, தொல்காப்பிய மாநாடு போன்ற பல இலக்கிய மாநாடுகளை நடத்தித் தமிழ் மக்களிடையே தமிழுணர்வைப் பெருக்கி யுள்ளார். ஓர் இம்மியும் கைம்மாறு கருதாது அவர் இத்துணையும் செய்தார் எனின் அவர்தம் தன்னலங் கருதாத் தனிப்பெருந் தகவு விளங்குகிற தன்றோ? [illegible], அவர் சென்னை அரசினர் மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்து பல மாணவர்களுக்குத் தமிழறிவு வழங்கியதோடு அவர்களைத் தமிழ் இலக்கிய இலக்கண ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்தி ஆராய்ச்சிப் பட்டங்கள் பெறச் செய்துள்ளனர். அச்சீரிய பணியைத் தொடர்ந்து அவர் தற்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றி வருகிறார். அங்குப் பல மாணவர்கள் அவர்தம் கண்காணிப்பில் மொழியியல் துறையிலும், தமிழ் இலக்கண இலக்கியத் துறைகளிலும் ஆராய்ச்சி பல நிகழ்த்தி வருகின்றனர். அவ்வாராய்ச்சிகளால் நந் தமிழ்மொழி பெரும் பயன் எய்தும் என்று கூறவேண்டுவ தில்லை. அவர்

மொழியியல் (Linguistics) துறையிலும் வல்லுநராய் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் அத்துறைக்குத் தலைமை தாங்கி அதனையும் சிறப்புற வளர்த்து வருகிறார்.

கல்லூரியில் எல்லாப் பாடங்களையும் நம் தாய் மொழி வாயிலாகப் பயில்வதே கல்வி வளர்ச்சிக்குரிய சிறந்த வழி என்பதை நன்குணர்ந்து, அவர் கல்லூரித் தமிழ்க் குழுவில் உறுப்பினர் பொறுப்பேற்றுப் பி. ஏ. பட்ட வகுப்புப் பாடங்களைத் தற்போது தமிழில் கற்பிக்க வழி வகுத்துள்ளார்.

அவர் தமிழ்மொழிக்கே யன்றித் தமிழ் நாட்டுக்கும் பணி பல புரிந்துள்ளார். நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டுச் செய்த தியாகங்களை நம் நாடு அறியும்.

இப்பெருந்தகையார்க்கு 1961-ஆம் ஆண்டு சனவரி மாதத்தோடு அறுபது ஆண்டு நிறைவெய்துகிறது. அவர்தம் மணிவிழா நினைவாற்றலாக அவர் இயற்றிய நூல்கள் சிலவற்றை வெளியிடும் பணியைக் கலைக்கதிர் ஏற்றுள்ளது. அவற்றுள் ஒன்றே இந்நூல். சங்ககாலத்திலிருந்தே சமணர்கள் தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் எழுதித் தமிழைச் சிறந்த முறையில் வளர்த்துள்ளார்கள். அவர்கள் ஆக்கிய இலக்கண இலக்கியங்களை முறைப்பட மிகத் தெளிவாக இந்நூல் விளக்குகின்றது. திரு. தெ. பொ. மீ. அவர்களின் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பற்றிய ஆழ்ந்த புலமையையும் இந்நூல் புலப்படுத்துகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சிக்கு இந்நூல் பெருந் துணை செய்வதாகும்.

நந்தமிழ் மொழி ஆக்கம் பெறத் திரு. தெ. பொ. மீ. அவர்கள் நீடுவாழ வேண்டுமென எல்லாம் வல்ல திருவருளை இறைஞ்சுகிறேன்.

ஜி. ஆர். தாமோதரன்

# முன்னுரை

இந்தியாவில் உள்ள பல மொழிகளிலும் சமண இலக்கியங்கள் வளர்ந்த வரலாற்றை இந்தி மொழியில் வெளியிடும் தொண்டைக் காசி பார்சுவநாதக் கழகம் மேற்கொண்டது. ஒரு இந்திய மொழியிலிருந்து மற்றொரு இந்திய மொழியில் மொழிபெயர்ப்பது எளிதாகும் முறையில் இந்திய மொழிகளின் சொற்றொடர் அமைப்பு, வரலாற்று வழியே ஒருமைப்பாடு கொண்டு விளங்கு கிறது. ஆதலின் சமணத் தமிழ் இலக்கிய வரலாற்றைத் தமிழில் எழுதித் தரும் வாய்ப்பினை அக் கழகத்தார் எனக்கு அளித்தனர். அவ்வரலாறு இந்தியில் மொழி பெயர்க்கப்பட் டுள்ளது. தமிழுக்குப் பெரிதும் உழைத்து இன்றுள்ள நிலைமைக்கு இதனைக் கொணர்ந்தவர்களில் தலைமை பூண்டு விளங்கும் சமணரது தமிழ்த் தொண்டினைத் தமிழர்கள் தமிழிலேயே கற்று மகிழ்தல் வேண்டும் என்ற நல்லெண்ணத்தாலே திருவாளர் ஜி. ஆர். தாமோதரனூர் அதனை வெளியிட விரும்பினூர். அவ்வன்பரின் கட்டளையை யான் ஏற்றதன் பயனுக இன்று கலைக்கதிர் வெளியீடாகத் தமிழர் உள்ளத்தை நாடிக் காலெடுத்து வைக்கின்றது இந்நூல். பார்சுவநாதக் கழகத்தினரும் இதனைத் தமிழில் வெளியிட உரிமை வழங்கினர். இவ் வரலாறு என்னுடைய ஊனக்கண் கொண்டு கண்ட வரலாறு ஆதலின் இதனையே முடிந்த முடிபெனக் கனவிலும் யான் காணவில்லை. இந்த முதல் முயற்சியின் பின் தொடர்ந்து எழும் பல ஆராய்ச்சிகளால் உண்மை வெளியாகியே தீரும் என்று மட்டும் நம்புகிறேன்.

**தெ. பொ. மீனுட்சிசுந்தரன்**

# உள்ளுறை

—oo:o:oo—


**முதல் அத்தியாயம் — சங்கம்**

| | | |
|---|---|---|
| 1. | சமணமும் தமிழ்நாடும் | 1 |
| 2. | தொல்காப்பியர் — சைனர் | 11 |
| 3. | தொல்காப்பியர் — காலம் | 22 |
| 4. | சங்க நூல்கள் | 29 |
| 5. | திருக்குறள் — காலம் | 33 |
| 6. | திருவள்ளுவரும் சமணமும் | 40 |
| 7. | திருக்குறள் கூறும் பொருள் | 43 |

**இரண்டாம் அத்தியாயம் — அறநூல்கள்**

| | | |
|---|---|---|
| 1. | பதினெண் கீழ்க்கணக்கு — அறவகை இலக்கியம் | 46 |
| 2. | பதினெண் கீழ்க்கணக்கு — இலக்கணம் | 51 |
| 3. | ,, நாலடி நானூறு, பழமொழி நானூறு | 55 |
| 4. | ,, சிறு பஞ்சமூலம், ஏலாதி, பிறநூல் | 58 |
| 5. | ., பிற இயல்புகள் | 61 |
| 6. | அறநிலைக் கதைகள் | 65 |

**மூன்றும் அத்தியாயம் — காப்பியம்**

| | | |
|---|---|---|
| 1. | சிலப்பதிகாரம் — காப்பியம் | 69 |
| 2. | ஆசிரியர் சமயம் | 73 |
| 3. | சிலப்பதிகாரத்தின் காலம் | 76 |
| 4. | மணிமேகலை | 85 |
| 5. | மணிமேகலையின் விளைவு குண்டலகேசி — நீலகேசி | 88 |
| 6. | வளையாபதி | 92 |
| 7. | பெருங்கதை | 94 |

**நான்காம் அத்தியாயம் — காப்பியம் (முடிவு)**

| | | |
|---|---|---|
| 8. | சிந்தாமணி — கதையும் சிறப்பும் | 99 |
| 9. | சிந்தாமணி — காலம் | 103 |

10. சிந்தாமணி — குறிக்கோள் 107
11. சூளாமணி — காலம் 109
12. சூளாமணியின் சிறப்பு 112

**ஐந்தாவது அத்தியாயம் — சிறுகாப்பியங்கள்**

1. யசோதர காவியம் 117
2. சிறு புராணம் — சாந்தி புராணம், நாரத சரிதை 120
3. சிறு காப்பியம் — மேருமந்திர புராணம் 121
4. சமணப் பெண் கவிகள் 124
5. கலிங்கத்துப் பரணி 127
6. பக்திப் பாடல்கள் — பிரபந்தங்கள் 130
7. பிற நூல்கள் 132

**ஆறும் அத்தியாயம் — வசனம், இலக்கணம் நிகண்டு முதலியன**

1. வசன காப்பியம் — பழைய நிலே 136
2. தமிழ் வசன புராணம் 139
3. பேச்சு நடை 141
4. காலம் 142

II. நிகண்டு 146

III. இலக்கணம்

1. இலக்கண வளர்ச்சி 149
2. அவிநயம் 152
3. யாப்பருங்கலம் 154
4. இளம்பூரணர் 157
5. நேமிநாதர் 159
6. அடியார்க்கு நல்லார் 160
7. நன்னூல் 161
8. நம்பி 162
9. நச்சினர்க்கினியர் 164

IV. பிற நூல்கள் 165

முடிவு 166

முதல் அத்தியாயம்

# சங்கம்

## சமணமும் தமிழ்நாடும்

சைன மதம் இந்திய வரலாற்றில் பெரும் புகழும் பெற்றது. சைனர்கள் கிறிஸ்தவப் பாதிரிகளைப் போலத் தம்முடைய கொள்கைகளைப் பொதுமக்கள் பேசிய மொழிகளிலேயே மக்களின் இளமை முதல் பரப்பியதால் அவ்வம் மக்களது தாய்மொழியை வளர்த்த பெருமையும் ஆராய்ந்த சிறப்பும் அவர்களுக்கு உண்டு. ''ஐம் பொறிகளை அடக்கி வென்றவர்'', ''ஊழினைக் கடந்து வென்றவர்'' என்ற பொருளில் இம்மதத்தைக் கண்டவர்க்கு ஜீனர் என்பது பெயராகும். அவர் கண்ட உண்மை சைன மென்றும் அவரைப் பின்பற்றுவோரை சைன ரென்றும் தமிழில் வழங்குவர். துறவிகளை ஸ்ரமணர் என்பர். ஸ்ரமணர் என்பது சமணர் என்றும் அமணர் என்றும் மாறி வழங்கும். இச்சொல் தமிழ் நாட்டில் சைனத் துறவிகளைக் குறிப்பதாகிப் பின்னர்த் துறவினை வற்புறுத்தும் சைனர்க்கே பொதுப் பெயராக வழங்கி வருகிறது. கடவுள்நிலை அடைந்த ஜீனரை அருகர் என வழங்குவது தமிழில் சிறப்பு வழக்கம். அதனால், சைனர்களை ஆருகதர் என்று வழங்குவதுப்

உண்டு. ஒன்றிலுந் தோயாத பற்றற்ற நிலையாம் நிர்க்கந்த நிலையே - நிகண்ட நிலையே - கடவுள் நிலையாகக் கூறுதலின் சைன மதத்தினை நிகண்ட வாதம் என்றும் கூறுவர். அசோகம் அல்லது பிண்டி மரத்தின் அடியில் இருப்பதாக அருகரைப் போற்றுதலின் சைனர்களைப் பிண்டியரென்றும் தமிழ் நூல்கள் வழங்கும். சைனரில் இல்லறத்தில் நிற்பாரைச் சாவகர் என்பர்.

*பரம்பரை*

சமண மதம் மிகப் பழையதென்பது சமணர்கள் கொள்கை. ஆனால், அஃது இந்திய வரலாற்றில் சிறந்து விளங்கியது, சமணர்கள் கூறும் இருபத்துநான்கு தீர்த்தங்கரரில் கடைசியாக வந்த ஞாதிபுத்திர வர்த்தமான மகாவீரரைப் பின்பற்றித்தான். அவர் கி. மு. 527-ல் அருகநிலை அடைந்தார். அவருடைய ஞானபரம்பரை கீழே கண்ட குருசிஷ்ய முறையாக வளர்ந்தது என்பர்.

மகாவீரர்
- கௌதம இந்திரபதி
- சுதர்மன்
  - சம்பு ஸ்வாமி
  - விஷ்ணு நந்தி
  - நந்திமித்திரன்
  - அபராஜிதன்
  - கோவர்த்தனன்
  - பத்திரபாகு

### தென்னாடு புகுதல்

இங்கே கடைசியில் கண்ட பத்திரபாகு மௌரிய சக்கரவர்த்தியாகிய சந்திரகுப்தரின் குருவென்றும், வடநாட்டில் கருப்பு வரப்போவது தெரிந்து தெற்கே ஸ்ரவணபெள்குளத்துக்கு வந்துவிட்டார் என்றும், இவர் அங்கிருந்து தம்முடைய மாணவர்களில் ஒருவரான விசாகரைச் சோழபாண்டியர்க ளாண்ட தமிழ்நாட்டிற்குச் சமண மதத்தைப் பரப்ப அனுப்பினர் என்றும், சந்திர குப்தரும் முடிவில் துறவு பூண்டு இவரை அடைந்து வடக்கிருந்து உயிர்விட்டார் என்றும் வழங்கும் கர்ணபரம்பரைச் செய்தியினைச் சமண நூல்களிலும் கல்வெட்டுக் களிலும் காணலாம். ஆனால், ஒரு சிலர், இந்த வரலாறு கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன் வழங்கவில்லை என்று கூறுவர். பின்வந்த சந்திரகுப்தர் II என்றும் பத்திரபாகு III என்றும் கொள்வாரும் உண்டு. ஆனால், சந்திரகுப்தர் காலத்தில் இலங்கையை அரசாண்ட பாண்டுகாபயன் ''நிகண்டர்கள்'' என்ற சமணர்களுக்கு ஆதரவளித்ததாக மகாவம்சம் கூறும். கி. மு. 2 - 3 நூற்றாண்டுகளில் பிராமி எழுத்தில் உள்ள தென்தமிழ் நாட்டுக் குகைக் கல்வெட்டுக்கள் பௌத்தர்களுடையன எனச் சிலர் கருதினாலும் சமணருடையன என்று கருதுகின்றவர்களும் உண்டு. எனவே, மூன்றும் நூற்றாண்டிலேயே சமணர்கள் தமிழ்நாடு புகுந்து தமிழில் எழுதித் தங்கள் கொள்கைகளைத் தமிழில் பரப்ப அடிகோலினர் எனலாம்.

**தமிழ்நாடு எங்கும்:** சமண சமயம் இன்று தமிழ் நாட்டில் குறுகி இருந்தாலும் ஒருகாலத்துத் தமிழ் நாடு முழுதும் சீருஞ் சிறப்புமாகப் பரவி இருந்தது என்பதற்குக் கல்வெட்டுக்களும், வயலோரத்திலும் மூலைமுடுக்கிலும் காட்சியளிக்கும் சமண விக்கிரகங்களும், அமணப் பாக்கம், அருகத்துறை, நமணசமுத்திரம், ஜீனலயம், பஞ்சபாண்டவமாலை, அமண்குடி, சமணர்திடல், சமண

மலை, அருகமங்கலம், பஸ்திபுரம் முதலிய இடங்களின் பெயர்களும் சைன மடத்தின் பெயராகிய பள்ளி என முடியும் இடப் பெயர்களும் இன்று சான்று பகர்கின்றன.

**சமணப் பெரியோர்**

**முதல் காலம் :** குண்டனகுந்தர் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னோ கி. பி. முதல் நூற்றாண்டிலோ தென்னாட்டில் சமண மதத்தில் நூல்கள் எழுதிய சமணப் பெரியாராம். பலாகபிஞ்சர், அவர் மாணவராகலாம். இவர் பின் குணநந்தி வந்தாராம். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் சமந்தபத்திரர் காஞ்சியரசரை வெல்ல, அவ்வரசர் துறவுபூண்டு சிவகோடி ஆச்சாரியர் என இடைக்காலத்தே ஆனாராம். இப்படிச் சிறந்த காலம் முற்காலம். அகளங்கதேவர் காஞ்சியில் ஹிமசீதள அரசன் எதிரே பௌத்த சாங்கியர்களைக் கி. பி. 188-ல் வாதில் வென்றார் என்றும், அவர் சாஹசதுங்கன் சபையில் தம்மைப் பற்றிப் பேசியுள்ளார் என்றும், அவனே தந்திதுர்க்கனாவான் என்றும், அவர் திருப்பனம்பூரில் தங்கி இருந்தார் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். ஹரிவம்சம் எழுதிய ஜினசேனர் I-ம் பின் வீரசேனரும் அவர் தொடங்கிய ஜயத்வளடீகையை முடித்த ஜினசேனர் II என்பாரும் அவருடைய மாணவர் 898-ல் உத்தரபுராணம் பாடிய குணபத்திரரும் வாழ்ந்தனர். இவருக்குப் பின் சிந்தாமணி ஆசிரியரும் சூளாமணி ஆசிரியரும் பின்னர்க் குணபத்திரரின் மாணவர் அர்த்தபலியும் வந்தனர் என்பர். ஜினசேனரைச் சம்பந்தருடன் வாதமிட்டவராகக் கூறுவது சைனாச்சாரியரிற் சிறந்தவரையும் கதையில் கொண்டுவருவதற்காகக் கன்னடநாட்டில் நுழைத்ததே அன்றித் தமிழ் நாட்டில் அவ்வாறு கூறப்பெறவில்லை. ஆகையால், அவர் பெயரை வைத்துக் கொண்டு சம்பந்தர் காலத்தை வரையறுக்க முற்படுவது வீணே ஆம். ஆகவே, சம்பந்தரது காலமான 7-ம் நூற்றாண்டோடு தமிழ்நாட்டுச் சைன வரலாற்றில் முதற் பருவம் முடிகிறது எனலாம்.

**களப்பிரர்:** கன்னட நாட்டில் அரசினையே நிலை நாட்டியவர்கள் என்ற பெயர் பெற்ற சைனர்கள் ஆட்சி கருநடர் என்று கருதப்பெறும் களப்பிரர் ஆட்சியோடு தமிழ் நாட்டில் பெருகியது எனலாம். 5-ம் நூற்றுண்டில் வச்சிரநந்தி மதுரையில் சைன சங்கம் நிலைநாட்டியது இந்தக் காலத்திலேதான். தேவசேனர் என்பவர் கி. பி. 933-ல் இயற்றிய தர்சனசாரம் என்ற நூலில் (விக்ரம ஆண்டு 526) கி. பி. 470-ல் வச்சிரநந்தி என்பவர் மதுரையில் திராவிட சங்கத்தை ஏற்படுத்திஞர் என்று கூறுகிருர். பூஜ்யபாதர் கண்ட திராவிட கண்டம் (உட்பிரிவு) இவ்வாறு வச்சிரநந்தி காலத்தில் பெரும் பிரிவாம் சங்கமாயது. திருப்பாதிரிப்புலியூர் பாடலிபுரம் என்ற பெயருடன் அப்பர் காலம் வரையில் சிறந்திருந்தது; அங்குள்ள சமணநிலையத்தில் கி. பி. 458-ல் காஞ்சியில் அரசாண்ட சிம்மவர்மன் காலத்தில் சர்வநந்தி என்பவர் லோகவிபாகம் என்ற நூலை எழுதியதாக அந்த நூல் கூறும். இதற்கேற்ப சமண ராதிக்கம் முதற் பருவத்திலேயே நிலைபெற்றிருந்தது விளங்கக்கூடும்.

**வச்சிரநந்தி சங்கம்:** ஆனல், இந்த வச்சிரநந்தி 9-ம் நூற்றுண்டினர் என்றும், இந்தச் சங்கம் நிலைநாட்டியது அர்த்தபலி என்பவரே என்றும் சிலர் கொள்வர் (Saletore – Mediaeval Jainism P. 233). அவர்கள் காட்டும் கல்வெட்டுக்கள் (E. C. II No. 254 page 111–No. 258 p 117) தேவசங்கம், நந்திசங்கம், சிம்ஹசங்கம், சேனசங்கம் எனச் சமணரது கூட்டம் கன்னட நாட்டிலேயே நான்காகப் பிரிந்ததனைக் கூறுகின்றனவே அன்றித் தமிழ் நாட்டில் மதுரையில் தமிழ்ச் சமணர்களின் தலைமை நோக்கி முற்காலத்தில் தமிழ்ச் சமணர்கள் பிரிந்ததனைக் கூறவில்லை; ஆதலின் திராவிட சங்கத்தையும் கூறவில்லை. கன்னடத்தில் கூறப்பெறுவது பின்ஞளைய பிரிவு. பின்ஞளைய பிரிவினை ஏற்படுத்தியவர் அர்த்தபலி. அவர் காலத்தில் எழுதியவர் தேவசேனர். இவர் பின் நிகழ்ச்சியைக் கூறு

கின்றனரே யன்றி மதுரை நிகழ்ச்சியைக் கூறியிருக்க முடியாது. ஒன்றை யொன்ருக அவர் மயங்குதற்கும் இடம் இல்லே. அர்த்தபலி திராவிட சங்கம் எனச் சுட்டிக் கூருத தால் அந்தப் பெயர் கொண்ட பழம் பிரிவு பின் எழுந்தது என்று கொள்வது தேவசேனர் கூறும் காலக் குறிப்பினேக் (9 ஆம் நூற்ருண்டு) காற்றில் பறக்க விடுவதாம். திராவிட சங்கத்தில் தேவர், சேனர், வீரர் (சிம்ஹர்) நந்தி என்ற பெயருடையவர்கள் எல்லாம் வாழ்ந்தார்கள் எனச் சம்பந்தர், சுந்தரர் முதலியோர் பாடல்களால் அறிகிருேம். ஆதலின், நந்திகணத்தின் ஒரு பிரிவும் திராவிடப் பிரிவே ஆம்; அந்தப் பிரிவுக்கு அ(ரு)ங்கலான்வயம் என்றும் பெயருண்டு. இதற்கு வேருன திராவிட சங்கத்தைப் பேசும்போது எல்லா நூல்களும் கல்வெட்டுக்களும் குண்டனகுந்தர், சமந்தபத்திரர் முதலியோரைத் திராவிட சங்கத்தின் தலேவர்களாகக் குறிப்பிடுதலும் காண்க. 7-ஆம் நூற்ருண்டோடு தமிழக முதற் பருவச் சிறப்பு முடிந்தபின், திராவிட சங்கம் தமிழ் நாட்டில் தலேமை பெருது ஒடுங்கியதால், கன்னட நாடு சமணத்தின் உயிர் நிலேயாயிற்று. தமிழ்நாட்டி லிருந்து பலர் சிரவண பெள்குளத்திற்குச் செல்வாராயினர். அப்போது திராவிட சங்கம் திராவிட கணம் என்ற அளவில்தான் பேசப் பெறுதல் இயல்பு. புஷ்பசேனர் தம் பெயரைத் தமிழ் வடிவிலே புஷ்பசேனர் என்றே அங்கும் எழுதலாயினர். அர்த்தபலியின் மாணவர்களான பூதபலி, புட்பதந்தர் என்பாரும் சிந்தாமணி ஆசிரியரும் சூளாமணி ஆசிரியரும் சிறந்தோங்கியமையால் தமிழ் நாட்டிலும் சமணம் மறுமுறையும் சிறப்படைந்தது; அதன் காரணமாகத் திராவிட கணத்தைப் பழைமை போலத் திராவிட சங்கம் என்று பேசலாயினர். புட்பதந்தர் செய்த நூலே தமிழ் யசோதர காவியத்துக்கு முதலாகும். புட்பசேனரின் மாணவர்கள் 11-ஆம் நூற்ருண்டைய குணசேனர், கனகசேனர் என்பவர் (கி. பி. 893) தருமபுரியில் வாழ்ந்தன

ராம். வரகுணவிக்கிரமாதித்தியன் காலத்தே குணசேனரும் இருந்தனராம். இக்குறிப்புக்களும் இக்கொள்கையை வற்புறுத்தும்.

### தமிழ்ச் சமணப் பெரியோர்கள்

**சோழருக்கு முன்:** சம்பந்தர் முதலியோரால் சமணம் மறையவில்லை. தலைமை குன்றினாலும் சமணர் தமிழாராய்ச்சியும் சமணப் பிரசாரமும் செய்தே வந்தனர். சிந்தாமணி முதலிய நூல்களும் பின் தோன்றின. கல்வெட்டுக்களால் தெரியும் சமணப் பெரியோர்களை இங்கே குறிப்பிடலாம். கி. பி. 3 - 4-ஆம் நூற்றாண்டில் சந்திர நந்தியும் இளைய படாரமும் சல்லேசனையால் (பட்டினி கிடத்தல்; வடக்கிருத்தல்) உயிர்விட்டனர் (288 of 1904 M. E. R.). எட்டாம் நூற்றாண்டின் முடிவில் நந்திபோத்தரசன் காலத்து நாகநந்திகுரவர் விளங்கினார் (Ep/IND. Vol IV p. 136). மாறஞ்சடையன் காலத்தில் திருவிருந்தலை என்ற இடத்தே தென்பாண்டி நாட்டில் அருளாளத்துப் படாரர் என்பவர் வாழ்ந்தார். அச்சநந்தி பட்டாரரும் வாழ்ந்தார் (M. E. R. No. 603/1915 and page 112/1916). வடகோடியிலுள்ள அருளாள நாட்டிலிருந்து தென்கோடிக்குச் சென்றவர் போலும் இவர். இருக்குவேள் ஒருவரால் பாராட்டப்பெற்ற மலையத்துவசன் என்ற சமண முனிவரும் இருந்தனர் (புதுக்கோட்டைக் கல்வெட்டு 9). செந்தலைக் கல்வெட்டுக்கள் ஆரம்பவீரர், கனகசேனபட்டாரகர் என்ற இருவரைக் கூறும். அணுக்களின் சேர்க்கையால் உலகம் தோன்றலைக் கூறுவது ஆரம்பவாதம். அருக மதமும் ஆரம்பவாதமாம் ஆதலின், ஆரம்பவீரன் என்பது சமணப் பெயராதல் காண்க. கோமாறஞ் சடையன் காலத்தில் சமணக் கொள்கையாம் சித்தாந்தம் உரைக்கும் பட்டாரகர்களின் உணவு ஏற்பாடுபற்றி ஒரு கழுகுமலைக் கல்வெட்டு பேசுகிறது (S. I. I. Vol. V No. 405). இத்தகைய சித்தாந்த பட்டாரகரைப்பற்றியும் அவர் மாணவர் கனகசேன

சித்தாந்த பட்டாரகரைப்பற்றியும் கல்வெட்டு கூறுகிறது (EP. IND. X p. 54–70). ஆதித்தன் காலத்தில் குணகீர்த்தி பட்டாரகரையும் அவர் வழி மாணுக்கியர் கனகவீரக் குரத்தியரையும் ஒரு கல்வெட்டு கூறும் (S. I. I. Vol. III pt. III 92.).

**சோழர் காலம்:** முடிவில் கூறியவர்கள் சோழர் காலத்தவர்களே. முதல் பராந்தகன் காலத்தில் கி. பி. 945-ல் ஒரு கல்வெட்டு வினபாசுரகுரு அடிகளேயும் அவர் மாணவர் வர்த்தமானப் பெரிய அடிகளேயும் கூறும். (430–22) வள்ளிமலேயில் பொய்யாமொழியாம் சத்தியவாக்கி என்ற கங்க அரசன் கோயில் ஒன்று கட்டினுன். அந்த மலேயில் சில சமணத் துறவிகளின் படிவங்கள் உள்ளன. பாலசுந்திரபட்டாரகர் அல்லது கோவர்த்தனபட்டாரகர், ஸ்ரீ பாணராயரின் குருவாகிய பவணந்தி பட்டாரகர், அவர் மாணவராகிய தேவசேன பட்டாரகர் என்பாரையெல்லாம் அறிகிருேம் (Ep. IND. IV. p. 140). இந்தப் பவணந்தியாரைப் பின்னே நன்னூல் செய்தவர் எனக் கூறுவாரும் உண்டு. அவரோ சீயகங்கனேடு உறவுகொண்ட தன்றிப் பாணரோடு உறவுகொண்டதாகக் காணேம். மலேய கோயிலில் குணசேனர் என ஒருவர் இருந்ததாகத் தெரிகிறது (புதுக்கோட்டை கல்வெட்டு 4). சிற்றண்ண வாயிலில் பழைய கல்வெட்டுக்களில் ''தொழக்குன்றத்துக் கடவுளன் நீலன் - திருப்பரணன் - திட்டைச் சரணன் - திருச்சாத்தன் - ஸ்ரீ பூரண சந்திரன் - நியத்தக்கரன் பட்டக்காழி'' என்ற பெயர்கள் வருகின்றன. கடவுள் என்பது இங்கே முனிவரைக் குறிக்கும்.

**சமணமலே:** மதுரைச் சமணமலேயிலும் 10-11 நூற்ருண்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன. அங்கு வரும் பெயர்களில் சில கீழே வரக் காணலாம். ''குறண்டி

அஷ்டஉபவாசி பட்டாரகர்; அவர் மாணுக்கர் குண சேன தேவர்; குணசேனர் மாணுக்கர் கனகவீரப் பெரியடிகள். மேற்படி அட்ட உபவாசியின் மற்ருெரு மாணுக்கர் மகாநந்திப் பெரியார், குறண்டி கனகநந்திப் பட்டாரகராம் அபிநந்தன் பட்டாரகர், அவர் மாணுக்கர் அபிநந்தன பட்டாரகர், (மேற்படி) குணசேன தேவர் மாணுக்கர் வர்த்தமான பண்டிதர்; இப் பண்டிதரின் மாணவராகிய ஞானப்பாட்டனின் பெயரையே கொண்ட குணசேனப் பெரியடிகள். குணசேனதேவர் சட்டன் தெய்வபலதேவன்; அவரது மற்ருெரு சட்டன் அந்தலையான்; மற்ருெரு சட்டன் அரையங்காவிதி சங்க நம்பி, ஸ்ரீ அச்சணந்தி தாயார் குணவதி; ஆச்சான் பாலன்; கனகநந்தி ***(61 to 68 – 1910; 330 to 332 – 1908)*** என்ற பெயர்களைக் காண்க.

**கழுகுமலை:** கழுகுமலை பழைய சமணநிலையம். இங்குள்ள கல்வெட்டுக்களில் ''குணசாகரப்பட்டாரகர் (அவர் சீடர் பேரெயிற் குடிசாத்தன் தேவன்), திருக்கோட்டாற்று பாதமூலத்தோன், கன்மன் புட்பநந்தி, மலைகுளத்து ஸ்ரீவர்த்தமானப் பெருமாணுக்கர் ஸ்ரீநந்தி; திருக்கோட்டாற்று உத்தநந்திக்குருவடிகள், அவர் மாணுக்கர் சாந்திசேனப் பெரியார், திருநறுங்குன்றம் பலதேவக்குருவடிகள், அவர் மாணுக்கர் கனகவீர அடிகள், படிச்சமணபட்டாரகர், அவர் மாணுக்கர் பவணந்திப்பெரியார், திருமலையர் மொன் (முனி) பட்டாரகர், அவர் மாணுக்கர் தயாபாலப் பெரியார், புட்பநந்தி பட்டாரகர், அவர் மாணுக்கர் பெருனந்த பட்டாரகர், அரிட்டநேமிபட்டாரகர் (S.I.I. Vol. V. p. 121) திருக்கோட்டாற்று விமளசந்திரகுருவடிகள், அவர் மாணுக்கர் சாந்திசேன அடிகள்'' முதலான பல பெரியோர்களின் பெயரை அங்கே அறிகிருேம். கன்னட நாட்டில் சிரவணபெள்குளம் போலத் தமிழ் நாட்டில் கழுகுமலையும் மதுரை மலைகளும் சமணத்தின் உயிர்நிலையாக விளங்கின எனலாம்.

*பிற இடம்:* திண்டிவனத்து வேலூரில் ஜயசேனர் என்பாரும் (124 – 1919). தொண்டூரில் வச்சிரசிங்க இளம்பெருமா னடிகளும், (M. E. R. 1934–35 No. p. 83) வாழ்ந்தார் என்றும், திருமலையில் பரவாதிமல்லரும் பரவாதிமல்லரின் மாணாக்கரான அரிஷ்டநேமி ஆச்சாரியரும் வாழ்ந்தார் என்றும் அறிகிறோம். 10-ஆம் நூற்றாண்டைய கல்வெட்டு, கோயிலூரில் குறண்டி குணவீரபட்டாரகரைக் கூறும் (Nos. 98 & 100/1923). இராசராசன் காலத்தில் குணவரமா முனிவர் போளூர் தாலூகாவில் திருமலையில் கலிங்கு ஒன் றமைத்தாராம். முனிவரும் பட்டாரகரும் ஒருவரோ என ஆராயவேண்டும். சுந்தரபாண்டியன் காலத்தில் கனகசந்திர பண்டிதரும், அவர் மாணாக்கர் தன்மதேவ ஆச்சாரியாரும் விளங்கினர் (புதுக்கோட்டை 474). இராசேந்திரன் காலத்தில் காரிகை ஆசிரியர் அமிதசாகர ரைப் பற்றிக் கல்வெட்டில் அறிகிறோம். பின்னே விஜய நகர அரசர் காலத்தில் 14-ஆம் நூற்றாண்டில் திருப் பொருள் திருப்பருத்திக்குன்றத்தில் மேருமந்தர புராணம் பாடிய வாமன முனிவரும் அவர் மாணவர் பரவாதி மல்லரும் வாழ்ந்தனர் எனக் கல்வெட்டு கூறும்.

**பலரா, ஒருவரா?:** இங்கே கூறியவற்றில் ஒரே பெயர் பல கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றது. இவை ஒருவர் பெயரே ஆகலாம். ஒரே பெயர் கொண்டு பல காலத்து வாழ்ந்தவர்களு மாகலாம். நூலியற்றிய சமண ஆச்சாரியர்கள் பெயர்களையும்கொண்டு இதனைஆராய்ந்து முடிவுகட்டவேண்டும். எப்படி ஆனாலும் இவ்வளவும் கூறியமையால் சமணம் தமிழ்நாட்டில் பரவியிருந்தமை விளங்கும்.

## 2. தொல்காப்பியர் - சைனர்

தமிழில் உள்ள நூல்களில் மிகமிகப் பழையதாய் இன்று கிடைப்பது தொல்காப்பியமே யாம். இஃதோர் இலக்கண நூல். வியாகரணம் என்றால் சொல் ஆராய்ச்சியே ஆம். ஆனல், தொல்காப்பியர் எழுத்தினையும் சிட்சைகள் போல ஆராய்கின்றார். எழுத்து, சொல் என்பவற்றைப் பிறமொழி இலக்கண நூல்களைப் போல ஆராய்வதோடு செய்யுளின் இலக்கணத்தையும் செய்யுளின் உயிர்நிலையான மெய்ப்பாட்டினையும் (ரசம்) இறைச்சியினையும் (த்வனி), உள்ளுறையினையும், உவமையினையும் மரபினையும் (convention) விளக்கிச் செய்யுளில் வரத்தக்க பொருள்களையும் பழைய தமிழ் மரபின்படித் தொல்காப்பியம் ஆராய்ந்து கூறுகிறது. அகவுணர்ச்சியாகிய இன்பமும் புறவுணர்ச்சியாகிய அறமும் பொருளும் செய்யுளின் உட்கோள்களாக அமையும் என்பர் தொல்காப்பியர். இலக்கணக் குறியீடுகள் இங்குப் பாணினியில் போலப் பிரத்தியாகாரங்களாக அமையாது ஐந்திர இலக்கணத்தில் போலச் சொல்லின் முடிவில் பொருள் விளங்குவனவாக உள்ளன. ''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'' எனத் தொல்காப்பியத்தைப் பழம் புலவோர் புகழ்வோ ராயினர்.

**சைனர்**

*படிமை:* தொல்காப்பியரை ஒரு சிலர் சைனர் என்று கொள்ளுவர். ''படிமையோன்'' எனத் தொல் காப்பியத்தின் சிறப்புப் பாயிரம் தொல்காப்பியரைப் புகழ்கிறது. படிமை என்ற சொல் சமணர் வழக்கில் துறவிகளின் தவ ஒழுக்கத்தைக் குறிக்குமாம். ஸ்ரமணன் என்ற சொல் உடலைச் சிரமப்படுத்தும் தவத்தினருக்குப் பொதுவாகவும் பௌத்தத் துறவிகளுக்குச் சிறப்பாகவும் வடநாட்டில் வழங்கத் தமிழ்நாட்டில் சைனத் துறவி களையே குறிக்க வந்ததுபோலப் படிமையோன் என்ற இச்சொல்லும் சைனருக்கே சிறப்பாக வழங்கியதற்கு வேறு சான்றுகள் கிடைக்க வில்லை. தேவாரத்தில் தவ ஒழுக்கம், விரதம் என்ற பொருளில் படிமம் என்பது வழங்குவதனைத் தமிழ் அகராதி சுட்டுகிறது. அப் படிமை என்ற சொல்லைத் தொல்காப்பியரே விக்கிரகம் அல்லது திருமேனி என்ற பொருளில் பயன்படுத்துகிறார்.

படிமை என்பதற்கு ஸ்வரூபம் என்பதே எல்லா இடத்தும் பொருள் எனக் கொள்ளலாம். ஏனோர் படிமையும் என்பதில் ''படிமை'' துறவிகள் நோன்பினை அன்றி, அந்தணர் அரசர் அல்லாதார் இயல்பினைக் குறிப்ப தாகத் தொல்காப்பியரே பயன்படுத்துகிறார். பதிற்றுப் பத்து அரசனை ''நின்படிமையான்'' என ''இந்துமத அரசனின் நோன்பு அல்லது இயல்பினைக்'' குறிப்பதும் காண்க. இவ்வாறு பல எடுத்துக்காட்டுக்களைச் சமண ரல்லாத இந்துமதத்தினர் எடுத்துக்காட்டுவர். ஆதலி னால் படிமையோன் எனப் பனம்பாரனார் தொல்காப் பியரைப் புகழ்வது ஒன்று கொண்டே அவரைச் சமணர் என்பதற்கு இல்லை.

**ஆறறிவுயிர்:** இரண்டாவதாக, ஆறறிவுயிர்கள் என்ற பாகுபாடுபற்றித் தொல்காப்பியரைச் சமணர் என்பர் சிலர். உயிர்களை, உற்றறியும் புல் மர முதலிய ஓரறிவுயிர் என்றும், உடம்பால் உற்றறிவதோடு நாவால்

சுவையறியும் நத்தை இப்பி முதலியன ஈரறிவுயிர் என்றும், இந்த இரண்டறிவோடு மூக்கினாலும் மணமுணரும் மூன்றறிவுடைய எறும்பு முதலியன மூவறிவுயி ரென்றும், இந்த மூன்றோடு கண்ணாலும் உருவமறியும் நண்டு, தும்பி முதலியன நான்கறிவுயிரென்றும், இந்த நான்கறிவோடு செவியாலும் ஒலியுணரும் விலங்குகள் பறவைகள் முதலியன ஐயறிவுயி ரென்றும், ஐந்தறிவோடு மனத்தினால் உய்த்துணர்ந்து பகுத்தறியும் மக்கள் ஆறறிவுயி ரென்றும் தொல்காப்பியர் கூறுவது சமணர்கள் கூறும் பாகுபாட்டொடு ஒத்திருக்கின்றது. அதனால் தொல்காப்பியர் சமண ரென்று ஒரு சிலர் கருதுகின்றனர்.

*தமிழ்மரபு:* உயர்திணையென்றும் அஃறிணையென்றும் எழுந்த பழந்தமிழ்ப் பாகுபாடு ஆறறிவுடையவர்களை மட்டுமே உயர்திணை யென்றும், ஆறறிவில்லாத மனிதரையும் விலங்குகளையும் உயிரில்லாத பொருள்களோடு ஒருங்குவைத்து அஃறிணையென்றும் இழித்துரைப்பதனை உளங்கொண்டு, ஐயறிவுயிர்களையும் மன அறிவுடையன என்றும் மன அறிவு இல்லாதனவென்றும் இரண்டாகப் பிரிக்கும் சமணப் பாகுபாட்டோடு தமிழ் முறையினையும் ஒத்துவைத் தெண்ணி, அதனை மேலும் விளக்க ஆறு உயிர்வகையினையும் தொல்காப்பியர் விளக்குகின்றார் போலும். தமிழின் அடிப்படை மரபுகளைத் தொல்காப்பியர் மரபியலில் கூறுகின்றாரே யன்றித் தமது மதக் கொள்கையைப் பரப்புகின்றார் என்பதற் கில்லை. தம் மதம் கூறுவதா அங்குக் குறிக்கோள்? தமிழ் இலக்கணங் கூறும் நோக்க மொன்றே கொண்ட தொல்காப்பியரது மதத்தை அறிவது இதனால் அருமையாகிறது. அவர் வருணன் முதலியோரைக் கூறுவதால் வேதமதம் என்று முடிவு கூறமுடியுமா? ஆனால், மேலே கூறியதி லிருந்து சமணக் கொள்கையை அவர் அறிந்திருந்தார் என்பதும், அவர் காலத்தில் சமண மதம் தமிழ் நாட்டில் பரவியிருந்தது என்பதும் நன்கு விளங்கும்.

***இந்துமதப் பிரிவா:*** சமணர்கள், நன்னூலில் கூறுவது போல ஐயறிவுயிர்கள் வரை பாகுபாடு செய்கின்றனரே அன்றி ஆறு பிரிவாகச் செய்வதில்லை என்றும், ஐயறிவுயிர்களைச் சிந்திப்பன சிந்தியாதன என்று அவர்கள் பிரித்தாலும் ஆறென்ற பிரிவு அவர்கள் உடன்பட்டதன்று என்றும், ஐம்பொறிகள் போல மனத்தையும் தனியே ஆறுவது அறிகருவியாகக் கீதை முதலியன கொள்வது போல சைனர்கள் கொள்ளவில்லை என்றும், காமிகாகமம் போன்ற இந்து நூல்களும் இவ்வாறு ஆறு பிரிவாகக் கூறும் என்றும், இதனாலேயே பரிமேலழகர் முதலான இந்து சமய உரையாசிரியர்கள் ''பசும்புல் தலைகாண்பரிது'' என்ற இடத்து ஓரறிவுயிரும் காண்பரிது என உரை கூறுகின்றார்கள் என்றும், கலித்தொகை யுரையில் நச்சினார்க்கினியரும் இந்தப் பாகுபாட்டைத் தமக்குப் பொருந்தியது போலக் கூறி வருவார் என்றும் பலர் எடுத்துக் காட்டுகின்றனர். என்றாலும், ஐயறிவுயிர்களை சஞ்ஞி, அசஞ்ஞி என இரண்டாகப் பிரித்தலின் சமணர் அறியாத பிரிவன்று இது. சமணரும் மனத்தினை ஆறுவது பொறி என்று கூறாமற் போனாலும் ஒரு பிராணன் என்பர் (அஷ்டபதார்த்த சாரம்), என்றாலும் இதனைத் தமிழ் மரபென்றே கொள்ளுதல் வேண்டும். ஆண் பெண் இளமை என்ற பாகுபாட்டினைக் கூறிவரும் மரபியலில் ஆறுவகை உயிர்களைப் பற்றிக் கூறுவது பொருத்தமில்லாமையால் இப்பகுதி தொல்காப்பியர் எழுதியது தானா என ஐயுறுவாரும் உண்டு.

***வினையின் நீங்கல்:*** மரபியலில், முதல் நூல், வழிநூல் என்ற பாகுபாட்டினைத் தொல்காப்பியர் விளக்கும் பொழுது முதல் நூலாசிரியரை ''வினையின் நீங்கி விளங்கிய அறிவன்'' என்று கூறுகிறார். நீங்குதல் என்ற சொல்லின் வடிவத்தைக் கொண்டு முன்னே வினைக்கட்டு அல்லது கர்மபந்தம் இருந்து, பின் அதனின்றும் தவ முதலியவற்றால் நீங்கித் தூய அறிவாம் வால் அறிவு பெறும் அருகனையே இச்சொற்றொடர் குறிக்குமாதலின்

தொல்காப்பியர் சைனரே என்பதும் ஒரு சிலர் கொள்கை. சைன ரல்லாதார் ''வினையினீங்கி'' என்பதற்கு இயல் பாகவே கருமத்தினின்றும் நீங்கி அறிவு வடிவாக விளங்கு கிற கடவுளே இங்குக் கூறப் பெறுகிறுர் என்பர். இவ் வாறு கொள்வது வலிந்து பொருள் கொள்வதாகலாம். சமணக் கொள்கை பரவிய பின் பிற மதத்தினர் தங் கொள்கைகளை அம் மதக் கொள்கைக்கு ஏற்ப விளக்கி வருவதைத் தமிழ்நாட்டு வரலாற்றில் காண்கிறோம். எவ்வாறு கொண்டாலும் சமணக் கொள்கை பரவிய நிலை மையையே தொல்காப்பியம் விளக்குகிறது எனலாம். இங்கும் எல்லோரும் முதல் நூல் எனக் கொள்வதற்கு அன்றே அவர் இலக்கணம் கூறுகிறுர் எனல் வேண்டும். நூல்களைப்பற்றிக் கூறும் இப்பகுதி மரபியலில் பொருந்து மாறு இல்லை. ஆதலின் இதனை இடைச்செருகல் என் பாரும் உளர்.

**னகர இறுவாய்:** தமிழ் நெடுங்கணக்கு அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது. னகரத்தைத் தொல் காப்பியனுர் நெடுங்கணக்கின் முடிவில் வைத்ததற்கு என்ன காரணம் என உரையாசிரியர்கள் ஆராய்கின் றுர்கள். னகரம் ஆண்பால் ஈறு. திகம்பர சமண சமயத்தில் பெண்கள் நேரே வீடுபேறு அடைய முடியாது. தவம் செய்து பெண்பிறவி நீங்கி அடுத்த பிறவியில்தான் அவர்கள் ஆணுய்ப் பிறந்து வீட்டினை அடையமுடியும். மல்லி என்ற அம்மையார் பெண்பிறவியிலேயே தீர்த்தங் கரராஞர் என்று சுவேதாம்பர சைனர் கூற, அவ்வம்மை யார் பெண்பிறவியில் தவம்செய்து அடுத்த பிறவியில் மல்லிநாதர் என்ற ஆணுகப் பிறந்து வீடெய்தித் தீர்த் தங்கரராஞர் என்பார்கள் திகம்பர சைனர்கள். எனவே, ஆண்பால் ஈறுன னகரம் நெடுங்கணக்கின் முடிவில் அமைந்த நுட்பம் அது வீடு பேற்றுக்குரிய ஆண்பாலை உணர்த்தும் எழுத்தென்பதேயாம் என்பர் சமணர். இவ் வாறு இளம்பூரண ரென்ற உரையாசிரியர் மட்டுமேயன்றி வைதிக மதத்தைச் சேர்ந்தவரான நச்சினுர்க்கினியரும்

கூறுகின்றார். நச்சினார்க்கினியர் சமணராகச் சிலகால மிருந்தார் என்பதற்கு இக்குறிப்பே சான்றாகலாம். ஆனால், இதுகொண்டு தொல்காப்பியரைச் சமணரென்று முடிவு செய்வது பொருத்தமாகாது. நெடுங்கணக்கே சமணர் வைப்புமுறை என்று கூற முடியுமா? அதற்குச் சான்றுகள் இல்லை.

**மாத்திரை:** கைந்நொடியையும் கண்ணிமைத்தலையும் மாத்திரைக்கு அளவாகத் தொல்காப்பியர் கூறுகின்றார். பட்டஹளங்கர் என்ற சைனர் எழுதிய கன்னட இலக்கணத்தில் இப்படிக் கூறுவதற்குப் பழையதொரு வடமொழிப் பாடல் ஆதாரமாகக் காட்டப்பட்டுள்ளது. இந்தப் பாட்டை எழுதியவர் யாரென விளங்கவில்லை. சைன ஆசிரியர் சைனருடைய பாட்டைத்தான் பொதுநூலாகிய இலக்கணம் எழுதும்பொழுது எடுத்துக் காட்டுவர் என்பதற்கு இடம் இல்லை. மருத்துவரான வாக்படர் முதலியோரும் பழைய சிட்சைகளும் மாத்திரையைப் பற்றி ஆராய்கின்றமையால் பல துறையினர்களுக்கும் இது பொதுவானதோர் ஆராய்ச்சியாம். ஆதலின் இதனாலும் தொல்காப்பியர் சமணரென்று உறுதி கூறுவதற்கில்லை.

**பேரெண்கள்:** தாமரை, வெள்ளம், ஆம்பல் என்ற பேரெண்களைத் தொல்காப்பியர் தமது எழுத்ததிகாரத்தில் எடுத்துக்கூறி இலக்கணம் விதிக்கின்றார். தாமரை, வெள்ளம் என்பவை வடநூல்களில் வழங்கப்பெற்றாலும் குமுதமென்பது உமாஸ்வாதி இயற்றிய ஸ்வோபஜ்ஞ பாஷ்யத்தில் மட்டுமே காணப்படுகிறது. அவரோ சைனர் ஆதலின், தொல்காப்பியரும் சைன வழக்கைப் பின்பற்றியவ ராவார் என்பர் சிலர். தொல்காப்பியர் வடமொழி வழக்கிற்கோ, சைன பிராகிருத வழக்கிற்கோ கணித நூலுக்கோ இலக்கணம் கூற வரவில்லை. தமிழில் தம் நாளில் வழங்கிய செய்யுள் வழக்கிற்கும் உலக வழக்கிற்குமே இலக்கணம் கூறுகின்றாராதலின், இச்

சொற்கள் அவர் காலத்தில் தமிழில் மிகப் பயின்று வழங்கியன ஆதல் வேண்டும். சைனர்கள் தமிழில் எழுதத் தொடங்கிய காரணத்தால் இச்சொற்கள் தமிழில் வழங்கலாயின என்று கூறுவதற்கு இடமிருக்கலாம்.

***பண்ணத்தி:*** பண்ணத்தி என்ெருரு செய்யுள் வகையைத் தொல்காப்பியர் கூறுவது கொண்டு சைன பிராகிருத பண்ணத்தி நூல்களைத்தான் தொல்காப்பியர் குறிக்கின்ருர் என்று கூறுவர் சிலர். தமிழில் வழங்கிய நூல்களையே அவர் குறித்தார் ஆதல் வேண்டும். சைனர்கள் அத்தகைய நூல்களைத் தமிழிலும் அந்தப் பெயரோடேயே எழுதிப் பெருவழக்காக்கினர் என்று கூறுவதற்கு இடம் இருக்கலாம். அதுகொண்டு மட்டும் தொல்காப்பியரைச் சமணரென்று கூறுவதற் கில்லை. சைன வழக்கை அறிந்த உரையாசிரியர்களும் பண்ணத்தி என்பதற்கு இத்தகைய பொருள் கூறவில்லை. தொல்காப்பியரும் பண்ணத்தியைப் பிசியோடு (விடுகதை) ஒன்ருக்குகின்ருரே யன்றிச் சமணப் பண்ணக்கிக்குப் பொருந்துமாறு விளக்கவில்லை.

***தேவர்கள்:***

வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப

என்று கூறுவது சைன வழக்கென்றும், ஆதலின் இவ்வாறு கூறும் தொல்காப்பியர் சைனரென்றும் சிலர் கூறுவர். ஆனல், இங்கும் தமிழில் பரந்த செய்யுள் வழக்கைக் கூறுகின்ருரே யன்றி மதக் கொள்கைகளைக் கூறுகின்ருர் என்பதற் கில்லை. ஆனல், இங்கும் இலக்கண நூலில் எடுத்துக் கூறத்தக்க அளவு சமணக் கொள்கைகள் தமிழிலக்கிய வழக்கில் பரந்துவிட்டன எனலாம்.

***சைனர் அல்லரோ?:*** தெய்வச்சிலையார் ''இந்நூல் செய்தான் வைதிக முனிவர்'' எனத் தொல்காப்பியரை வைதிகராகக் கொள்வர் (காலம் உலகம் என்ற சூத்திர உரை).

தொல்காப்பியர் பஞ்ச பூதங்களில் ஒன்ருக ஆகாயத்தைக் கூறுவர்.

''நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்க முலக மாதலின்''
(மரபியல் 89)

என்பது காண்க.

''வளியென வரூஉம் பூதக்கிளவி'' (242)

எனப் பூதமென்ற சொல்லேயும் வழங்குகிருர். இதனுல் ஐம்பூதங்களே உடன்படும் கொள்கையரே தொல்காப்பியர் என்பர் சிலர். சைனர்கள் ஆகாயத்தை உடன்பட்டாலும் ஐம்பூதங்களில் ஒன்றென உடன்படுவதில்லே என அவர்கள் எடுத்துக் காட்டுகின்ருர்கள். ஐம்பூதங்களேக் கூறும் பாடல்களே உட்கொண்டு கூறுவதன்றி (புறம்-2) இலக்கண ஆசிரியர்கள் கொள்கையாகுமா இஃது என ஆராய்தல் வேண்டும். கொற்றவை நிலேயைத் தமிழ்ப் பாடல்கள் குறிக்கின்றன என்று கூறுவதால் மட்டும் ஒருவர் கொற்றவையை வழிபடுவார் ஆவாரா? ''காலமுலகம்'' என்ற சூத்திரத்தையும் ''மாயோன் மேய'' என்ற சூத்திரத்தையும் ''மேலோர் கீழோர்'' என்ற பாகுபாட்டினேயும் ''அந்தணர் மறை'' எனக் கூறுவதனேயும் எடுத்துக் காட்டித் தொல்காப்பியரை வேத மதத்தினர் என்பாரு முண்டு. இங்கும் தமிழ் வழக்கைக் கூறுவதன்றி ஒரு மதக் கொள்கையைத் தொல்காப்பியர் கூறவரவில்லே யென்பதனே எடுத்துக் காட்டுவதோடு வேத வழக்கும் தமிழில் தொல்காப்பியர் காலத்தில் மிகப்

பரவியிருந்தது என்பதனையும் உடன்படலாம். சமணர்களான நாற்கவிராசநம்பி முதலியோரும் தமிழ் வழக்கினை விளக்கும் தத்தம் நூல்களில் இவ்வாறே கூறுவதும் காண்க. சைனர்கள் சாதியினையும் தமக்கேற்ற புராணங்களையும் ஆகமமென அவர்கள் கூறும் மறையினையும் உடன்படுவதனை மறந்துவிடுத லாகாது. ''நில்லா வுலகம்'' என்பதனை, அழியும் உலகம் எனப் பொருள் கொண்டு ''மூவா முதலா உலகம்'' என்ற சைனக் கொள்கையோடு மாறுபடும் என்பர் சிலர். ஆனால், இதனையும் ஒப்புக்கொள்ள முடியாது. ''பல்லாற்றானும் நில்லா உலகம்'' என்று எடுத்துக் கூறியதனாலேயே, தொல்காப்பியர் கருத்து நன்கு விளங்கும். உலகம் என்பது, அங்கே செல்வம் யாக்கை இளமை முதலியவாக விளங்கும் உலக வாழ்வினையே குறிக்குமென்பது அடுத்த சூத்திரத்தில் அந் நில்லாமையை விளக்கிக் கூறுவதிலிருந்தும் தெளிவாகும். எனவே, இத்தகைய உலக நிலையாமையைக் கூறுவதன்றி ''உலகத்தை ஒருவர் படைப்பதும் இல்லை அழிப்பதும் இல்லை'' என்ற சைனக் கொள்கையை மறுப்பது அன்று.

*முடிபு:* எனவே, தொல்காப்பியர் சைன ரென்றோ சைனரல்ல ரென்றோ உறுதி கூறமுடியாது. பவணந்தி, நேமிநாதர், காரிகையாளர் முதலியோர் அருகக்கடவுள் வாழ்த்தாகப் பாடியிருப்பதுபோல் இவர் பாடாமையால் இவ்விடர்ப்பாடு எழுகிறது.

### தமிழ் இலக்கண வளர்ச்சியின் சிறப்பு:

பிறமொழிகளை அறிந்த சமணரும் பௌத்தரும் வேத வழக்கினரும் தமிழை ஆராய்ந்ததன் பயனாகத் தமிழிலக்கணம் வளர்ந்தது. ஒப்புமை வகையா லன்றோ ஆராய்ச்சி சிறக்கும்? ஆனால், தமிழின் நல்ல காலம் இவ்வாறு ஆராய்ந்தோர்கள் பிறமொழி இலக்கணங்களைத் தமிழில் புகுத்திவிடாது தமிழின் நரம்பறிந்து அதன் சிறப்பியல்புகளை விளக்கியுள்ளார்கள்.

**தத்துவ அடிப்படை:**

தொல்காப்பியர் காலத்தில் சங்க காலத்திற் போலத் தனிச் செய்யுள் நாடகப் பாத்திரங்களின் பேச்சுக்கள் போல அமைந்திருத்தல் வேண்டும். அகம், புறம் என்ற வேறுபாடு தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியின் அடிப்படையில் பாட்டாகப் பாடத் தொடங்கிய நிலையைக் குறிக்கின்றது. அனைவர்க்கும் அடிப்படையாக உள்ளூர விளங்கும் உயிர்ப் பண்பும் மேம்பாடும் விளங்கப் பாடுவது அகமாம். வெளிக்குத் தோன்றும் பேரும் ஊரும் கொண்ட தனிமகனின் இயல்பினைப் பாடுவது புறமாம். இந்த அடிப்படை வெளியானதும் சமண முதலான கொள்கைகள் பரந்ததன் பயனாகலாம்.

**செய்யுள்**

இலக்கியங்களை எல்லாம் செய்யுள் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. அவற்றில், இலக்கணம் போலச் சாத்திரம் அல்லது நூலென்று வழங்குவதன் பொது இயல்பினையும் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். அதில் வரும் சூத்திரங்கள் மலையினைக் கண்ணாடியின் நிழல் உணர்த்துவதுபோல் பெருங் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுவனவாம். பாட்டு வேறு, உரை வேறு; பத்தியம் கத்தியம் என்ற வேறுபாடே இதுவாம். பாட்டுக்களின் இடையிடையே உரைநடை அந்நாளில் வந்ததும் உண்டு. முழுதும் உரைநடையாக அமைந்தனவும் உண்டு. பஞ்ச தந்திரக் கதைகள் போல் பொருள் மரபில்லாப் பொய்ம் மொழியாக வருவனவும், குருவிப் பேச்சு முதலாகப் பொருளொடு புணர்ந்த நகைமொழியாக வருவனவும், உவமையாகவோ வேறுவகையாகவோ வரும் விடுகதைகளும் பழமொழிகளும் மந்திரங்களுமாக வருவனவும் உரைநடை நூல்களாக வழங்கின. சில சொற்களால் முடிந்து, மிக நீண்டு தோன்றாது, பதினெண் கீழ்க்கணக்குப்

போல் அமைந்த நூல்களும், அவ்வாறே தொகை நூல் களாய் யாப்பின் விரிவெல்லாம் - அழகெலாம் - தோன்ற அமைந்தவையும் உரையும் பாட்டுமாகப் பழங்கதையைக் கூறுவனவும், சிறந்த கருத்தினைப் பழமை விளங்க நீளத் தொடர்ந்து கூறுவனவும் புதிய கருத்துக்களையும் கதைகளையும் கொண்டு சேரிமொழிகளும் அல்லது திசைமொழிகளும் நிரம்ப இயைந்து வருவனவும், இசைப் பாட்டுக்களாய் அமைந்தவையும் அக்காலத்தில் வழங்கின. எனவே, குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும்போது பயன் படும் கதைகளும் விடுகதைகளும் அறத்தினை வற்புறுத்த வரும் பழமொழிகளும் கீழ்க்கணக்கு நூல் போன்றவையும் புராணக் கதைகளும் அந்நாளில் வழங்கின எனலாம். இவற்றை எல்லாம் பார்க்கும்போது இங்கும் சமணர் முதலியோரது ஆக்கத்தின் அறிகுறியினைக் காணலாம்.

# 3. தொல்காப்பியர் - காலம்

**சமணமும், தொல்காப்பியர் காலமும் :**

தொல்காப்பியர் சைன ரென்று உறுதி கூற முடியாமற் போனுலும் அவர் நூல் கொண்டு தமிழ் வழக்கில் சமணக் கொள்கைகள் பரவியதனைத் தெளிவாக அறியலாம். சமணர்கள் உணவும் மருந்தும் புகலிடமும் கல்வியும் எல்லோர்க்கும் உதவுதலையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தமையாலும், அவர்களது கடும் துறவின் உண்மை நயத்தாலும் சித்தசேன திவாகரர், விருத்தவாதி முனிவர் என்ற இருவர் வரலாற்றின்படி, தம் சிறந்த கொள்கைகளை அவ்வந்நாட்டு மொழிகளிலேயே விளக்கிக் கூறிப் பொதுமக்களோடு தொடர்பு கொள்ளும் குறிக்கோளாலும் சமண மதம் தமிழ் நாட்டில் பரவியது.

**காலம் :**

**விதிகள் வழக்கொழிந்தன :** தொல்காப்பியர் காலம் என்ன? தொல்காப்பியருடைய விதிகளில் பல சங்க காலத்திலேயே வழக்கொழிந்து வீழ்ந்தன. உவம உருபுகளினிடையே அவர் காணும் வரையறை, மரபியலில் அவர் கூறும் சில சிறப்பு வழக்குகள், வியங்கோள் படர்க்கையில் அன்றி வாராதென்று அவர் கூறுதல், சகரம் அகரத்தோடு மொழி முதலாகாது என்னும் விதி,

செல், வா என்ற பகுதிகளின் சிறப்பு வழக்கு என்ற இவை சங்க நூல்களில் விதியாக அமையாமையை உரையாசிரியர்களே எடுத்துக் காட்டுகிறுர்கள்.

**ஓரை:** ஓரை என்ற சொல் கிரேக்கரிடமிருந்து தமிழில் வந்தது என்று கொண்டாலும் அச்சொல் பிற மொழிகளில் புகுவதற்கு முன்னரே மேல் நாட்டோடு கடல் வழியே மிகப் பழந்தொடர்பு கொண்டு விளங்கிய தமிழ்மொழியில் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே புகுந்திருக்கலாம்.

**கள் என்ற விகுதி: கள்** என்ற விகுதி பிற்காலத்தது என்பர் சிலர். ஆனுல், இவ்விகுதி **க** என்றும் **ள** என்றும் இரண்டாகவும் ஒன்ருகவும் திராவிடமொழிகளில் எல்லாம் வழங்கக் காண்கிறேம். மாக்கள், மக்கள் முதலிய சொற்களின் பழைய வழக்கிலும் இந்த விகுதி தலைகாட்டியுள்ளதா என ஆராய்தல் வேண்டும். முற்காலத்தில் பேச்சு வழக்கில் பரவியது ஒன்றுதான் பிற்காலத்தில் இலக்கிய வழக்கில் புகுவதற்கு வழியுண்டு. ஒருசில ஆசிரியர்கள் பிறருக்கு முன்னர் அதனைப் பயன் படுத்தலோ, எடுத்துக்காட்டலோ உண்டு. எனவே, தொல்காப்பியர் சங்ககாலமென்று கூறப்பெறும் கி. பி. முதல் இரண்டு நூற்ருண்டுகளுக்கும் முந்தி இருந்தவர் என்று கொள்வர் பலர்.

**ஐந்திரம்:** ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனக் கூறப்பெறுவதால் ஐந்திர இலக்கணம் வழங்கிய காலத்திற்குப் பிற்பட்டவரே தொல்காப்பியர் என்பர். இவ்விலக்கணநெறி பாணினிக்கு முற்பட்டதாயினும் ஐந்திரமென்ற வழக்காறு, பாணினி நூல் எழுந்தபின் அதனின்றும் முன்னைய நெறியைப் பிரித்தறிவதற்காக எழுந்ததெனலாம். ஐந்திரம் என்பதனைச் சமணரல்லார் போற்றியதனை ''இந்திரத்தை இனிதாக ஈந்தார் போலும்'' எனச் சமணரல்லாத அப்பர் பாடுவதிலிருந்

தும் அறியலாம். ஆதலால், சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் இகழ்ந்தது போல முதலில் சமணர்களால் இகழப்பட்டுப் பின் மகாவீரரது பரமாகமத்து உள்ள 'சிநேந்திரன் நெறி' என சைனர்கள் வழியே பெருவழக்காகப் பரவியது என்பர். இதனுல் இது மகாவீரர் காலத்துக்கு முந்தியது அன்று எனலாம்

**நால்வகைச் சொற்கள்:** யாஸ்கர் நாமம், ஆக்யாதம், உபவர்க்கம், நிபாதம் என்று கூறும் சொல் வகையினேயே பெயர், வினே, இடை, உரி எனத் தொல்காப்பியர் கூறுகிருர் என்பது சிலர் கொள்கை. இடைச்சொல்லும் உரிச்சொல்லுமே உபசர்க்கமும் நிபாதமும் ஆம் எனக் கொள்ளுதற்கு இடமே இல்லே.

**சொல்:** ''சுப் திங் அந்தம் பதம்'' எனப் பாணினி கூறுவதைத்தான் ''பெயர் வினே'' எனத் தொல்காப்பியர் மொழிபெயர்த்துக் கூறுகின்ருர் என்பர் சிலர். அவ்வாறு கொள்வதற்கு மில்லே. உலகெங்கும் வழங்குவதன்ருே இப் பாகுபாடு?

**எழுத்தின் பிறப்பு:** ''உந்தி முதலா' என வரும் தொல்காப்பியச் சூத்திரம் பாணினி சிட்சையையே முழுதும் அடியொற்றியது என்பர் சிலர். இவ்வாறு கூறுவதற்கும் இல்லே. பாணினி சிட்சையும் பாணினி எழுதியதன்று என்று கொள்ளுவது முண்டு. இலக்கண ஆராய்ச்சி இந்திய நாடு முழுவதும் எங்கும் பரந்து நடந்த காலத்தில் பற்பல கருத்துக்கள் எழுந்து பெருவழக்காயின. அந்த நூல்கள் முழுதும் இப்போது நமக்குக் கிடைக்கவில்லே. கிடைத்த நூல்களேக் கொண்டு அவ்வழக்காறுகளின் காலத்தின் கீழெல்லேகளேக் குறிக்க முடியுமே யன்றி மேலெல்லேயைக் குறிப்பதற் கில்லே.

***பதஞ்சலி :***

(அ) **தொகைப் பொருள்:** ''அவைதாம் முன்மொழி நிலையலும்'' என வரும் சூத்திரம் பதஞ்சலி கூறியதனை மொழிபெயர்த்ததே என்பர் சிலர். மொழிபெயர்ப் பாஞல் பதஞ்சலி கூறிய முறையில் அமையாது வேறு வகையில் தொல்காப்பியம் ஏன் அமைந்தது என்பது விளங்கவில்லை. வைப்பு முறையிலும் சிறப்புப் பொருள் காண்பதே பதஞ்சலி மரபினர் வழக்கு என்பதனை இங்கு மனத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும். பதஞ்சலி காலத்துக்கும் முற்பட்டது அன்றிப் பிற்பட்டதாகாது இக்கொள்கை என்பதொன்றே இங்குக் கூறக்கூடும்.

(ஆ) **இலக்கணம்:** இலக்கண மென்பது வியாகரணம் என்ற பொருளில் தமிழில் பெருவழக்காக வழங்குகிறது. இந்த வழக்கு இந்திய நாடு முழுதும் ஒரு காலத்தே வழங்கியதாதல் வேண்டும். பதஞ்சலி இரண்டோரிடத்தே இதனைக் குறித்தலால் இந்த வழக்கு அவர் காலத்துக்கும் முந்தியதாதல் வேண்டும். ''வரருசி'' என்ற காத்தியாயனரும் ''லக்ஷ்ய லக்ஷணே வியாகரண'' எனக் கூறுவதால் அவருக்கும் முன்னையதாதல் வேண்டும். அவர் காலத்தில் பொருள் விளங்காமையால் அன்றோ இலக்கணம் என்றால் வியாகரணம் என்று பொருள் கூறுகின்றார். இவ்வளவும் கூறியதால் தொல்காப்பியச் சூத்திரங்கள் பதஞ்சலிக்கு முற்பட்ட கொள்கைகளைக் கூறுவன என்று கொள்வதன்றிப் பிற்பட்டன என்று ஒருதலையாக எவ்வாறு கூறமுடியும்?

***மனு – பரதர் – கவுடல்யர் :***

(அ) பொது: மனுஸ்மிருதி, கவுடல்ய அர்த்த சாஸ்திரம், பரதரது நாட்டிய சாஸ்திரம் என்ற இவற்றினெதிரொலிகள் தொல்காப்பியத்தில் உள்ளனவாம். இந்த நூல்கள் பழங்காலத்திலிருந்து வளர்ந்துவந்து

இப்போதிருக்கிற நிலையில் கி. பி. இரண்டாம் மூன்றும் நான்காம் நூற்றுண்டுகளுக்கு முன்னரே முறையே இப்போதுள்ள வடிவில் தோன்றலாயின எனலாம். இந்த நூல்கள் இன்று தோன்றும் நிலையில் இந்தக் காலவரையறை ஏற்புடையதாகலாம். ஆனால், இவற்றில் வரும் ஒவ்வொரு கருத்தும் இந்தக் கீழெல்லைக்கு முந்தியது அன்று என்று கூறுவதனை இந்நூல்களின் வளர்ச்சியினையறிந்த எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்.

(ஆ) **சிறப்பு :** ''ஆங்கவை ஒருபாலாக'' என வரும் தொல்காப்பியச் சூத்திரம், நகை முதலான மெய்ப்பாடுகளை 32 வகை செய்ததற்கு இணங்க, அதற்கு எதிரே வேறுவகை மெய்ப்பாட்டுக் குறிப்புக்களையும் 32 என்றே கூறுவர். இங்கு வரும் மெய்ப்பாட்டுக் குறிப்புக்களை வடமொழியார் வியபிசாரி பாவம் என்பர். பரதரோ இந்த வியபிசாரி பாவங்கள் முப்பத்துமூன்றெனத் தொகையிட்டுக் கூறுவர். காவியப் பிரகாசமும் 33 என்றே கூறுவதால் இவ் வடமொழி வழக்கு தொல்காப்பியர் வழக்கினும் ஒருவகையில் வேறுபட்டதே எனலாம். எட்டு மெய்ப்பாடுகளின் பிறப்பினைக் கூறும்பொழுதும் வேறுபாடுகள் காண்கிறோம். இவ் வேற்றுமைக்கு உவகை என்பதன் விளக்கமொன்றே சிறந்த சான்றும். ''வேட்கை ஒருதலையுள்ளுதல்'' எனத் தசாவஸ்தையைக் கூறுமிடத்தும் தொல்காப்பியம் ஒன்பதே கூறுதலின் சிறிது வேறுபாடுண்டு. பரதர்க்கும் தொல்காப்பியர்க்கும் முன் நிகழ்ந்ததோர் ஆராய்ச்சியின் வெவ்வேறு வளர்ச்சிகளே இவ்விருவர் நூல்களிலும் தோன்றுகின்றன எனலாம்.

(இ) **பரதரும் தமிழும் :** பரத நாட்டிய சாஸ்திரம், ''சப்தபாஷைகள்'' (ஏழு மொழிகள்) என்று சிறப்பிக்கும் மொழிகளில் ''தாக்ஷிணாத்யா'' என்ற தென்மொழியையும் உள்ளடக்கிக் கூறுகிறது. இது தமிழைக் குறிக்கும் எனலாம். அப்படியானால், நாட்டிய தர்மி (நாடக வழக்கு), லோக தர்மி (உலக வழக்கு), மெய்ப்பாடு, பண்,

அபிநயம் முதலியவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகள், பரத சாத்திரம் இன்றுள்ள வடிவில் தோன்றுவதற்கு முன்னமே தமிழ் நாட்டிலும் நடந்தன ஆதல் வேண்டும். எனவே, தொல்காப்பியர் தமிழ் ஆராய்ச்சியின் மரபினையே பின் பற்றுகின்றார் எனலாம்.

(ஈ) **தமிழாராய்ச்சியின் காலம்:** பல இந்திய ஆராய்ச்சிகளின் பழைய முடிபுகளை வடமொழி நூலோர் மறந்துபோக, அவை பழைய தமிழ் வழக்கில் நின்று நிலவக் காண்கிறோம். இலக்கணம் என்பதன் பழம் பொருளை முன்னரே சுட்டினோம். லக்ஷணமென்று பரதர் கூறுவது பின்னுளில் விளக்கப்பெறும் சில அணிகளில் முடியும். தொல்காப்பியரோ இலக்கணமென்பதை வியா கரணம் என்ற பழைய பொருளிலேயே வழங்குகிறார். செய்யுள் என்ற சொல்லின் மொழிபெயர்ப்போ என்று ஐயப்படத் தக்கது க்ரியா என்ற வடசொல். க்ரியா என்ற இந்தப் பெயர் மிகப் பழைய வழக்கில் லலிதாவிஸ்தாரம் முதலிய நூல்களில் செய்யுட்குப் பெயராக வழங்கக் காண்கிறோம். எனவே, ''அலங்காரம் க்ரிய விதி'' (அணிநூல் என்பது செய்யுள் என்ற இலக்கியம் அமைக் கும் விதியே) என அங்கே பேசப்படுகிறது. வடமொழி யாரின் பழைய மரபினை அறிவதற்கும் தொல்காப்பியம் உதவும். ஆனந்தவர்த்தனருக்கு முன் எழுந்த தொனி ஆராய்ச்சி வடமொழியில் நமக்குக் கிடைக்கவில்லை; ஆனால், தொனியைப் பற்றிய பழைய ஆராய்ச்சிக் குறிப் புக்களும், இறைச்சி, உள்ளுறை என்ற பகுதிகளில் தொல் காப்பியத்தே காணலாம்.

(உ) **தனிக் கொள்கைகளின் காலம்:** வடமொழி நூல்களின் காலத்தை வரையறை செய்தலோடு அவற் றில் வரும் ஒவ்வொரு கொள்கையின் காலத்தையும் வரையறுத்தாலன்றித் தொல்காப்பியக் கொள்கைகளின் காலத்தை வடமொழியோடு ஒட்டி வரையறுக்க முடி யாது. இவ்வளவும் கூறியமையால் தொல்காப்பியம்,

கி. பி. இரண்டாம் நூற்றுண்டை யொட்டியன என வழங்கும் சங்க நூல்களுக்கும் முந்திய நூலென முடிவு கட்டலாம். கடைச் சங்கத்திற்கு முன் கடல்கோள் ஒன்று நிகழ்ந்ததாகக் கதையொன்று வழங்குகிறது. இந்தக் கடல்கோளே மகாவம்சத்தில் கி. மு. 145-ல் நிகழ்ந்ததாகக் கூறப்பெறும் என்பர்; அப்படியானுல், குமரியாறு கடல் கொள்ளப்பட்டதற்கு முன்னரே நிலந் தரு திருவிற் பாண்டியன் புலப்படுத்திய தொல்காப்பியம் இதற்கு முன்னரே தோன்றியதாதல் வேண்டும் என் பாரும் உளர்.

# 4 சங்க நூல்கள்

**சங்கங்கள் :**

தொல்காப்பியம் பழைய இலக்கணமானல், தமிழில் பழைய இலக்கியம் சங்க நூல்கள் என்பவையே ஆம். இவை எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்ற தொகை நூல்களாகும். இவை தனிப்பாடல்களின் தொகுப்பே ஆம். சங்கமாகத் தமிழ்ப் புலவர்கள் கூடித் தமிழாராய்ந்து பாடினர்களாம். மூன்று சங்கங்கள் இருந்தனவாம். முதலாம் சங்கம் இந்தியப் பெருங்கடலில் இருந்த தென் மதுரையில் இருந்ததாம். வான்மீகி புனைந்துரைக்கும் கபாடத்தோடு விளங்கியதாகிய நகரமே இரண்டாம் சங்கம் வீற்றிருந்த கபாடபுரமாம். இதுவும் கடலால் அழிந்தபோது மூன்றும் சங்கம் இப்போதுள்ள மதுரையில் விளங்கியதாம். கடைச் சங்கம் நீங்கலானவை புராணக் கதைகளின் காலத்தவை எனலாம். ஆதலின், அவற்றைப்பற்றி ஒன்றும் கூறுவதற்கு இல்லை. தொல்காப்பியம் இடைச்சங்க காலத்தது என்பது கர்ணபரம்பரை. நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில் அதங்கோட்டாசான் தலைமையில் அரங்கேறியதாம் இது. தொல்காப்பியர், அகத்தியரது மாணக்கர் என்பர். ஆனல், தொல்காப்பியத்திற்கு முந்தியது என்று வரையறுத்துக் கூறும் வகையில் அகத்தியர் பா என ஒன்றும் கிட்ட இல்லை. இன்று கிடைக்கும் சங்கப் பாக்கள் பெரும்பான்மையும் கடைச்சங்க காலத்தன. ஒரு சில முற்சங்கத்தின என்று சிலர் கூறினலும் எல்லாரும் ஒப்புவ தில்லை.

***சங்கத்தில் சமணம்:***

***பொது:*** சங்கப் பாக்களிலே சமணக் கொள்கையின் எதிரொலிகளைக் கேட்கலாம். ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்ற பாவும் அனைவரையும் ஒரு கண்ணுகக் கொண்டு, ஊழினை நம்பிப் பிறர்க்கென வாழும் தொண்டின் சிறப்பினைக் கூறும். ''உண்டாலம்ம'' என்ற பாடலும் எல்லா மதத்தினருக்கும் பொதுவானவை எனக் கூறத் தக்கனவே ஆயினும் சமணப் பாடல்கள் என்பதற்கும் உரியனவே ஆம்.

***உலோச்சனர்:*** உலோச்சு என்பது சமணர் துறவிகளாகும்போது மயிர் களையும் கடியதொரு நோன்பினைக் குறிப்பதாகும். அதனைப் பாடியதாலோ அந்நோன்பினை மேற்கொண்டதாலோ சங்ககாலப் புலவர் ஒருவர் உலோச்சனர் எனப் பெயர்பெறுகின்றார். இவர் பாடியனவாக 35 செய்யுட்கள் இப்பொழுது கிடைக்கின்றன. இவர் பாடல்கள் சமணர்கள் உலகத் துன்பத்தினை வற்புறுத்துவது போல அக ஒழுக்கத்தின் துன்ப நிலையாம் நெய்தலையே பாடுவனவாக அமைந்துள்ளன.

***நிகண்டனர்:*** சமணக் கடவுள் கந்தமற்றவர்—பற்றற்றவர், உடையுமற்றவர் என்ற பொருளில் நிர்கந்தர் எனப் பெயர் பெறுவர். இச்சொல் நிகண்டர் எனப் பிராக்ருதச் சிதைவாக வரும். சங்கப் புலவர்களில் நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனர் என ஒருவர் வருகிறார். அவர் பாடிய பாடலொன்றும் நற்றிணையில் நெய்தல் துன்பத்தைப் பாடுவதாக வந்துள்ளது. ''கலைக்கோட்டுத்தண்டு'' என்றொரு நூல் இவர் எழுதினரென்று பின்னைய உரையாசிரியர்கள் கூறுகின்றார்கள். அஃது ஒரு நிகண்டு நூலென்றும் சிலர் கருதுகின்றனர். இவர் சமணரென்பதைக் குறிக்கவே நிகண்டன் என்ற அடையோடு இவர் வழங்கப் பெறுகிறார். அப்படியாயின் இவர் உடையின்றி வாழ்ந்த திகம்பர சைனராவர். நிகண்டு

என்பதற்கு வடமொழியில் அகராதி என்ற பொருளுண்டு. என்றாலும், தமிழில் இவர் எழுதிய நூலுக்கு இவர் பெயரை ஒட்டி நிகண்டு என்ற பெயர் வழங்கியதாகப் பலர் கருதுகின்றனர். இலக்கணமும் நிகண்டும் எழுதிச் சமணர் மொழியை வளர்த்தமை பிற இந்திய மொழி வரலாற்றிலும் காண்கிறோம்.

**சங்க காலம்:**

***பல்லவர்க்கு முன் :*** சங்க காலம் பொதுவாகப் பல்லவர் காலத்துக்கு முந்தியது எனலாம். கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் இடையில் பல்லவர்கள் காஞ்சியோடு தொடர்பு கொண்டனர்.

***பாடலி அழிவதற்கு முன் :*** கி. பி. நான்காம் நூற்றாண்டிற்குப் பின் பாடலிபுரம் அழிந்ததெனக் கூறுவர் ஆராய்ச்சியாளர். பாடலிபுரத்தின் செல்வத்தினையும் நந்தர்கள் அங்குப் புதைத்து வைத்த நிதியத்தையும் அந்நகரம் சோணை நதிக்கரையில் இருப்பதனையும் சங்கப் பாடல்கள் (அகம் 205, குறுந்தொகை 75 முதலியன) கூறுதலின் சங்க காலம் அவ் அழிவுக்கும் முந்தியதாகல் வேண்டும்.

***யவனர் காலம் :*** கிரேக்க ரோமர்கள் கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டைப் பற்றி எழுதியிருப்பன சங்க காலத்துத் தமிழ்நாட்டு வர்ணனையோடு ஒத்திருத்தலையும் குறிப்பிடுதல் வேண்டும்.

***கயவாகு :*** இலங்கைக் கயவாகு என்ற அரசன் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டிய பொழுது வந்திருந்தான் எனச் சிலப்பதிகாரம் கூறும். சிலப்பதிகாரம் அந்தக் காலத்து நூலன்று எனச் சிலர் கொள்ளினும் அது கூறுவது ஒரு பழைய மரபே எனக் கொண்டு ஆராயவேண்டுதலின், கயவாகு கி. பி. இரண்

டாம் நூற்றுண்டில் வாழ்ந்தவனுதலின் செங்குட்டுவனும் அக்காலத்தவனே ஆம். சங்ககாலம் அதற்குப் பிந்திய தாகாது.

**திரமிள சங்கம்:**

பௌத்த சங்கம், சமண சங்கம் என்பவை அவ்வம் மதத் துறவிகளின் கூட்டத்தைக் குறிப்பனவாம். தமிழ்ச் சங்கம் என்ற வழக்காறும் இதனை யொட்டி எழுந்த தாகலாம். ஆனுல், தமிழ்ச் சங்கத்தையும் மேலே கூறிய சமயச் சங்கங்களையும் ஒன்றெனை மயங்குதல் ஆகாது. திராவிட சங்கம் ஒன்று கன்னட நாட்டுக் கல்வெட்டில் கேட்கப்படுகிறது (E. Car. Vol. V Hassan Tq. 131. Epecarn Vol. IV Gundlowpet Tq. No. 27 Page 40.). திரமிள சங்கம் என்று அதன் பெயர் அங்கே குறிக்கப்பெற்றுள்ளது. தர்சனசாரம் என்ற சைனநூல் திராவிட சங்கத்தைக் குறிப்பிடுகின்றது. இதனை ஏற் படுத்தினவர் வச்ரநந்தி என்றும், அவ்வாறு ஏற்படுத்திய காலம் கி. பி. 470 என்றும் அந்நூலாசிரியராம் தேவ சேனர் கூறுகின்ருர். இந்தத் திராவிட சங்கம் பழைய தமிழ்ச் சங்க மன்று. இந்தச் சமண சங்கம் தமிழை வளர்த்ததால் தமிழ்ச் சங்கம் என்றும் கூறத் தக்கதே யாம்.

# 5. திருக்குறள் - காலம்

**வெண்பாக் காலம்:**

தேவாரம் தோன்றிய ஏழாம் நூற்றுண்டிற்குள் சமணமதம் தமிழ்நாட்டில் வேர்கொண்டு எங்கும் பரந்து தழைத்து விளங்கியது எனலாம். அந்த வளர்ச்சிக் காலத்தைச் சிறிது நோக்குதல் வேண்டும். அகவற் பாக்களாக அமைந்த சங்கப் பாடல்களின் ஓசை நயம் உபதேசங் கூறும் சைனர் போக்கிற்கு முழுவதும் ஒத்துப் போவ தன்று. அதற்கு ஒத்தது செப்ப லோசையோடு வரும் வெண்பாவே யாம். சங்க நூல்களிலே இடை யிடையே இந்த ஓசை வந்த தென்ருலும் முழுநூலும் இந்த ஒசையில் வரும் வழக்கம் சங்க காலத்தின் முடிவிலோ சங்க காலத்தை அடுத்தோ தேவாரம் ஓங்கிய காலம் வரை செழித்தோங்கிய தெனலாம்.

**குறளும் சங்க நூலும்:**

திருக்குறள் சங்க காலத்திலேயோ சங்க காலத்தை ஒட்டியோ இந்தப் பெரு மாற்றத்திற்கு வித்திட்ட தென லாம். சங்க நூல்களில் திருவள்ளுவர் கருத்துக்கள் விளங்கக் காண்கிறோம். ''செய்தி கொன்ருேர்க்கு உய்தி இல்லென'' என்ற புறப்பாட்டு, திருக்குறளின் ''உய் வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' என்பதன் விளக் கம் என்றும், அறமென்பது திருக்குறளே என்றும் கூறு

வோரும் உண்டு. ''நாடாது நட்டலிற் கேடில்லை நட்ட பின் வீடில்லை நட்பாள்பவர்க்கு'' என்ற குறளேயே கபிலர் ''பெரியோர் நாடி நட்பினல்லது நட்டு நாடார் தம் ஒட்டியோர் திறத்தே'' என்ற கூற்றுகவும், ''நீரின் றமையா துலகெனின்'' என்ற குறட்கருத்தை ''நீரின் றமையா உலகம் போல'' என்ற உவமையாகவும், ''பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்'' என்ற குறளேயே மற்ெருரு சங்கப்புலவர் ''முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண் பர் நனி நாகரிகர்'' என்றும் ''ஈன்ற பொழுதிற் பெரிது வக்கும்'' என்ற குறளின் கருத்தையே நச்செள்ளேயார் ''ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே'' என்றும் பாடி யுள்ளனர் என்றும் கூறி, இவைபோல இன்னும் பலவும் சங்கநூலிற் பழகிய அறிஞர்கள் எடுத்துக் காட்டுவார்கள். இதனுல், திருக்குறளால் சங்க மழிந்தது என்று கொள் வதற் கில்லே.

**திருவள்ளுவமாலே:**

திருவள்ளுவமாலே சங்கப் புலவரெல்லாம் திருக் குறளேப் புகழ்ந்த பாக்களின் கோவை என்பது கர்ண பரம்பரை. ஆனுல், இந்த வரலாற்றை நம்புவார் மிக மிகச் சிலரே யாவர். எனினும் ஒன்று கூறலாம். பன்னி ரண்டாம் நூற்ருண்டில் வாழ்ந்தவர் ஒட்டக்கூத்தர். தமிழ் நாவலர் சரிதையின்படி அவர்க்குப் பாட்டோலே பிடித்தெழுதிய நேமிநாதரும் அக்காலத்தவரே ஆம். அவர் எழுதிய நேமிநாதத்துக்கு அவர் காலத்தேயே எழுந்தது என்று கருதப்படும் உரையில் திருவள்ளுவ மாலேப் பாடலொன்று எடுத்துக்காட்டப்பட் டுள்ளது. திருவள்ளுவமாலேயில் இறைவன் பாடியதாக அமைந்த பாட்டினேப் பற்றிக் கல்லாடம் என்ற நூலும் கூறுகிறது. பரிமேலழகர் இக்கல்லாடத்தை எடுத்தாளுதலால் அவர் வாழ்ந்ததாகக் கருதப்பெறும் பதின்மூன்ரும் நூற்ருண்

டிற்கும் இந்தக் கல்லாடம் முந்திய தெனலாம். கல்லாடம் பட்டினத்தார் நடைபோன்று இருத்தலின் மிக முந்தியது என்பாரு முளர். எவ்வாருயினும் திருவள்ளுவ மாலை வரலாறு பன்னிரண்டாம் நூற்ருண்டுக்கு முந்திய தென்பதில் ஐயம் இல்லை. சங்க காலத்தைப் பற்றிய புராண வரலாறுகள் உருக்கொண்டபோது இந் நூல் எழுந்த தாகலாம். சங்க காலத்தினைப் பற்றிய புராணக் கதைகளில் தருமிக்குப் பொற்கிழி யளித்ததும் ஒன்று. அதனைப் பாடும் திருநாவுக்கரசர் வாழ்ந்த 7-ஆம் நூற்ருண்டிலேயே இக்கதைகள் உருப்பெற்றுவிட்டன எனலாம். பாண்டியர்களது பழைய கல்வெட்டும் இறையனூர் அகப்பொருள் உரையும் இதனையே வற்புறுத்துகின்றன.

**புது வழக்கா!?**

சங்க நூல்களென எல்லோரும் ஒப்புக்கொள்ளும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற இவற்றின் நடைக்கும் திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய நூல்களின் நடைக்கும் ஒரு சில சொற்களின் வழக்காற்றில் வேற்றுமை உண்டெனச் சில அறிஞர்கள் இப்போது காட்டி வருகின்ருர்கள். கலித்தொகையும் பரிபாடலும் கூடச் சங்க நூல்களென எல்லாராலும் கொள்ளப்பெற்ருலும் இந்த வேற்று நடையைக் கைப்பற்றுவதாகத் தோன்றுகின்றன. பரிபாடலும் கலித்தொகையும் கந்தர்வமார்க்கம் அல்லது செந்துறைமார்க்கம் எனும் இசைவழியைப் பின்பற்றுவன. சிலப்பதிகாரமும் இதனேடு வெண்துறை மார்க்கமெனும் நாடக வழியையும் பின்பற்றுவது. ஆதலால், இல்லது இனியது நல்லது எனப் புலவரால் நாட்டப்பட்ட செய்யுள் வழக்கினை மட்டும் பின்பற்ருது எல்லோரும் அறிந்துகொள்ளும் வழியில் பேச்சு வழக்கினையும் பின்பற்றுவது இயல்பேயாம். திருவள்ளுவரும் தம் நூலைப் புது நூலாக எல்லோரும் ஓதி உணர எழுதினுராகலின் அவரும் செய்யுள் வழக்கினை மட்டும் மேற்கொள்ளாமல் பேச்சு வழக்கினையும் பின்பற்றிச் செல்லுதல் முறையேயாம்.

சொற்களின் புதிய வடிவமென்று இவர்கள் காட்டுவன மரூஉ வழக்காய்ப் பேச்சில் பலகாலம் வழங்கியனவேயாதல் வேண்டும். இவை திசைவழக்காகவும் இருந்திருக்கலாம். இவை எக்காலத்தில் பெருவழக்காயின என்று அறுதியிட்டு உறுதி கூறுவதற் கில்லை. சங்க காலத்தின் முடிபிலோ அல்லது அதனை ஒட்டியோ என்று கூறுவதனை விட்டு மிகப் பின்னைய நூல்களென இவற்றைக் கூறுவதற்குக் காரணமொன்றும் விளங்கவில்லை.

### சங்கநூலின் பின் என்றால் என்ன பொருள்?

சங்கச் செய்யுள்கள் தோன்றிய காலம் இரண்டாம் நூற்றாண்டென்று ஒப்புக் கொள்வோர் அக்காலத்தினை அடுத்து இவை தோன்றின என்று கொள்ளாது சங்கப் பாடல்கள் ஐந்தாம் நூற்றாண்டில் தொகுக்கப்பெற்றன என்று கூறி, ஐந்தாம் நூற்றாண்டிற்கும் பின்னே திருக்குறளினை இழுத்துக்கொண்டுவரும் நுட்ப ஆராய்ச்சி பலர்க்கும் விளங்குவ தருமை. சங்க காலத்துக்குப் பின்னைய வழக்கென்றால் சங்க நூல்கள் தொகுத்ததனைப் பற்றி இங்கு எண்ணுவது ஏன்?

### வட சொற்கள்:

வடமொழிச் சொற்கள் திருக்குறளில் நூற்றிருபத்தைந்து வரை வருகின்றன என்றால், அவை திருக்குறள் கூறும் பொருளையும் சொல்லையும் அக்காலத்துப் பேச்சு வழக்கையும் பொறுத்தன ஆதல் வேண்டும். கி. மு. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் எழுந்த குகைக் கல்வெட்டுக்களில் பல வடசொற்கள் இருப்பதனை நாம் அறிதல் வேண்டும். 125-ல் எல்லாவற்றையும் வடசொல் என்று ஒப்புவோர் சிலரே. அவை வடசொல் என்று கொண்டாலும் மொத்தமாகக் கணக்குப் பார்க்கும் போது நூற்றுக்கு இரண்டாகக் கூட வடமொழி திருக்குறளில் வந்ததாகக் காணோம்.

**தொகை**

ஆதிபகவன் போன்ற வடமொழித் தொகைச் சொற்கள் சங்ககாலத்தில் காணப்படாத புதுவழக்கென்பர் சிலர். அக்கொள்கையை மறுப்பது போலச் சித்திரமாடம் என்பது சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்ற பாண்டியன் பெயரில் வருவதோர் தொகைச் சொல்லாக விளங்குதலும் கூடாகாரம் என்பது மற்றொரு தொகைச் சொல்லாக வருதலும் காணலாம். வடசொல்லும் தமிழ்ச் சொல்லும் சேர்ந்து தொகையாக வரும் அரிசமாசத்தைக் கன்னடமும் தெலுங்கும் வெறுத்திருக்க, அந்தத் திராவிட அடிப்படைக்கு மாறாக "ஒருவந்தம்" என வள்ளுவர் வழங்குவது சங்கநூல் வழக்கொடு மாறுபட்டது என்பர். ஒருவந்தம் என்பது அரிசமாசமென எல்லோரும் கொள்வதில்லை. தனித்தமிழ் என்பாரும் உண்டு. அரிசமாசம் எனக் கொள்ளினும் "தசநான்கு" என வடசொல்லையும் தமிழ்ச் சொல்லையும் சேர்த்துத் தொகையாக்கி நெடுநல்வாடை வழங்குவதால் இது பிற்கால முறையெனல் எவ்வாறு பொருந்தும்?

**சங்க வழக்கு**

திருக்குறளில் ஆய்தம், அளபெடை, பழைய உருபுகள், பழைய வினை வடிவங்கள் முதலியன சங்க காலத்திற் போலப் பயின்று வருதலை நாம் மறத்தல் ஆகாது. பிற்கால வழக்குகளென்று காட்டப்படுவனவற்றிற் பல சங்கநூல்களில் வருவதனையும் காணலாம்.

**ஏலேலோ**

திருவள்ளுவர் ஏலேலசிங்கரது ஆசிரியர் என்றும் வள்ளுவரருளால் ஏலேலசிங்கரது கப்பல்கள் கரையேறின என்றும் "ஏலேலோ ஏலரா" என்று இன்றும் வண்டி முதலிய இழுப்போர் பாடிவருவது இதனாலேயே என்றும்

கதைகள் வழங்குகின்றன. ஏலேலசிங்கன் என்ற பெயரில் சிங்கன் என்பது சிங்களநாட்டு அரசன் பெயரெனக் கொண்டு இப்பெயர் மஹாவம்சம் கி. மு. 145-ல் அரசேற்றதாகக் கூறும் ஏலேரா என்ற தமிழரசனையே குறிக்குமெனக் கொண்டு வள்ளுவரைக் கி. மு. 2-ம் நூற்றுண்டினர் என்பாரும் உளர். பேராசிரியர் சக்கரவர்த்தி நயினுர் கொள்கைப்படி ஏலாசாரியர் என்ற சமண முனிவரே திருக்குறளை எழுதினுரெனச் சமணர்களிடேயே பரம்பரையாக ஒரு கதை வழங்கி வருகிறதாம். ஸ்ரீ குந்தன் (குந்தன - கொண்டன) குந்தனுசாரியர் என்பதும் இவர் பெயராம். கி. மு. முதல் நூற்றுண்டில் வந்தவாசிக் கடுத்த மலையில் இவர் தவம் செய்து உய்ந்தனராம். இவருடைய காலடிகள் அங்கிருப்பனவற்றை மக்கள் இன்றும் வழிபட்டு வருகின்றுர்களாம். இவருடைய சீடராய் இல்லறம் பூண்டவரே திருவள்ளுவராம். திருவள்ளுவர், தம்முடைய ஆசிரியர் நூலைச் சங்கத்துக்கு எடுத்துச் சென்று அரங்கேற்றி வந்தாராம். ஆனுல், இவைகளைப் பற்றி எல்லாம் ஒன்றும் உறுதி கூறுவதற் கில்லை.

**பிற சான்றோர்**

''சங்கத்துச் சான்றோரும் பிற சான்றோரும்'' என உரையாசிரியர்கள் எழுதுவதும், பிற்காலத்தே சங்க நூல்களென்றும் சங்கம் மருவிய நூல்களென்றும் பாகுபடுத்துவதும் ஒரே கருத்தைப் பற்றியன ஆதல் வேண்டும். பிற சான்றோர் என்பதற்கும் சங்கப் புலவர்கள் அல்லாதார் என்றே பொருளாம். அவர்கள் சங்க காலத்து வாழ்ந்த பிற புலவர்களும் பிற்காலத்து வாழ்ந்த மற்றைய புலவர்களும் ஆகலாம். பிற சான்றோர் என்பதைப் பிற்சான்றோர் எனப் பாடம் ஓதுவர் சிலர். பிற்காலச் சான்றோர் என்ற பொருளில் பிற்சான்றோர் என்ற சொற்றொடர் இதுவரை எங்கும் காணுததொரு புது வழக்காம். இதில் ஓசைநய மின்மையும் உணர்தல்

வேண்டும். ஆதலின், இஃது ஒன்றுகொண்டே திருவள்ளுவரைப் பிற்காலத்தார் என்று உறுதிகூறுவதற் கில்லை. வடநூல் கருத்துக்களோடு தமிழ்நூல் கருத்துக்கள் ஒத்திருப்பது கொண்டு காலவரையறை செய்யும் முயற்சியினைப் பற்றித் தொல்காப்பியர் காலத்தை ஆராய்ந்தபோது கூறியவற்றை இங்கும் மனத்தில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். ஆதலின், அவ்வாராய்ச்சி பயன் தருவ தில்லை. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் திருக்குறளை எடுத்தாள்வதால் அவற்றிற் கெல்லாம் முந்தி எழுந்த இந்நூல் சங்க காலத்ததோ சங்க காலத்தை ஒட்டியதோ ஆதல் வேண்டும். இதற்கு மேலும் சென்று வரையறுத்துக் கூறத் தக்க சான்றுகள் இல்லை.

# 6. திருவள்ளுவரும் சமணமும்

### பெயர்

திருவள்ளுவரைச் சமணரென்று பழைய நாளி லிருந்து பலர் கூறிவருகின்றனர். தேவர் என இவர்க்கு வழங்கும் பெயர் சமணப் பெயரே என்பர். நாயனு ரென்று பிற்காலத்து வழங்கிய பெயரும் சமணர்கள் கொள்ளும் ஒரு பட்டமேயாம் என்றும் காட்டுவர் சிலர். ஆனல், திருமாளிகைத் தேவர், திருநீலகண்ட நாயனர் முதலிய சைவப் பெயர்களைக் காண்க. இது பிற்கால வழக்கே ஆனாலும் பிற மதத்தினரும் இந்தப் பெயர்களை வழங்கினர் எனல் வேண்டும். நீலகேசி என்ற சமண நூலுக்கு உரை எழுதிய சமண திவாகரமுனிவர் திருக் குறளை ''எமது ஒத்து'' என்று கூறுவர். ஆனல், இதனைப் பொதுமறை எனப் பலரும் கூறிவருவதனை மறத்த லாகாது. அளறு, இருள், அண்ணாத்தல் செய்யாதளறு முதலிய நரகங்களையும் சமணர் கூறுவது போலத் திரு வள்ளுவரும் கூறுவர். (1) ஓர்ப்பு என்ற சொல் வழக்கு (2) உரையாசிரியர்கள் கூறும் அவசர்ப்பிணி முதலான காலப் பாகுபாடு (3) பரதர் சமுதாயத்தை அமைத்ததனை உலகியற்றினன் என்று திருக்குறள் கூறல் முதலிய சமண வழக்குகள் திருவள்ளுவரைச் சமணர் என்றே நிலைநாட் டும் என்பர். இவற்றைச் சமண வழக்காக எல்லா உரையாசிரியரும் ஒப்புக்கொண்டு உரைகாண இல்லை.

### கொள்கைகள்

''அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று''

என்ற குறள் வைதிக மார்க்கத்தைப் பழிக்கின்ற தென்பர். ஏறக்குறைய இதே கருத்துடைய பாட்டொன்று மனுஸ்மிருதியிலும் (5-ஆம் சூத்) வருகிறது. ''தினற் பொருட்டாற் கொல்லா துலகெனின் - யாரும் விலைப் பொருட்டா லூன் தருவா ரில்'' என்ற குறள் பௌத்தர்களை மறுத்துரைக்கும் சமணவாதம் என்று கூறுவதில் உண்மையில்லாமற் போகவில்லை. ஆனால், புத்தர்களும் கொலையையும் புலாலையும் வெறுப்போரே என்பது மணிமேகலையில் வரும் சாதுவன் கதையால் விளங்கும். புலாலுணவிற் பழகியவர்க்கு அப்பழக்கத்தை விடமுடியாத நிலையில் இரங்கிக் கூறியவற்றைப் புத்தமதத்தின் அடிப்படைக் கொள்கை என்று கொள்ள லாகாது.

### அஹிம்சை அடிப்படை

ஆதலின், பௌத்தர்களும் சமணர்களும் வற்புறுத்திய அருட்கொள்கையின் அடிப்படையில் இந்திய நாடு முழுதுமே செல்லத் தொடங்கியது. அஹிம்சையின் அடிப்படையில் இல்லறமும் துறவறமும் சமுதாய வாழ்வும் அரசியல் வாழ்வும் காதலர் வாழ்வும் சென்று முற்றி, வீட்டுலகப் பேரின்பம் பெருவாழ்வாக மலரு மென்பதனைத் திருவள்ளுவர் போல் காட்டினார் வேறு ஒருவருமில்லை.

தொல்காப்பியத்தில் வினையின் நீங்கி விளங்கிய அறிவன் என வருவது போலத் திருக்குறளிலும் பொறி வாயி லைந்தவித்தான் என வருகிறது. கடவுள் வாழ்த்தில் வரும் பல தொடர்கள் சமண நூலில் கண்டவை எனலாம். என்றாலும், அவற்றை அருகர் என ஒருதலையாகத் துணியும் வகையில் கூறாமல் பொதுநெறியில் கூறியிருப்பது வள்ளுவரது பொதுநோக்கையே வற்புறுத்துகின்றது எனலாம்.

### புதுமையும் பொதுமையும்

இப்படி ஒரு நூல் எந்த மதத்திலும் எழுந்ததாக நாம் அறியவில்லை. அஹிம்ஸா தர்மத்தின் அடிப்படையில் எழுந்ததோர் வாழ்வின் விளக்கமென இந்நூலைக் கூறலாம். அந்த வகையில் தூய சமண வாழ்வு இங்கு விளங்குகிறது எனக் கூறுதல் கூடும். ஆனால், பௌத்த தர்மத்தின் அடிப்படையும் பிற நெறிகளின் அடிப்படையும் இங்கு விளங்காமல் இல்லை. சமணரா யிருந்தாலும் சமணரென்று வெளிப்படையாகச் சொல்லிக்கொண்டு பிறரினும் தாம் வேறென வாழ முனைந்த சமணரல்லர் வள்ளுவர். கல்லாடம் கூறுவது போலச் ''சமயக் கணக்கர் தம்வழி கூருது உலகியல் கூறிப் பொருள் இது'' என்ற புலவர் பெருமானவர் இவர். சமணக் கொள்கையின் அடிப்படை தமிழ் நாட்டிற் பரவி வேரூன்றிய காலத்தில்தான் வள்ளுவர் தம் நூலை எழுதியிருத்தல் கூடும். அந்த அடிப்படை உலக வாழ்வின் பலதுறைகளிலும் எவ்வாறு பூத்துக் காய்த்து இனிக்குமென எண்ணிப் பார்த்தவர் வள்ளுவர் ஒருவரே எனலாம். அவர் நூலின் பெருமை காந்தி யுலகத்தில்தான் நன்கு விளங்கி வருகிறது. அவர் கூறியன எல்லாம் சமணக் கொள்கை என்று வாதாடுவதை விட, எல்லோரும் ஒப்பும் வகையில் அச் சமணக் கொள்கையின் அடிப்படையை எடுத்து விளக்கிய பெரியவர் என வரவேற்பதே தக்கதாம். வள்ளுவர் கூறுவது சமணமானல் அத்தகைய பொது நெறியாக விளங்கும் சமணத்தையே உலகம் வரவேற்கும். ஒவ்வொரு மதத்தினரும் ''தம்முடைய நூல் தம்முடைய நூல்'' என இதனை வரவேற்பது உலகில் வேறெங்கும் நாம் காணாத புதுமைக் காட்சியாம். அத்தகைய நூலைப் பிற சமணர் கூறும் சமணத்தையே வற்புறுத்துவதாக எப்படிக் கூறமுடியும்?

# 7. திருக்குறள் கூறும் பொருள்

## அறம்

எல்லா மதங்களின் முரணில்லா முழுநிலையும் எல்லாச் சமயங்களின் குறைவு இல்லா நிறைவும் ஒருங்கு தோன்றுமிடம் திருக்குறளேயாம். இங்கே அன்பே உயிர் நிலையாக அமைந்த உள்ளம், மனைவியாய் மக்களாய்ப் போதுவிட்டு, நண்பராய் ஊராராய் உலகினராய் நன்கு மலர்கின்றது. இந்த மலர்ச்சிப் போக்கினையே இல்லறம் எனத் திருவள்ளுவர் கூறுகின்றார். கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடைய மழையே போல உறவு ஒன்றும் எதிர்பாராது எல்லார்க்கும் இனியராக உதவும் ஒப்புரவும் அதனால் எழும் புகழுமாக இல்லறம் முடிகின்ற போது மன்னுயிரை யெல்லாம் தன்னுயிர் போலக் கொள்ளும் அருளறம் அங்கே மலர்கின்றதெனலாம். தமர், பிறர் என்ற வேறுபாடில்லாத துறவறத்தின் உயிர்நிலை இதுவேயாம். நாம் பிறர் என்ற வேறுபாடில்லாமல் உலகமுழுவதையும் உறவாகக்கொண்டு வாழும் துறவறத்தில் மெய்யுணர்வு தோன்றப் பற்றற்ற முழுநிலை கனிந்து இனிக்கின்றது. இவ்வாறெல்லாம் அமைந்த இயற்கையின் நியதியாம் ஊழினைப் பாடி முடிகிறது அறத்துப் பால். எல்லா அறங்களும் அன்பு, அருள், அறிவு என்ற கண்கள் கொண்டே நோக்கப் பெறுவதனை இங்கே காணலாம். ஒறுத்தல் நெறியையும் பொறுத்தல் நெறியையும் தாண்டிச் சென்று பிறர் செய்த தீமையை மனத்தில் கொள்ளாத மறத்தல் நெறியையே அறநெறியாக வள்ளுவர் கூறுகின்றார்.

**பொருள்**

பொருட்பால் அரசியலையும் சமுதாய வாழ்வினையும் கூறுகிறது. இங்கே கூறுவன அரசியலுக்கே சிறப்பாய் அமைந்தன. ஆனாலும், பொதுமக்கள் ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கையில் கையாள வேண்டிய வாழ்க்கை நுட்பங்கள் என்று தோன்றும் வகையில் வள்ளுவர் இவற்றைக் கூறிச் செல்லுகின்றார். இவ்வாறு மக்கள் வாழ்வின் அடிப்படை உண்மையைக் கூறுவதால் முடியரசுக் காலத்தில் கூறியவை குடியரசுக் காலத்துக்கும் பொருத்தமாகின்றன. அறிவும், அறிவினை ஆராயும் சபையும், அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த பெரியோரும் அரசியலின் அடிப்படை எனக் கூறுகின்றார் வள்ளுவர். அரசியல் சூழ்ச்சியெல்லாம் அறிவார் வள்ளுவர். ஆனால், வெற்றி ஒன்றே கருதி அறத்தினை மறக்கும் இழிதகைமை இங்கில்லை. முடிவே போல முடிவினை நோக்கிச் செல்லும் வழியும் தூயதாதல் வேண்டும். வினைத்தூய்மை எனத் தனியோர் அதிகாரமும் இவர் கூறுகின்றார். அரசியலோ, சமுதாயமோ நெஞ்சு சிறுத்த பூதமன்று. கண்ணோட்டமே நாகரிகமென்கின்றார் இவர். அரசியலின் சிறப்பெல்லாம் குடிமக்களின் உயர்வே என உணர்ந்த வள்ளுவர் பொருட்பாலின் முடிவாம் குடியியலில் பெருமையும், பண்பும், சால்பும், அன்பும், நாணும், ஒப்புரவும், கண்ணோட்டமும், வாய்மையும், மானமும் உயிராகக் கொண்ட குடிமக்கள் இயல்பை வற்புறுத்துகின்றார்.

**இன்பம்**

மூன்றாவதாகிய காமத்துப்பாலில் ஒருவனும் ஒருத்தியும், ஒப்பாரும் மிக்காரும் இல்லாதாராய் இயற்கையும் ஊழும் வியத்தகு தெய்வச் செயலாக இருவரையும் ஒருங்கு சேர்க்க உடலால் இரண்டானாலும் உயிரால் ஒன்றாகி முனைப்படங்கி முறைமை தவறாது தமக்கென

வாழாப் பிறர்க்குரியாளராய்க் காதல் வாழ்வு வாழ்வு தனைச் சங்க இலக்கியங்களிற் போலவே காதல் நாடக மாகத் திருவள்ளுவர் எழுதியுள்ளார். காம சாத்தி ரத்தை இத்தகைய உயர்ந்த குறிக்கோளுடையதாக வேறு யாரும் எழுதினரில்லை. தமிழரது அகப்பொருள் இலக்கண நெறியை வள்ளுவர் கைப்பற்றியதால் இவ் வாறு எழுத முடிந்தது போலும். ஆனால், இங்கும் பழைய தமிழர் கூறிய பரத்தை வாழ்வில் எழும் பிணக் கினை மருதமாகக் கூறாமல் வெவ்வேறு வளர்ந்த இரண்டு உள்ளங்கள் படிப்படியே ஊடாடித் தட்டுத்தடுமாறி ஒன்றாய்க் கூடுவதனையே மருதமாகக் கூறிப் புதியதொரு புரட்சி செய்துள்ளார் வள்ளுவர். புலவி நுணுக்கம் இவர் கூறும் புதுவகை மருதமாகும். பழைய வகை யான பரத்தையர்ப் பிரிவை ஒவ்வாததால் போலும் மருதப் பாட்டு என ஒன்று பத்துப்பாட்டில் அமைய வில்லை என்று கூறவேண்டும். மருதத்தை இவ்வாறு இழப்பதற்கு அஞ்சிய வள்ளுவர் புதியதொரு தூய வழியைக் கண்டார் எனலாம்.

இரண்டாம் அத்தியாயம்

# அற நூல்கள்

## பதினெண் கீழ்க்கணக்கு

## 1. அறவகை இலக்கியம்

### சமண இலக்கியப் போக்கு

இதுவரை கூறியதிலிருந்து சமண இலக்கியப் போக்கு மூன்று வேறுவகையில் சென்றதெனக் காணலாம். தொல்காப்பியத்தைப் போல இலக்கணங்களைத் தமிழைக் கற்பார்க்கு உதவும் வகையில், தெள்ளத் தெளிய வரையறை செய்து எழுதுவது ஒன்று. இதிலே தமிழ்ச் சொற்களின் பரப்பினையெல்லாம் ஒருசில அடிப்படையில் தொகுத்துக் காட்டும் நிகண்டும் அடங்கும். தொல்காப்பியருடைய உரியியல் இத்தகையதொரு முயற்சியே எனலாம். பிற ஆராய்ச்சிகளையும் இங்கே அடக்கலாம். இரண்டாவது போக்கு, பாச் செய்யுளும் உரைச் செய்யுளுமாகப் படிப்போர் உள்ளத்தைக் கவரும்படி உண்மையான இலக்கியங்களைப் படைப்பதாம். இந்த முயற்சியே காப்பியமாக வளர்வதனைப் பின்னர்க் காண்போம். மூன்றுவது போக்குச் சமணர்கள் தங்கள் கொள்கையின் அடிப்படையாம் அறத்தைச் சமணர்க்கே உரிய சிறப்பு வகையிலும் எல்லோர்க்கும் உரிய பொதுவகையிலும் கூறுகிற அறநூல் இலக்கியங்களைப் படைத்துத் தருவதே

ஆம். அறநூல் பாட்டாக வடிவெடுப்பது அருமையினும் அருமை. ஆனால், திருவள்ளுவரது திருக்குறளோ, தலை சிறந்த புலவர் முயன்றால் அந்த அருமையும் மிகமிக எளிதாம் எனக் காட்டுகிறது.

### மூதுரைகள்

திருக்குறளைக் கூறியதால் திருக்குறளோடு ஒன்று வைத்து எண்ணப்படுகின்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களையும் இங்கேயே ஆராயலாம். இவை பெரும்பாலும் மூதுரைகள் போல வரும் பல பாடல்களின் பல தொகுதிகளாம். வாழ்க்கையின் பல துறைகளைப் பற்றிய உண்மைகளைத் திட்ப நுட்பமாகச் சுருங்கச் சொல்லிக் கேட்போர் மறவாதபடி மனத்திற் பதிக்க முயலும் மூதுரைகள் எந்நாட்டிலும் எக்காலத்திலும் உண்டு. தொல்காப்பியரும் இவற்றைச் சுட்டுகின்றார். இவற்றைப் பழமொழிகள் என்று சொல்வதற்கில்லை. இவை பொதுமக்கள் பேச்சாகாமல் அறிஞருடைய கட்டுரையாகி, ஆனால் பொதுமக்கள் வழங்கும் பழமொழிகளை ஒட்டி, உயர்ந்த இலக்கிய நடையில் எழுந்தனவாகும். பழமொழிகளும் இவற்றிலுண்டு. ஆனால், அவற்றை விளக்குவனவாகவும் புதியனவாகப் புலவர் கற்பித்தனவாகவும் பழைய நெறியைப் பின்பற்றுகின்ற போதும் புது நெறியில் செல்வன ஆகவும் இவை எழுவதும் இயல்பே ஆம். பிறமொழியை, இவற்றை எழுதும் அறிஞர்கள் அறிந்திருந்தால் அம்மொழிகளின் கருத்தும் இங்கு வெளிவரும். உலகம் முழுதும் பரவிய கருத்துக்களை வெளியிடும்பொழுது கடன் வாங்கித்தான் இருக்க வேண்டும் என்று கூறுவதற்கில்லை. ''இனியவை'' ''இன்னா'' என எதிர்மறை அணி விளங்கவும் பாடல்கள் வரும். தொடர்பில்லாத பலவற்றை நந்நான்கு அல்லது ஐஐந்து அல்லது அவ்வாறு உண்மைகளாகத் தொகுத்துத் திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம் ஏலாதி என எண் வகையாகவும் உவமை வகையாகவும் பெயரிட்டுத் தொகுத்தலும் ஒரு முறையாம். இப்

பாடல்களில் வாக்கியங்கள் ஒரே கோலத்தில் அமைவதும் சில சொற்கள் திருப்பித் திருப்பி வருவதும் காணலாம். மிக எளிய சாதாரண கருத்துக்களும் ஒப்புமைக் கூட்டம், உருவகம், உவமை வேற்றுப்பொருள் வைப்பு முதலிய அணிகளால் சிறந்து விளங்கும் நிலையை இவற்றில் அடையக் காண்கிறோம். இவை வெண்பாவாகவே அமைகின்றன. இவற்றிலே காதலைப் பற்றிய பாடல்களும் வரக் காண்கிறோம்.

### அறவுரைச் செய்யுள்கள்

மூதுரையாகப் பலவற்றைத் தொகுத்துக் கூறுவதோடு அறத்தையே பாடுகின்ற நூல்களே இவற்றில் பெரும்பான்மையன. மூதுரைக்கும் (Gnomic) அறவுரைக்கும் (didactic) உண்மையில் வேற்றுமை பதினெண் கீழ்க்கணக்கில் காண்பது அருமை. ஆனால், அறத்தையே வற்புறுத்துகின்ற நூல்களை வேறு பிரித்துவிடலாம். உவமையாலும் சுவையின் உணர்ச்சியாலும் இவை உள்ளத்தைக் கவர்கின்றன. ஆடூஉ முன்னிலையாகவும் மகடூஉ முன்னிலையாகவும் வருஞ் செய்யுள்கள் படிக்கும் நம்மை நேரே நோக்கிக் கூறும் பாடல்களாகத் தோன்றுகின்றன.

### சமணச் சிறப்பு நூல்கள்

இவற்றில் எல்லாம் புத்தர்கள் - அவர்களை விடச் சமணர்களின் முயற்சியினைக் காணலாம். இந்த அறவகை இலக்கியம் தமிழ்நாட்டில் தமிழொடு தமிழாய் இயைந்துவிட்டது. பின்னாளில் தோன்றிய ஔவையார் பாடல்கள், நன்னெறி, நீதிநூல், நீதிநெறிவிளக்கம் போன்றவை இந்த நூல்களின் அடிச்சுவட்டில் சென்றவையேயாம். சமணர்களும் தம்முடைய சமணக் கொள்கைகளைப் பொது அறத்தை விளக்கும் மூதுரைகளோடு கலந்து பின்னாளில் பாடத் தொடங்கினர். மதத்தை வற்புறுத்தலின், பொதுவான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களினும் இவை வேறென்று கூறலாம்.

***அருங்கலச்செப்பு:*** *அருங்கலச்செப்பு என்ற நூல் கடைசியாகக் கூறிய இத்தகைய இலக்கியத்தில் தலை சிறந்து விளங்குவதெனலாம். இது குறட்பாக்களா லாகியது. இது அருங்கலான்வயத்தைச் சேர்ந்த சமண ரால் இயற்றப்பெற்றது எனலாம். ஆனால், இந்த நூல் பதினெண்கீழ்க்கணக்குக்கும் பின்னாளைய தாகும்.*

***அறநெறிச்சாரம்:*** *இதனைப் பின்பற்றி முனைப் பாடியார் என்ற சமணர் அறிநெறிச்சாரம் என்ற நூலை வெண்பாவில் எழுதியமைத்துள்ளார். ''மறவுரையுங் காமத்துரையும் மயங்கிப் பிறவுரையும் மல்கிய ஞாலத்து, அறவுரை கேட்கும் திருவுடையாரே பிறவியை நீக்கும் திருவுடையார்'' என்ற முடிவிற்கு வந்து அவர்களுக்கு அறநெறிச்சாரத்தைச் சுருக்கமாய் வரைந்து விளங்கித் தோன்ற விரிக்கின்றாராம் ஆசிரியர். அறங்கேட்டு, அருள் புரிந்து, ஐம்புலன் மட்டும் இறங்காது, இருசார் பொரு ளும் துறந்து, அடங்கி, மன்னுயிர்க்கு உய்ந்து போம் வாயில் உரைக்கவேண்டும் என்று கூறுகின்ற இவர் அத் தகையதொரு துறவி போலும். அறங்கேட்டார்க்குரிய இயல்பினை முதல்முதல் இவரே கூறுகின்றாராதலின் எல் லோர்க்கும் அறங்கூறுகின்ற முறைபோய் ஒரு சிலர்க்கே கூறுகின்ற காலம் இங்கே தோன்றிவிட்டது எனலாம். பிற மதங்களைப் பழிக்கின்ற போக்கும் இங்கு உண்டு. தம் மதத்தைப் புகழ்ந்து பாடும் முறையும் இங்கே காண்கிறோம்.*

*''வினைப்பாடு கட்டழித்து வீட்டின்பம் நல்கி நினைப் பாடி வந்தோர்க்கும் நீமிக என்றான்'' அருகப்பெருமான் என முடிகின்றது இந்த நூல். இது அருகனைச் சிவ னென்று பாடுகிறது. சைனர்கள் ஏகாந்த வாதத்தைப் பழிப்பது போல் இதுவும் பழிக்கின்றது. (ஏகாந்த வாதிகள் என்பது அச்சிட்ட நூல்களில் ஏகான்ம வாதிகள் என்றிருப்பது பிழையாம்.)*

### இவற்றின் காலம்

சங்கப் பாக்களையும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களையும் காப்பியங்களையும் திரட்டிய புறத்திரட்டில் இந்த நூலும் கோக்கப்பெற்றிருப்பதால் இந்நூல் நேமிநாதர் பவணந்தி காலத்த தாகலாம். 600 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனலாம். அருங்கலச் செப்பு இதற்கும் முந்தியதாக 700 ஆண்டுகளுக்கு முன் தோன்றி இருக்கலாம்.

### இவற்றிற்கு வழிகாட்டிகள்

இவையெலாம் பிற்கால வளர்ச்சி. பதினெண்கீழ்க்கணக்கோ இவற்றிற்கெல்லாம் முந்தியது. பின்னே கூறப்போகும் காப்பியங்களுக்கு — சிறப்பாக சிலப்பதிகாரம், மணிமேகலைக்கு—இவற்றில் சில பிந்தியவை ஆகலாம். சில உடனெழுந்தவை ஆகலாம். சில முந்தியவையும் ஆகலாம். ஆனால், திருக்குறளை ஆராய்ந்த இந்த இடத்தில் பதினெண்கீழ்க்கணக்கில் அதுவும் ஒன்றாகக் கருதப்படுவதால் அவற்றையும் இங்கே ஆராய்வது பொருத்தமாம்.

## 2. பதினெண் கீழ்க்கணக்கு - இலக்கணம்

**அம்மை**

பதினெண் கீழ்க்கணக்கு என ஒருவகை நூல்களைத் தமிழர் வழங்கி வருகின்றனர்.

> ''சின்மென் மொழியான் தாய பனுவலின்
> அம்மை தானே அடிநிமிர் பின்றே''

என்ற தொல்காப்பியம் இத்தகைய நூல்களையே குறிக்கின்ற தென்பர். சொற்சுருக்கம் இனிமை என்பவற்றோடு அறம் பொருள் இன்பம் என்ற அடிப்படைப் பொருளை வற்புறுத்திச் செல்லும்போது ஒரு தொடர்ச்சியாகப் போகாது தாவித் தாவிச் சென்று அழகிய கருத்துக்களை விளக்கும் இனிய சீரிய செய்யுட்களின் திரட்டாய் அமைந்து விளங்குகின்றதே அம்மை என இங்குக் கூறப் பெறுவதாம்.

**கணக்கு**

நெடுங்கணக்கு, கணக்காயனுர், சமயக்கணக்கர் முதலிய வழக்குகளில், நூல் என்ற பொருளில் கணக்கென்ற சொல் வழங்குதல் காண்கிறோம். கணக்கென்பதற்கு எழுத்து என்ற பொருளும் திவாகரம் கூறுகிறது. எழுதப்பட்ட நூலும் கணக்கெனப் பெறுவது இயல்பே. கணக்கென்பதற்கு வழக்கு, ஒழுங்கு, முறை என்ற

பொருளும் வழங்குவதால் ஒரு முறைப்பட எழுத்துக் களையோ கருத்துக்களையோ அமைத்த நூலினையும் கணக் கென்பது பொருத்தமாகும். கணக்கில் பேரேடு என வழங்குவனவற்றைப் பட்டினத்தாரும் திருநாவுக்கரச ரும் வரிநெடும் புத்தகமென்றும் கீழ்க்கணக்கென்றும் பாடக் காண்கிறோம். எழுத்துக்களை வரிசையாக நெடுக எழுதும் அரிச்சுவடியை நெடுங்கணக்கென்பர். பல அடிகளாலன்றி, சிறு செய்யுட்களாக வருவனவற்றைச் சாத்திரம் போலவோ கதை போலவோ தொடர்ந்து வாராமல் ஒவ்வொரு செய்யுளிலும் ஒவ்வொரு கருத்து முடிவதாக அமைந்தவற்றைக் கீழ்க்கணக் கென்றனர். அடிநிமிர்ந்து வருவனவற்றைப் பன்னிருபாட்டியல் மேற் கணக்கென்றும் வழங்குகிறது.

### பெயர் வழக்கு

பதினெண்கீழ்க்கணக்கு என்ற பெயர் வீரசோழிய உரையில் வழங்கப்பெறுவதால் பதினோராம் நூற்றாண்டி லேயே வழங்கியதெனலாம். யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியரும் வழங்குவதால் பத்தாம் நூற்றாண்டி லேயே வழங்கியதென்று கூறவும் இடமுண்டு. பன்னிரு பாட்டியலில் வரும் ஆசிரியர்களுடைய இலக்கண நூல் கள் காரிகை உரையிலும் எடுத்தாளப்படுவதால் பத்தாம் நூற்றாண்டுக்கும் முந்தியதே இந்த வழக்கெனலாம்.

### நூல்களின் வழக்கு

பதினெண்கீழ்க்கணக் கென்று தொகை பெற்றது பிற் காலத்தே யாயினும் அதில் வரும் நூல்வகைகளுக்கு இலக்கணம் தொல்காப்பியர் கூறும் அம்மையி னிலக் கணத்தில் அமைந்தே கிடக்கிறது. பின்னுளைய இலக் கணங்களி லிருந்தோ தேவார திருவாசகங்களி லிருந்தோ எடுத்தாளாத இளம்பூரணர், யாப்பருங்கல விருத்தி யுரைகாரர் முதலியோர் பதினெண்கீழ்க்கணக்கு நூல்

களிலிருந்து நிறைய எடுத்துக்காட்டுகிறார்கள். சங்க நூல்கள் குறிப்பது போலவே இன்னா நாற்பதும் சிவன், பலராமன், மாயோன், முருகன் என்ற கடவுளரின் வழி பாடு கூறுவதால் சங்க காலத்தை ஒட்டிய காலத்த தாகலாம். திரிமூர்த்திகள் வழிபாடு கூறும் இனியவை நாற்பது சங்க காலத்துக்குப் பிந்திய யானைக்குகைக் காலத்தை ஒட்டியதே யாகலாம். ஆதன் என்ற பெயர் தேவார காலத்தில் இழிவாகக் கருதப்பட்டது. அது நல்லாதன் எனத் திரிகடுக ஆசிரியன் சிறப்புப் பெயராக அமைந்திருத்தலின் தேவார காலத்துக்கும் முந்திய காலம் அந்நூலின் காலம் எனலாம். நேரிசை வெண்பாவினும் பிறவகை வெண்பாவே வருவன காலத்தால் முந்திய னவே ஆதல் வேண்டும். எனினும், முதுமொழிக்காஞ்சி, களவழி, திருக்குறள் என்பவை நீங்கலானவை சங்க காலத்துக்குப் பிந்தியவை என்றே சொல்லுதல் வேண்டும்.

**சங்க நூலா ?**

பதினெண்கீழ்க்கணக்குகள் மதுரையையும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தையும் சேர்ந்தவை என்ற ஒரு நம்பிக்கை வழங்கிவருகிறது. ''கூடற்கண் இருந்து பாற்படுத்த தென் தமிழின் பா நான்கில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும் வெண்பாவின் பா லுரைத்தார்'' என ஒரு செய்யுள் கூறு கிறது. முன்னாளில் சங்கம் வகுத்த பாவகையில் பின் னாளில் பதினெண்கீழ்க்கணக்கு வகுத்தார்கள் என்று பொருளா? சங்க காலத்திலேயே வகுத்தார்கள் என்பது பொருளா? ஒன்றும் விளங்கவில்லை. ''திரிகடுகம் தமிழ்ச் சங்கம் மருஉ நல்லாதன் மருந்து'' என வரும் செய்யுள் மேலைய சங்கத்தோடு திரிகடுகத்தைத் தொடர்பு படுத்து கிறது. முதுமொழிக்காஞ்சியினை இடைச் சங்கத்தில் உண்டாகிய தமிழ் என்றொரு ஏடு கூறுகிறது. இவை யெல்லாம் பழைய தமிழ்ச் சங்கத்தைக் குறியாமல் இடையே எழுந்த சங்கங்களையே குறித்தல் வேண்டும்.

வச்சிரநந்தி கி. பி. 470-ல் மதுரையில் நிலேநாட்டிய திராவிட சங்கம் சமணத் துறவிகளின் சங்கமாக மட்டு மமையாது தமிழையும் வளர்த்த சங்கமாக வழங்கியது போலும். இன்னு நாற்பது போன்றவை நாம் முன்கூறிய காரணத்தால், இந்த ஐந்தாம் நூற்றுண்டுக்கும் முன் நான்காம் நூற்றுண்டிலேயே தோன்றி யிருக்கலாம்.

### மதுரையும் பதினெண்கீழ்க்கணக்கும்

மதுரைத் தமிழ்ச் சங்கம் என்று கூறிக்கொள்வ தோடு பதினெண்கீழ்க்கணக்கில் பாடிய புலவர்களில் பெரும்பாலோர் மதுரையில் வாழ்ந்தோ மதுரையில் கல்வி கற்றே பாண்டிய நாட்டில் கல்வி கற்றே வந்தவர் கள் என்பதாகவே தோன்றுகிறது. மதுரைத் தமிழா சிரியர் மகனுர் பூதஞ்சேந்தனுர், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனுர் மாணுக்கர்கள் காரியாசான் கணிமேதை யார், மதுரைக் கண்ணங் கூத்தனுர், மதுரைக் கூடலூர் கிழார் (முதுமொழிக் காஞ்சி), மாறேக்கத்து (கொற்கை யைச் சூழ்ந்த நாடு) புல்லங்காடனுர், மாறன் பொறை யனுர் என்ற பெயர்களேக் காண்க. நூலுள்ளும் சில இடங் களில் ''மாறன் கூடலனேயார்'' எனக் கணிமேதையார் பாடுதல் காண்க. தமிழ் ஐந்திணேக் களவொழுக்கத்தை ஒரு சிலர் பாடுதல் வெறுக்க, அவ்வாறு ''முனிந்தார் முனி வொழிய களவியற் கொள்கையைக்'' கணிமேதையார் விளக்கினுர் என்பது அதன் பாயிரத்தால் விளங்குகிறது. திரிகடுகம், நான்மணிக்கடிகை, நாலடி, பழமொழி, இன்னு நாற்பது முதலியவற்றை முன்னெழுந்த நூல்களென்றும் மற்றவை பின்னெழுந்தன என்றும் சிலர் கொள்வர்.

# 3. பதினெண்கீழ்க்கணக்கு

## நாலடி நானூறு-பழமொழி நானூறு

### பொருள்

இந்நூல்களில் நாலடி நானூறு சைன முனிவர் பலரும் எழுதியதனைத் தொகுத்ததே என்பர். கருப்பு வந்தபோது பாண்டியனைப் பிரிந்து செல்லும் துறவிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாட்டு எழுதியதில் அழிந்தன போக நின்றவையே நாலடி நானூறு ஆயினவாம். இதன் சிறப்பினைப் பாராட்டிய டாக்டர் போப் ஆங்கிலத்தில் இதனை மொழிபெயர்த்திருக்கின்றார். திருவள்ளுவர் திருக்குறள் போலக் கருத்துக்களை அதிகார வழியே அடைவு படுத்திச் செல்வதன்று இந்த நூல். சிறந்த கருத்துக்களை விளக்கும் பாடல்களாகப் பல இதில் அமைந்துள்ளன. இவ்வளவு எளிதாகவும் அழுத்தந் திருத்தமாகவும் ஆழ்ந்த கருத்துக்களை விளக்குவதனை வேறெங்கும் காணமுடியாது. ஒருசில பாடல்கள் வடமொழிப் பாடல்களை நினைவூட்டலாம். பாடிய புலவர்களின் நினைவிலு மிருந்திருக்கலாம். ஆனால், இத்தமிழ்ப் பாடல்களைப் பார்க்கும்பொழுது மொழிபெயர்ப்பு என்ற எண்ணமே தோன்றாத வகையில், முதற்படியிலேயே தோன்றும் புத்துயிர்ப்போடு இவை ஒளிரக் காண்கிறோம். சமணக் கொள்கையின் அடிப்படையான பல வாழ்க்கை நுட்பங்கள் இங்கே விளங்குகின்றன. காமத்துப்பால் ஒரு சில பாக்களில் அமைந்தாலும் திருக்குறளில் போல நாடக வழக்காக அமைந்துள்ளமை இங்குக் கருதத் தக்கதாம். இதற்கு அதிகாரங்கள்

வகுத்து, உரையும் எழுதியவர் பதுமனுர். அவரும் சைனர் போலும்.

**காலம் - முத்தரையர்**

பல்லவதரையர் என்பது போலப் பாண்டியதரையர் என்றெல்லாம் வருதலின் தமிழ் நாட்டு மூவேந்தரையும் உள்ளிட்டு முத்தரையர் என்ருெரு பட்டம் வழங்கி வந்துள்ளது. த்ரைராஜ்யம் என்ற வழக்குக் கல்வெட்டிலும் உண்டு. மற்றும் ஒன்று உண்டு. இடைக்காலத்தே களப்பிரர்கள் தமிழ்நாட்டைக் கைப்பற்றிய பிறகு இந்த நாட்டினர் பழைய தமிழ் வேந்தர் மூவரையும் பற்றி எண்ணலாயினர்; பாடலாயினர். தேவாரம் கடவுளைச் சோழனென்றும், சேரனென்றும், பாண்டியனென்றும் பாடுவதும் காண்க. முத்தொள்ளாயிரச் செய்யுள்களும் இந்தப் புத்துணர்ச்சியோடு எழுந்தனவேயாம். முத்தரையர் என்ற பெயரும் அந்தக் கால நிலையைத்தான் சுட்டுகின்றது. ஒரு சிலர் முத்தரையர் என்பதற்குப் பழைய மூவேந்தரென்று பொருள் கூறுகின்றனர். ஆனுல், பழைய உரை ''பெருமுத்தரையர் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற செல்வர்'' என்றே இதற்குப் பொருள் கூறுகிறது. பெருமுத்தரையர் என்பதற்குப் பெரும்பிடுகு முத்தரையர் என்று சிலர் பொருள் கூறுகின்றனர். பெரும்பிடுகு என்பது ஏழாம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் அரசாண்ட பரமேசுவர பல்லவனைக் குறிக்கும். அவன் கீழடங்கிய முத்தரையனே இங்குக் குறிக்கப்பட்டான் என்ருல் நாலடியார் ஏழாம் நூற்றுண்டுக்கு முன் தொகுக்கப்பெற்றிருக்கமுடியாது. பெரும்பிடுகு முத்தரையன் பெருமுத்தரையர் என வருதல் ஏன்? பன்மையாகக் குறிப்பது ஏன்?

**முன்னிலை**

பெருமுத்தரையர் என்பதனைத் தனியொரு மன்னவன் பெயராகக் கொள்வதற்கு இல்லை. ஏழாம் நூற்றுண்டுக்கு முன்னரும் அவர்கள் சிறந்திருந்தனர் என்பது ஒரு சிலர் ஆராய்ச்சி. ஆடூஉ முன்னிலையாகவும் மகடூஉ

முன்னிலையாகவும் பல பாடல்கள் நாலடியில் வருகின்றன. கானகநாடன், மலைநாடன், கடற்கரைச் சேர்ப்பன் என்று வருவன எந்த அரசனைக் குறிக்கின்றன என விளங்க வில்லை. நாலடியார் பல புலவர்கள் பாடிய தனிப் பாடலின் தொகையே ஆதலின் தொகுக்கப்பெற்ற காலம் பின்னையதானாலும், முத்தரையரைக் குறிப்பது போன்ற பாடல்கள் பின்னைய ஆனாலும் அதிலுள்ள பல பாடல்கள் முன்னைய பாடல்களும் ஆகலாம். எனினும், முழுநோக் காகப் பார்க்கும்போது நாலடியாரின் நடை திருவள்ளு வர் நடைக்குப் பிற்காலத்ததே எனல்வேண்டும்.

### பழமொழி

பழமொழி நானூறு பெயருக்கு ஏற்ப 400 செய் யுள்கள் கொண்டது. இதனை எழுதியவர் சைனர். இதன் கடவுள் வாழ்த்து அருகரை வழிபடுகிறது. பல் யானைச் செல்கெழுகுட்டுவன், பாலைக் கௌதமனார், தூங்கு எயில் எறிந்த சோழன், பொற்கைப் பாண்டியன், மனுநீதிச் சோழன், கரிகாலன் முதலியோரைப் பற்றியும், பாரி, பேகன் முதலிய வள்ளல்களைப் பற்றியும் குறிப்பிடு வதால், இது சங்க காலத்துக்கும் பின்னைய நூலாதல் வேண் டும். இதனை இயற்றியவர் முன்றுறை அரையனார். முன் றுறை என்பது பாண்டிய நாட்டு ஊரென்று ஒருசிலர் கருது கின்றனர். தமிழ் நாட்டில் வழங்கிய பழமொழிகளை ஈற்றடியாகக் கொண்டு பழைய புராணக் கதைகளின் வழியேயும் தம் இலக்கிய நயத்தின் வழியேயும் அவற்றை விளக்கி ஆசிரியர் பாடி முடிக்கின்றார். பழமொழி கூறுவன வற்றை முன்னூலோடும் பின்னூலோடும் வைத்து முடிவு காண முடியாது. ''யார் நட்பேயாயினும் நட்புக்கொளல் வேண்டும்'', ''இல்லையே ஒன்றுக்குதவாத ஒன்று'' என வரும் இவர் பாடல்கள் உலகினையும் உலகத்து மக்களை யும் நன்மையின் வடிவமாகவே கொண்ட ஆசிரியரது நகை முகத்தைக் காட்டும். நாலடி நானூற்றின் நடை யினும் சிறிது பழமையுடையதாகவும், செறிவும் கடுமை யும் உடையதாகவும் இந்நூல் செல்லுதல் காணலாம்.

# 4. பதினெண்கீழ்க்கணக்கு : சிறுபஞ்சமூலம், ஏலாதி, பிற நூல்

## சிறுபஞ்சமூலம்

சிறுபஞ்ச மூலம் நூறு பாடல்களால் அமைந்தது. இதனைச் செய்தவர் மாக்காயன் மாணுக்கனுர் மாக்காரி ஆசான் என்பவர். ''முழுதுணர்ந்து முன்மொழிந்து மூவாதான்'' என அருகப் பெருமானை வாழ்த்துகிறுர் ஆசிரியர். ''வரப்புயர'' என்று ஔவையார் வாழ்த்திய தற்கு மூலம் இங்குள்ள நாற்பத்து ஆருவது பாட்டே யாம். மாணுக்கரைப் பற்றியும் ஆசானைப் பற்றியும் சித்தனைப் பற்றியும் கவிஞனைப் பற்றியும் இவ்வாசிரியர் கூறியுள்ளார். ஆதர், பூதர் என்ற சொற்கள் உயர்ந்த பொருளைக் குறியாமையும் இவர் நூலால் அறிகின்றேும். எனவே, நல்லாதன் எனத் திரிகடுக ஆசிரியர் புகழ்பெற்ற தற்குப் பின்னையதே இந்த நூல் எனலாம். உயிர்க் கொலையின் இழிவையும் உயிர் காத்தலின் பெருமையினை யும் பலபடியாகக் கூறுகின்ருர் இவர். அறஞ்செய் தாரே மன்னராய் வாழ்வரென்ற கொள்கை அக்காலக் கொள்கை போலும். சிறுபஞ்சமூலம் ஐந்து கிழங்குகள் சேர்ந்த மருந்து. இந்த நூலின் பாடல் ஒவ்வொன்றும் ஐந்தைந்து உண்மைகளைக் கூறும். உடலுக்கும் உயிர்க் கும் மருந்து தரும் சமண அறவழியை இங்கே காணலாம்.

### ஏலாதி

மாக்காரியாரது ஒருசாலை மாணாக்கர் ஏலாதி பாடிய கணிமேதையார். இவர் அறநூலைத் தொகுத்துக் கூறி வீட்டுநெறியையும் காட்டி இந்நூலைச் செய்துள்ளார். அறம் செய்தார் அரசவாழ்வு பெறுதலை இவரும் பலவிடத்தும் வற்புறுத்துகின்றார். ''ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம் ஒதி வாழ்வார்க்கு ஈந்தவர் இம்மையான் வேட்டெழுத வாழ்வார்'' என்றும் கூறுகிறார். இவர்களெல்லாம் எழுத்தின் வனப்பே வனப்பு என்று கூறும் கூட்டத்தினைச் சேர்ந்தவர்கள். இவரே களவொழுக்கத்தின் இயல்பெல்லாம் விளங்கத் திணைமாலை நூற்றைம்பது என்ற நூலையும் செய்துள்ளார். கார்நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, கைந்நிலை என்பனவும் அகப்பொருள் விளக்கும் நூல்களாய்ப் பதினெண்கீழ்க்கணக்கினுள் சேர்ந்தவையேயாம். இவற்றில் பல வடசொற்கள் பயின்று வருதல் காணலாம். ஏலாதி, ஏலம் முதலான ஆறு பொருள்கள் சேர்ந்த மருந்து. ஏலாதிச் செய்யுள் ஒவ்வொன்றும் இதுபோல அவ்வாறு உண்மைகளைத் திரட்டிச் சொல்வது.

### சமணமல்லாதவை சமண அடிப்படை

இன்னா நாற்பது, இனியவைநாற்பது, திரிகடுகம், நான்மணிக்கடிகை, ஆசாரக் கோவை முதுமொழிக் காஞ்சி முதலியன சமணர்களால் செய்யப் பெறுமற்போனாலும் சமணத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பொது நோக்காகக் கொண்டு வற்புறுத்திவரக் காண்கிறோம். ''ஊனைத் தின்று ஊனைப்பெருக்குதல் முன்னின்னா'' என்பது இன்னா நாற்பது. இதனையே ''ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே'' என இனியவை நாற்பது கூறுகிறது. ''ஊன் உண்டு உயிர்கட்கு அருளுடையேம் என்பானும்'' எனத் திரிகடுகம் கூறும். கொலை, புலை என்பவற்றை அடிப்படை அறமெனக் கொண்டு அவற்றை வேறோர் அறநெறிக்கு உவமையாக்குகின்றார் நான்மணிக்

கடிகையார். "பிறனைக் கொலை யொக்கும் கொண்டு கண் மாறல்; புலையொக்கும் போற்றுதார் முன்னர்ச் செலவு" எனக் கூறுதல் காண்க. இத்தகைய அடிப்படையான அருளறம் சங்க காலத்திலேயே பரவி இருந்தது என லாம். பட்டினப்பாலை "கிளைகலித்துப் பகைபேணாது, வலைஞர் முன்றில் மீன் பிறழவும் விலைஞர் குரம்பை மாவீண்டவும் கொலை கடிந்துங் களவு நீக்கியும் புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை" எனப் பாடுதலால் இந்த உண்மையை அறியலாம்.

# 5. பதினெண்கீழ்க்கணக்கு: பிற இயல்புகள்

### காலத்தின் கொடுமை

காலத்தின் கொடுமையும் இந்நூல்களில் விளங்கக் காண்கிறோம். தோற்கன்று காட்டிப் பால் கறத்தலைத் ''தோற்கன்று காட்டிக் கறவார் கறந்த பால் பாற்பட் டார் உண்ணார்'' என்று சிறுபஞ்சமூலம் கூறுவது காண்க. கருச்சிதைத்தலும் குழவி இறத்தலும் அந்நாளைய வாழ் வின் நெருக்கடியால் நிகழ்ந்தன போலும். ''குழவி பிணியின்றி வாழ்தலினிதே'' என வரும் இனியவை நாற்பதும் ''ஈன்றெடுத்தல் சூல் புறஞ்செய்தல்'' ''கலங் காமை காத்தல் கருப்பஞ் சிதைந்தால்'' என வரும் சிறுபஞ்சமூலமும் காண்க. அறத்தில் நாட்டமிழந் தார்க்கு இம்மையே அறத்தின் பயன் வருமெனக் கூறும் பாடல்கள் பல. கொடைமடம் பாடுதல் இத்தகைய நாளில் ஏது? ''இன்னா பொருளில்லார் வண்மை புரிவு'' என்பது இன்னா நாற்பது. ''வருவாயறிந்து வழங்கலி னிதே'' என்பது இனியவை நாற்பது. கடன்பட்டே வாழ வேண்டிய நெருக்கடி பல்கியபோது கடன் வாங்காமையே பேரறமாயிற்று. "கடமுண்டு வாழாமை காண்டலினிதே." (இனிய நாற்பது) ''தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்'' என்றெல்லாம் வருதல் காண்க. இந்த நிலையில் ''இன்னா ஈன்றாளை ஓம்பாவிடல்'' என்றும் கூற வேண்டுவதாயிற்று.

**வடமொழி வாடை**

வடமொழிச் சுருதிகளின் வாடையும் இங்கே வீசுகின்றது. ''ஆசாரக் கோவை எனத் தொகுத்தான்—பெருவாயில் முள்ளி என்பான்.'' ஆனால், அங்கிருந்து இவர் கடன் வாங்கியவை சங்ககால வழக்கினை நோக்கப் பழமையும் புதுமையும் வாய்ந்தவையேயாம். ஆசிரியரோ பழையனவே கூறுவதாக முழங்குகிறார் ''முந்தையோர் கண்ட முறை,'' ''பேரறிவாளர் துணிபு'' ''யாவருங்கண்ட நெறி'' எனப் பன்னிப் பன்னிப் பல விடத்தும் அவர் கூறுதல் காண்க. இங்குக் கூறப் பெறுவன பழைய சுருதிகளில் உள்ளனவும் பெருவழக்காக மக்கள் கொண்டனவுமேயாம். பரவி வழங்கிய கருத்துக்களைத் தமிழில் கூறுவது என்றே கூறவேண்டும்; இதனை மொழிபெயர்ப்பு எனக் கூறுவதற் கில்லை. பின்னாளைய ஸ்மிருதிகளிலிருந்து கொண்டனவென்று சிலவற்றைக் காட்டுகின்றனர். அவற்றில் 'நிறை உவா மெல்கோலும் தின்னார்' என்று ஆசாரக் கோவை கூறுவது பழைய வழக்கென்றே கொள்ளுதல் வேண்டும். பின்னைய சுருதிகள் மேலும் பல நாள்களில் பல் தேயாமையைக் குறிப்பனவாம். அவை இங்கே குறிக்கப்பெற வில்லை. மண்டலமிட்டு அதன்மேல் உண்ணுவதனை மட்டும் ஆசாரக்கோவை கூற ஜாதிக்கொரு மண்டலமும் நாலாஞ் சாதியினர் மண்டலமின்றித் தரையில் நீர் தெளித்து உண்டலும் பின்னுளைய சுருதிகள் வற்புறுத்துமாம். சுருதியிற் புகுவதற்கு முன்னரே இவை வழக்கில் இருந்திருக்கவேண்டு மன்றே? மண்டலம் செய்யா துண்டால் பூதங்கள் அந்த உணவைப் பறித்துக் கொள்ளும் என்று பின்னுளைய சுருதிகள் கூற, ஆசாரக் கோவையோ 'நீராடாது கால் கழுவாது மண்டலஞ் செய்யாது வாய் பூசி மட்டும் உண்ணுவோர் உணவு அரக்கருணவு ஆகும்'' என்று மட்டுமே கூறும்.

**பிள்ளைகள் வகை**

சுருதிகளிலுள்ள கொள்கைகள் தமிழ் நாட்டில் பரந்து சமணர்களுடைய நூல்களிலும் கூட இடம்

பெற்றுவிட்டன. தகப்பன் பொருள் பிள்ளைக்குப் போகின்ற முறையமைப்பு யாருக்கும் பொதுவாகத்தான் இருந்திருக்கும். சமணர்கள் வழியாக முதலில் இவை தமிழில் புகுந்திருக்கலாமென எண்ணவும் இடமுண்டு. சமணராகிய கணிமேதாவியார் தமது ஏலாதியில் இவ்வாறு வடநாட்டு முறையைக் கூறுவது காண்க.

மாண்டவர் மாண்ட அறிவினுல் மக்களைப்
பூண்டவர்ப் போற்றிப் புரக்குங்கால்--பூண்ட
அவுரதனே கேத்திரசன் கானீனன் கூடன்
கிரிதன்பௌ நற்பவன் பேர்.

மத்தம் மயிலன்ன சாயலாய் மன்னிய சீர்த்
தத்தன் சகோடன் கிருத்திரமன்--புத்திரி
புத்ரன் பவித்தனெடு பொய்யி லுபதிருதன்
இத்திறத்த எஞ்சினுர் பேர்.

இவை இடைச் செருகல் என்று கூற முடியுமோ?

### *பிற இயல்புகள்*

இந்நூல்களில் தெளிவும் சொற்சுருக்கமும் பொருத்தமான உவமையும் கருத்தைக் கவரும் கதைகளும், மறவாதபடி மனத்தில் பதியும் எளிமையும், தொட்ட தொட்ட இடந்தோறும் விளங்குகின்றன. ஆடிநிழல் போலமையும் சூத்திரத்தையும் இவை நினைப்பூட்டுகின்றன. பிற்காலத் தெழுந்த நன்னெறி, நீதிநெறிவிளக்கம், நல்வழி, வாக்குண்டாம், நீதி நூல், அறநெறிச்சாரம் முதலியவற்றிற்கு இவையே மேல்வரிச் சட்டமாக அமைந்தன.

### *பெயரின் நுட்பம்*

சமணர்கள் பௌத்தர்களைப் போல உண்டியும், உறையுளும், கல்வியும் மக்களுக்கு வழங்கியதோடு பிணி

தீர மருந்தும் உதவி வந்தனர். இந்த நூல்களில் இவற்றை விளக்குவதோடு திரிகடுகம், ஏலாதி, சிறு பஞ்சமூலம் போன்ற மருந்தின் பெயர்களே தம் பெயர் களாக அமைய வந்தமையும் காணலாம். அந்த நாளையப் போக்காகவும் இவை ஆய்விட்டன. இதன் ஆசிரியர்கள் வடமொழிப் பயிற்சியும் மருந்து வழக்கும் தமிழ் உணர் வோடு பெற்றிருந்தமையும் உணரலாம்.

# 6. அறநிலைக் கதைகள்

பதினெண்கீழ்க்கணக்குப் போல் ஆகாமற்போனாலும் அவைபோல அறநிலையைப் பற்றியனவற்றை இங்குக் கூறலாம்.

**விலங்குகள்**

விலங்குகளின்மேல் வைத்து அறத்தினை விளக்கிக் கதைகள் கூறுவதனை எல்லா நாட்டிலும் காணலாம். வேதமே, பொருளறியாது கத்தும் தவளைகளைப் பற்றிப் பாடுகிறது. விலங்குக ளிடத்திருந்து பல படிப்பினைகளை மக்கள் அறிவதனை உபநிடதத்திலும் இதிகாசங்களிலும் காணலாம். ஈசாப்புக் கதைகளை அறியார் யார்? புத்த சாதகக் கதைகளும், இத்தகைய கதைகளாக வழங்கிய வற்றையே புத்தர் பழம் பிறப்பாக அமைத்து உண்மைகளை விளக்கக் காண்கிறோம். அறம் விளக்கும் கதைகளாகவும் அரசியலை விளக்கும் கதைகளாகவும் பஞ்ச தந்திரக் கதை சிறந்தோங்கியது. இது, பழைய நூலே ஆயினும் கதையையும் கூறி உண்மையையும் அடக்கி ஒரு பாட்டாகப் பாடும் வழக்கமும் அங்கே காண்கிறோம். வளர்த்த கீரியின்மேல் இரத்தக் கறை கண்டு அது குழந்தையைக் கொன்றுவிட்டதாக வரும் கதை சிலப்பதிகாரத்திலும் வருகிறது. அதனைச் சுட்டும் வடமொழிப் பாட்டொன்றினை அந்த நூல் சுட்டுகிறது. ஆனால், பழைய பஞ்சதந்திரத்தில் பார்ப்பனன் கீரியை ஆய்ந்

தோய்ந்து பாராமல் கொன்றதாகப் பாட (P. 255, KEITH'S History of Sanskrit Literature) இச் சிலப்பதிகாரத்திலோ பார்ப்பனி கொன்றதாக வருகிறது. பெருங்கதை இத் தகைய பல கதைகளைக் கூறியிருத்தல் வேண்டும்.

### தொல்காப்பியம்

தொல்காப்பியம் இத்தகைய கதைகளை அறிந்திருந்த தாக முன்னரே எடுத்துக் காட்டினோம். நச்சினார்க்கினியர் சிறுகுரீஇஉரை என்ற ஒன்றினைப் பற்றிப் பேசுகிறார். நரிவிருத்தம் எனத் திருத்தக்கதேவர் பாடியதாக வழங்கும் நூலில் வரும் கதை பழைய பஞ்சதந்திரத்தில் மித்ர லாபத்தில் வரும் கதையாகும். பேராசை கொண்ட நரி, யானையும் மானும் வேடனும் அம்பும் கண்டு எத்தனையோ நாட்களுக்கு விருந்து கிடைத்தது என நாவில் நீரூறக் கணக்கிட்டுப் பின் முதல் நாள் உணவாக நாண் கயிற்றை நக்கியதும் அம்பு அதன் உடலிற் பாய உடனே இறந்தது. இதிலிருந்து உலகத்தின் பேராசையை விளக்கி அறம் பாடுகின்றார் திருத்தக்கதேவர். பல கிளைக் கதைகளையும் கூறுகின்றார்.

### தேவாரம்

குழந்தைகளுக் கேற்ற அறநூல்களாகக் கிளிவிருத்தம், எலி விருத்தம், நரிவிருத்தம் முதலான நூல்களைச் சமண ஆசிரியர்கள் கற்பித்து வந்தனரெனத் தேவாரத்தால் தெரியவருகிறது. இவை இப்போது கிடைக்க வில்லை. திருத்தக்கதேவர் எழுதிய நரிவிருத்தம் வேறு. வீரசோழிய உரையாசிரியர், பழைய நரிவிருத்தத்தில் கலித்துறைகளும் உள்ளன என்று கூறுகின்றார். கட்டளைக் கலித்துறைக்கே விருத்தம் என்ற பெயர் வழங்கியதைத் திருநாவுக்கரசர் திருவிருத்தத்திலும் நம்மாழ்வார் திருவிருத்தத்திலும் காணலாம். திருத்தக்கதேவர் பாடிய நரிவிருத்தம் அவ்வாறு அமையவில்லை.

### கிளி விருத்தம்

கிளி விருத்தம் என்பதற்கும் சுகசப்தசதி என வடமொழியில் வழங்கும் கதைகட்கும் தொடர்புண்டோ என்பது விளங்கவில்லை. சைனப் பேராசிரியர்க்கு இந்தக் கதைகள் தெரியும் என்றும் வடமொழியில் இவற்றை ஒரு சுவேதாம்பர சைனர் எழுதியுள்ளார் என்றும் தெரிவதால், ஞானசம்பந்தர் கிளி விருத்தம் எனக் கூறியது வடமொழிக்கும் முன்னூலாகத் தமிழில் சைனரிடையே வழங்கி யிருக்கலாம்.

### எலி விருத்தம்

எலிவிருத்தம் என்பது பஞ்சதந்திரத்தில் மித்ர லாபத்தில் புறுவைக் காப்பாற்றிய எலியின் கதையோ அதுபோன்ற தொன்றோ விளங்கவில்லை.

### நரி விருத்தம்

நரிவிருத்தம் திருத்தக்கதேவர் கதை போன்றதோ, பஞ்சதந்திரத்தில் கரடக தமனர் என வரும் நரிகளின் கதைபோன்றதோ விளங்கவில்லை.

### பிற கதைகள்

சைனரிடையே சிறப்பாக வழங்கியவை அறத்தினை விளக்கும் கதைகளேயாம். பழங்கதைகளை அறம் விளக்கும் வகையில் மாற்றிக்கொள்வது உண்டு. பல கதைகள் பிற்காலத்தே தோன்றியவை வசனநூல்களாக இன்னும் அச்சில் வாராமல் ஏட்டில் இருக்கக் காண்கிறோம்.

### மணிப்பிரவாளம்

தேவாரத்தில் சமணரைப் பற்றிய பல குறிப்புக்கள் வருகின்றன. ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலார் என்பது அத்தகைய குறிப்புக்களில் ஒன்று. இவர்கள் இரு மொழியிலும் வல்லவராய் இருந்ததோடு பிரா

கிருதத்தில் சிறந்திருந்தனர் என்றும் தேவாரத்தால் விளங்குகிறது. எனவே, இருமொழிப் பயனறிகிலார் என்பது அவர்கள் எழுதிய மணிப்பிரவாள நடையைக் குறித்ததோ என்று ஐயப்பட இடமுண்டு.

### களப்பிரர்

இங்குக் கூறிய அறநூல்களில் பெரும்பான்மையன களப்பிரர் காலம் என்ற இருட் காலத்தில் தோன்றியன ஆகலாம். வடமொழியும் பிராகிருதமும் சிறந்து விளங்கிய காலத்தில் தமிழ் மறைந்தொழியாதபடி காப்பாற்றிய பெருமை இந்த நூல்களுக்கே பொருந்தும். திருநாத குன்றக் கல்வெட்டு தமிழ் எழுத்தில் கிடைத்த கல்வெட்டுக்களில் பழையது; அது சமணக் கல்வெட்டு; கீழ்வருமாறு உள்ளது; அது, ''ஐம்பத்தேழனசனந் நோற்ற சந்திரநந்தி ஆசிரிகர் நிசீதிகை'' (T. A. S. I. p. 231). இதுவும் மணிப்பிரவாள நடையாக அமைந்துள்ளதனைக் காணலாம்.

# காப்பியம்

## 1. சிலப்பதிகாரம் - காப்பியம்

### காப்பியத் தொகை

காப்பியங்கள் அல்லது தொடர்நிலைச் செய்யுள்கள் சங்க காலத்தில் வேரூன்ற வில்லை. சிறு பஞ்ச காவியம் என்றும் பெரும் பஞ்ச காவியம் என்றும் இரண்டாகப் பின்வந்தவர்கள் பேசியுள்ளார்கள். பெரும் பஞ்ச காவி யங்களாவன சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பனவாம்.

### சிலப்பதிகாரம் – ஆசிரியர்

சிலப்பதிகாரம் இளங்கோவடிகள் எழுதியதென வழங்குகிறது. இளங்கோவடிகள் சேரன் செங்குட்டு வனது தம்பியாரென்று சிலப்பதிகாரமும் கூறுகிறது.

**சிறப்பு:** இந்த நூலின் தலைவனான கோவலன் ஒரு வணிகன். இந்த நூலின் தலைவி கண்ணகி ஒரு வணிகப் பெண். இப்போதிருக்கின்ற தமிழ்க் காப்பியங்களில் மிகப் பழைமையானதான இச் சிலப்பதிகாரம் அரசர் முத லியோரைக் காப்பியத் தலைவராகக் கொள்ளாமல் பொது மக்களையே தலைவராகக் கொள்ளும் குடிமக்கட் காப்பிய மாக விளங்குவது இதன் சிறப்பாம். இது வணிக மக்கள் சிறப்படைந்த காலத்துக் காப்பியம் ஆகலாம்.

**கதை:** காதலனும் காதலியுமாக இவ்விருவரும் மணந்து காதல் வாழ்வு வாழ்ந்து வருகையில், ஆடல் பாடலில் தலைசிறந்து அரசியலில் பட்டமும் பெற்று உயர்ந்த மாதவியினிடத்து ஈடுபட்டுக் கண்ணகியை மறந்து இன்ப வாழ்வு வாழ்கின்றான் கோவலன். பணம் சுருங்கும்பொழுது அடிமனத்திலிருந்த கண்ணகியின் எண்ணம் மேலோங்கப் பரத்தமை வாழ்வை வெறுப்பவனாய் மாதவியை ஐயுற்று வெறுப்புக் கோட்டையைக் கட்டி விடுகின்றான் கோவலன். கண்ணகியிடம் திரும்பிவந்து அவள் சிலம்புகொண்டு கண்காணாத இடத்தில் வாணிகம் செய்து உயர, அவளோடு மதுரைக்குப் புறப்படுகின்றான். கவுந்தி அடிகள் என்கிற சமணப் பெண்துறவி சமண வாழ்வையெலாம் விளக்கிக்கொண்டு அவ்வாழ்வில் யாரேனும் மயிரளவேனும் பிறழ்கிறார்களா என்பதையே காணும் கண்கொண்டு உடன்வர, அப்பரிட்சையிலெல்லாம் இருவரும் தேறியது கண்டு ''கற்புக்கடவுள்'' என அந்த அம்மையார் கண்ணகியை வாழ்த்த மூவரும் மதுரை போய்ச் சேர்கின்றார்கள். இடையே, மாதவி குற்றமற்றவள் என்பதைக் கோவலன் உணர்கிறான். மாடலன் என்ற மறையவன் இதுவரையில் நாம் அறியாத கோவலன் பண்புகளைக் கூறி, 'கருணைமறவன்' என்றும் 'செல்லாச் செல்வன்' என்றும், 'இல்லோர் செம்ம'லென்றும் அவனை வாழ்த்திக் கோவலன் செய்ததெல்லாம் இப்பிறப்பில் நல்வினையே என முடிவு கூறுகிறான். பாண்டிமாதேவியின் காற்சிலம்பைக் களவாடிய பொற்கொல்லனிடத்தே கோவலன் கண்ணகியின் சிலம்பை விலையறியப் போகின்றான். களவாடிய சிலம்பும் கைவந்த சிலம்பும் ஒன்றாக இருப்பது கண்ட பொற்கொல்லன் ''இதுதான் தக்க சமயம்'' என்று கோவலனையே கள்வனென அரசனிடம் கூறுகிறான். கூத்தினைக் கண்டு தான் மயங்கியதை உணர்ந்து பாண்டிமாதேவி ஊடல் கொள்ள, அந்த ஊடலைத் தீர்க்க விரைந்து செல்லும் நெருக்கடியில் பொற்கொல்லன் இடைவந்து இவ்வாறு கூற, ''கள்வனைக் கொல்வதற்காகக் கொணர்க'' என்று கூறுவதற்குப்

பதிலாக, ''கொன்று கொணர்க'' என்று தவருகக் கூறி விடுகின்ருன் பாண்டியன். கோவலன் கொலை உண்கிருன். செய்தி பரவுகிறது. ஊர் நடுங்குகிறது. கண்ணகி புலம்பிப் பாண்டியனிடம் செல்கின்ருள். பாண்டியனது சிலம்பினுள் கல் அவன் நாட்டுச் செல்வமாம் முத்தாகும். கோவலன் களவாடியதாக அவன் கையிலின்றும் கைப் பற்றிய தன் காற்சிலம்பை உடைக்கின்ருள் கண்ணகி. முத்தினைக் காணேம். மாணிக்கமே வந்தது. அரசன் தானே கள்வன், கொலைஞன் என உணர்ந்ததும் அப் போதே உயிர்விடுகிருன். பாண்டிமாதேவியும் உடன் உயிர் துறக்கின்ருள். பொறுமையே உருவான கண்ணகி யின் உள்ளத்தில் கணவன் கள்வனெனக் கொல்லப் பட்டது எரிமலைபோல் பொங்குகிறது. மதுரை எரிய வேண்டுமென்கிருள்; தனது வலது கையால் இடது தனத்தைத் திருகி எறிகிருள். மதுரை எரிகிறது. மது ரைத் தெய்வம் நடந்தன எல்லாம் ஊழின் முன்னேற் பாட்டின்படியே மயிரிழையுந் தவருது நிகழ்ந்தன என்று சுட்டிக் காட்டுகிறது. தான் என்ற முனைப்பெலாம் அடங்கி, யாரும் துணையிலாது வைகை நதிக் கரையோர மாகவே சென்று, பதினைந்தாம் நாள் சேரநாட்டுச் செங் குன்றத்தில் ஒரு வேங்கை மரத்தின் நிழலில் நிற்கின்ருள்; தேவ விமானத்தில் கோவலனேடு உயரச் செல்கின்ருள். இதனைக் கண்டு வியந்த குறவர்கள் சேரன் செங்குட்டு வனுக்குக் கூற, அவன் கண்ணகிக்குக் கோயில் கட்டுவதற் குக் கல்லெடுத்துவர இமயமலைக்குச் செல்கின்ருன். எதிர்த்த வட அரசராம் கனகவிசையரைக் குயிலாலு வத்தில் தோற்கடித்து, அவர்கள் தலைமேலேயே கல்லை வைத்து, இடையே கங்கையில் நீராட்டித் தமிழ் நாட்டுக்குக் கொண்டுவருகிருன். அந்தக் கல்லில் கண்ண கியின் வடிவத்தைச் செதுக்கிக் கோயிலமைக்கின்ருன். கண்ணகி அசரீரியாக வாழ்த்துகிருள். பாண்டியன் மேல் இருந்த வெறுப்பும் மாறுகிறது. புகழுடம்பு கொடுத்த பாண்டியனே தனது தந்தையென்று புகழ்கின்ருள். இந்தத் திருவிழாவுக்கு இலங்கைக் கயவாகுவும் வருகிருர்.

***சிலப்பதிகாரம் என்ற பெயர்***

*பெண்ணொருத்தி, அனைத்தையும் பொறுக்கும் நோன்புத் தீயில் குறைகளையெல்லாம் எரித்துப் பொன்னே போலத் தூயவளாய்த் தெய்வமாகின்ற கதையே சிலப்பதிகாரக் கதை. அவளது திருமணத்தின்போது காலில் சிலம்பணிகிறாள் கண்ணகி. கோவலன் பிரிந்தபொழுது சிலம்பு பேழைக்குள் புகுகிறது. அவன் மாதவியைப் பிரிந்து வந்ததும் விற்பதற்கு அதைக் கையில் எடுக்கின்றாள். அவளன்றிப் பிறர் அதனால் வாழார் போலும். அதனை எடுத்து விற்கச் சென்ற கோவலன் மதுரையில் கொலையுண்கிறான். பாண்டிமாதேவியின் சிலம்பென அதனைக் கைப்பற்றிய பாண்டியன் உண்மை யுணர்ந்து உயிர் துறக்கின்றான். அணிவாரின்றிச் சிலம்பு சிதைந்து கிடக்கிறது. பாண்டியன் மேலெழுந்த வெறுப்பெலாம் மாறி, அன்புருவாய்க் கண்ணகி செங்குட்டுவ னெதிரே கடவுளாய்க் காட்சியளிக்கும்பொழுது பழையபடி காலில் பொற்சிலம்பு பொலிந்து விளங்குகிறது. இவ்வாறு சிலம்பொடு சேர்ந்து இந்தக் கதை ஓங்கியும் தாழ்ந்தும் வீறு பெற்றும் வருவதால், சிலப்பதிகாரம் என்ற பெயரைப் பெற்றுள்ளது பொருத்தமேயாம்.*

# 2. ஆசிரியர் சமயம்

### சமணக் குறிப்பு

இளங்கோ அடிகள் சமணர் என்பர் பலர். சைவர் என்பர் சிலர். இவருடைய அண்ணன் சைவன் என்பதை இவரே கூறுகிறார். ஆனால், இவர் கூறவரும் கோவலனும் கண்ணகியும் சாகும்வரை சமணவாழ்வு வாழ்கின்றனர். இவர்களுடைய குணங்குறைகளைப் பூதக் கண்ணாடியில் வைத்துப் பார்ப்பதுபோல் பார்க்கவரும் கவுந்தி யடிகளும் சமண வாழ்வு வாழ்கின்றார். சாரணர்கள் நீண்டதோர் உபதேசம் செய்வதும் சமணக் கொள்கை யைப் பின்பற்றியேயாம். இந்த வகையில் இஃது ஒரு சமணக் காவியம் எனலாம். இளங்கோ அடிகள் அருகன் கோயிலில் அரசு துறந்து இருந்தார் என்று அடியார்க்கு நல்லார் உரை எழுதுகிறார்.

### தன்மயமாதல்

ஆனால், இளங்கோ அடிகள் தலைசிறந்த காப்பியப் புலவராதலின் பாத்திரங்கள் நிலையை உள்ளவாறு உணர்த்த வல்லவராய்த் தம் கொள்கை முதலியவற்றைத் தனியே பிரித்து யாரும் கூறமுடியாதபடி இந்தக் காப்பியத்தைச் செய்துள்ளார். காப்பியத்தினும் வேறாக இவருடைய கொள்கை இதுவென்று கூறுவது அவர் காப்பியத்தைப் பழிப்பதே போலாகும். சமணப் பாத்திரங்களோடு ஒன்றாகிச் சமணரே போலப் பாடுகின்றவர், குறவரே

போலாகி முருகனை வழிபடுபவராகவும், வேடுவரே போலாகிக் காளியை வழிபடுபவராகவும், ஆய்ச்சியரே போலாகி ஆழ்வார்கள் போலத் திருமாலை வழிபடுவோராகவும் பாடுகின்றார். பரந்த மனப்பான்மையோடு பிற தெய்வங்களைக் குறிக்கும்பொழுதும் அத்தெய்வங்களை வழிபடுபவர் எவ்வளவு உயர்வாகக் கூறுவரோ அவ்வளவு உயர்வாகவும் பாடுகின்றார். சிவனைப் பிறவா யாக்கைப் பெரியோன் என்று பாடுகிறார்.

### பொதுமை

பொதுமை மனப்பான்மை இவருடைய சிறப்பியல்பு எனலாம். கோவலன் இறந்தபின் ஒருசிலர் துறவுக் கோலம் கொள்கின்றனர். கோவலன் தந்தை சமணத் துறவை மேற்கொள்கின்றார். கண்ணகியின் தந்தை ஆசீவகரது துறவி ஆகின்றார். மாதவி பௌத்தத் துறவி ஆகின்றாள். இங்கும் அவருடைய பொதுநோக்கமே விளங்குகிறது.

### மங்கலம்

காப்பியம் ''திங்களைப் போற்றுதும்'' என்று தொடங்குவதால் இவர் இயற்கையை வழிபடுகின்றார் என்று கூறுதற்கும் இல்லை. இவை கடவுள் வாழ்த்தாக வந்தவையு மல்ல. இவ்வாறு தொடங்குவது சோழனது புகாரைச் சிறப்பிப்பதற்கு எடுத்த எடுப்பாகும். இவ்வாறு உரையாசிரியர்களும் தம் உரையில் பொருள் எழுதிக்காட்டுவது காணலாம். பரந்த மனப்பான்மையோடு ஒரு மதத்தினர் மனமும் புண்படாதபடிப் பாடி, தாம் எடுத்துக்கொண்ட காவியத் தலைவர்களுக் கேற்பச் சமண வாழ்வினைப் பரக்கப் பேசி, வேற்றுநாட்டில் அண்டு வாரற்ற பெண்ணும் தன் ஒழுக்கத்தால் தெய்வமாகின்ற நற்செய்தியை விளக்கிப் பத்தினி வழிபாட்டினையே சிறப்பாகக் கூறும் பெரியவரே இளங்கோ அடிகள் எனலாம்.

**சங்கப் பாட்டா?**

இந்த நூலிலிருந்து தமிழ் இசையினைப் பற்றியும் தமிழ்க் கூத்தினைப் பற்றியும் தமிழ் அரங்கினைப் பற்றியும் பல செய்திகளை அறியலாம். இதனை நாடகக் காப்பியம் என்றும் கூறுவர். இதிலுள்ளவை முப்பது காதைகள் அல்லது பாட்டுக்கள். ஒவ்வொரு பாட்டும் சங்க காலத்துப் பாடல் போலத் தனித்தனிச் சிறந்து விளங்கும் அழகோடு பொலிகின்றது. இதனால், கதையைத் தொடர்ந்து கூறிப் போவது இவருடைய அடிப்படை நோக்கமானாலும் அது மேல்வாரியாகப் பார்க்கும்பொழுது புகார்க் காண்டத்தில் நன்கு விளங்க வில்லை. தனிப் பாடலிலேயே திளைத்து நின்ற சங்க காலத்தில் வளர்ந்த தமிழ்ச் செய்யுள் முறையில் தொடர்நிலைச் செய்யுள் பாடப் புகுந்தால் இப்படித்தான் முடியும் போலும். இக்குறிப்பு ஒன்றே சிலப்பதிகாரம் தமிழ் வரலாற்றில் சங்கத் தமிழின் வளர்ச்சி என்பதனை நிலை நாட்டும். இந்த முறையில் வாழ்க்கையின் பின்னணி மிகச் சிறந்து இக்காப்பியத்தில் விளங்குவதால் கதை இயற்கையோடு ஒன்றிப் போகிறது. அதனால் கருத்தாழம் உடையதாகிறது. விஞ்ஞானிகள் கூற்றுப் போலவும் கூடத் தோன்றுகின்றது. இவ்வாறு தன்னை மறந்து கவி ஒருவர் பாடுவது அருமையேயாம். இந்தப் போக்கே சங்க காலப் பாடல்களின் இயல்பினை நமக்கு நினைப்பூட்டுவதால் இக்காப்பியம் சங்க காலத்தின் முடிவிலோ சங்க காலத்தை அடுத்தோ எழுந்திருந்திருத்தல் வேண்டும் எனலாம். பல்லவரைப் பற்றிய குறிப்பொன்றும் மறந்தும் இதனுட்புகாமை இங்கே குறிக்க வேண்டும்.

# 3. சிலப்பதிகாரத்தின் காலம்

## மதுரை எரிந்த நாள்

சிலப்பதிகாரம் ''ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து அழல்சேர் கூட்டத்து அட்டமி ஞான்று வெள்ளி வாரத்து ஒள் எரி உண்ண'' என்பதற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையைக்கொண்டு காலஞ்சென்ற எல். டி. சாமிக் கண்ணுப்பிள்ளை என்பவர் 23 ஜூலை 756 என்று கணக்கிட்டுள்ளார். ஆனல், அவரே அடியார்க்கு நல்லார் தந்த குறிப்புகள் தவறுடையன என்று காட்டுகிருர். இராமச்சந்திர தீக்ஷிதர் தம்முடைய வானநூல் அறிஞராம் தோழரைக் கொண்டு கி. பி. 2-ஆம் நூற்ருண்டில் நடந்ததாகக் கொள்ளலாம் என இக்குறிப்புக்களை விளக்குகிருர். குறையுடைய குறிப்புக்களைக் கொண்டு நிறைவாக்க முயல்வது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை.

## காப்பிய காலம்

சிந்தாமணி, பெருங்கதை முதலிய காப்பியங்கள் தோன்றிய காப்பிய காலத்தில்தான் சிலப்பதிகாரமும் தோன்றியிருத்தல் வேண்டும் என்பர் சிலர். தேவார காலத்தில் வடமொழியும் தமிழும் கலந்து உறவாடிய போது வடமொழிக் காப்பியங்கள் போலத் தமிழிலும் அமைக்க முயன்ற முயற்சியின் பயனே சிலப்பதிகாரம்

முதலிய காவியங்களென்பர். இவ்வாறு கொள்வது சாமிக்கண்ணுப்பிள்ளை அவர்கள் சிலப்பதிகாரத்தில் வரும் காலக் குறிப்புக்களைக் கொண்டு வரையறுத்த முடிபுக்கும் ஒத்ததாகும் என்பர்.

**காப்பியம்**

காப்பியம் என்ற சொல் சிலப்பதிகாரத்தில் வரவில்லை. ஆனால், காப்பியம் என்ற கருத்து உலகில் ஒவ்வொரு நாட்டிலும் மிகப் பழைய இலக்கியக் கருத்தாக வழங்கக் காண்கிறோம். முதல் இலக்கியம் எந்த நாட்டிலும் காப்பியமாகவே நிலை பெறுகிறது. ஹோமரின் கிரேக்கக் காப்பியங்களையும் வால்மீகியின் வடமொழிக் காப்பியத்தையும் இங்கே நினைவுகொள்ளுதல் வேண்டும். காப்பியம் செய்யும் வழக்கம் தென்னாட்டிற் புதியது மன்று. ஆந்திரர்கள் அரசாண்ட காலத்தில் குணாட்டியர் பைசாச மொழியில் பிருகத்கதா என்ற காப்பியத்தை இயற்றினார். 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டில் கங்க ராஜனான துர்விநீதன் அதே கதையை வடமொழிக் காப்பியமாகச் செய்தருளினான். பாண்டியர் செப்பேடுகள் சங்கம் அமைத்துப் பாரதத்தைத் தமிழில் மொழி பெயர்த்ததனைப் பாண்டியரது பழம் பெருமையாகப் பேசக் கேட்கிறோம்.

**வடமொழிச் சொற்கள்**

வடமொழிச் சொற்கள் அகப்புற இலக்கியத்தில் மிக்கு வழங்காமற் போனாலும், சைன பௌத்தர்களிடையே அவர்களது உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் மிக்கே வழங்கி இருக்கும் என்பது கி. மு. மூன்றாம் நூற்றாண்டைய குகைக் கல்வெட்டுக்களிலிருந்து விளங்குகிறது. சமய சம்பந்தமான பாடல்களில் வடமொழிச் சொற்கள் மிகுதியாக வருவது இயல்பு. இதற்கேற்ப அருகனைப் புகழுமிடத்தில் அவருடைய பெயர்மாலையாக

வரும் சொற்றொடர்கள் சிலப்பதிகாரத்தில் பெரும் பான்மையும் வடமொழியாக அமைதல் இயல்பேயாம். (சிலப். 10 – 180)

**வடநூல்கள்**

வடமொழி நூல்களோடு அந்நாளைய தமிழ்நாட்டு அறிஞர்கள் தத்தம் மதநூல்கள் வழியே பெரிதும் தொடர்பு கொண்டு வாழ்ந்தன ராதலின் மயமதம், கர வடம், பரதம் முதலிய கலைகளில் - நூல்களில் என்று கூறவேண்டா - சிறந்த ஆராய்ச்சி உடையவர்களாக வாழ்ந்து அக்கருத்தைக் கற்றோரிடையே பரப்பிவிட்டி ருப்பர். பஞ்சதந்திரக் கதையில் கீரியைக் கொன்ற பார்ப்பனத்தியைப் பற்றிய கதை கோவலன் கதையோடு தொடர்பு கொண்டு வருகிறது. பழங்கதைகளைப் புதிய வர்களோடு தொடர்புபடுத்தி ஐதிகமாக உலகம் பேசி வருவது இன்றும் நாம் காண்ப தொன்று. பஞ்சதந்திரக் கதை, ஜாதகக் கதை முதலியனவற்றில் கதைக்குள் கதை எனச் சைனுப்பெட்டி போல் அமையும் அமைப்புமுறை புதிதானாலும் அந்தக் கதைகளில் பல உலகெங்கும் பரவி யவையே எனலாம். ஜைன பௌத்தர்களால் இத்தகைய கதைகள் எங்கும் பெருவழக்காயின. இவை பஞ்ச தந்திரம் என ஒரு நூல் வடிவு பெற்றபின்தான் தமிழ் நாட்டில் பரவின என்று சொல்வது பொருந்தாது.

**பதினெண்கீழ்க்கணக்கும் சிலப்பதிகாரமும்**

திருக்குறளை இளங்கோ அடிகள் எடுத்தாளுவதால் அவருக்குப் பிந்தியதே இந்நூல் எனலாம். ஆனால், பிற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலிருந்து இளங்கோ அடிகள் எடுத்தாளுகிறார் என்பதினும் அவை இவரை எடுத்தாள்கின்றன என்பதே முறையாம். நான்மணிக் கடிகையிலிருந்து எடுத்தாளப்பட்டதாகக் காட்டப்படும் பகுதி ''அல்லவை செய்தார்க்கு அறங் கூற்றம்'' என்ப

தாம். (நான்மணிக்கடிகை 84), (சிலப் 20. 82). இஃது அந்நாளில் வழங்கிய பழமொழியே என்று கொள்ளத் தகும். பழமொழியில் இருந்து எடுத்ததாகக் காட்டப் படும் ''முற்பகற்செய்தான் பிறன்கேடு தன்கேடு பிற்பகற் காண்குறும்'' (சிலப். 20. 1-3) என்ற பகுதியும் பழைய நாளையில் வழங்கிய பழமொழியை ஒட்டியும், ''பிறர்க் கின்னு முற்பகற் செய்யின் தமக்கின்னு பிற்பகற் தாமே வரும்'' என்ற குறளை அடியொற்றியும் வருவதாகும். ஆசாரக்கோவையி (65) லிருந்து எடுத்தமைத்தனவாகக் காட்டப்படும் பகுதி (சிலப். 21. 53) பழைய வழக்கே யாம். போர் தொடங்குவதற்கு முன், பண்பாட்டினையும் மனித இனத்தினையும் காப்பதற்காகவே போரிடும் இயல்பு இல்லாதாரைக் காவலான இடத்துக்குக் கொண்டு சென்று காத்தல் புறநானூறும் அறிந்திருந்த அறவழியாம். (புறம். 9) அங்கே கூறிய வரிசையின் விளக்கமே ஆசாரக் கோவை கூறுவதும் சிலப்பதிகாரம் கூறுவதும் எனலாம். எனவே, பதினெண்கீழ்க்கணக்குகளுக் கெல்லாம் பிந்தி யதே சிலப்பதிகாரம் என்பதும் பொருந்தாது.

### புது வழக்கு

சில புதிய வழக்குகள் என ஒரு சில காட்டப்பெறு கின்றன. இவை திசை மொழி வழக்காய் இலக்கியத்தில் புகுந்தன ஆதல் வேண்டும் எனத் திருவள்ளுவரைப் பற்றிக் கூறிய போது குறிப்பிட்டதனை இங்கும் மனத்தில் கொள்ளுதல் வேண்டும். நாடகக் காப்பியமாதலின் பேச்சு வழக்குச் சொற்கள் இதில் பயின்றுவருதல் இயல்பு. ஒருசில பிற்காலத்தில் ஏடு எழுதியவரால் வந்து புகுந்தும் இருக்கலாம். வாரம், திதி, பக்கம் என்பனவற்றைக் குறிப்பன இராமருடைய பிறந்தநாட் குறிப்புப் போலப் பின்னோர் நுழைத்ததும் ஆகலாம். கல்வெட்டில் வாரம் குறிப்பது பிற்கால வழக்காம். ஆனால், அதுகொண்டு முன்னாளில் வாரம் வழங்கவில்லை என்பதற்கு இல்லை. வாரம் வைகானசத்தில் சுட்டப்

பெறுவதால் பழைய வழக்கேயாம். வைகானசம் மனு வால் கூறப்பெறுவது. இரண்டாம் நூற்றுண்டிற்கும் முந்தியதாம். தேவந்தி சொல் ''முதலியன'' ஆசிரியர் எழுதியன ஆதல் வேண்டும் என்ப தில்லை.

### பிற்காலப் பொருள்கள்

அடைக்காய், திரையல் என்பன பின்னுளைய வழக் காதலின் எட்டாம் நூற்றுண்டையது என்பர் சிலர். வாக்படர், வாத்ஸ்யாயனர், காளிதாஸர் முதலியோர் இவற்றைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர். சில ஸ்மிருதி களும் குறிப்பிடுகின்றன. பழைய கிருஹ்ய சூத்திரங் களிலும் தர்ம சூத்திரங்களிலும் குறிப்பிடப்படாமை யால் கி. மு. 3-ஆம் நூற்றுண்டுக்குப் பின்னரே இந்த வழக்கம் பரவி இருத்தல் வேண்டும். கிறிஸ்து சகாப்தம் பிறந்த காலத்தை ஒட்டித் தமிழ்நாட்டில் இந்த வழக்கம் பரவி இருக்கலாமென ஆராய்ச்சிவாணர் கருதுகின்றனர். (Kane's History of Dharma Sastras Vol. II p. 734).

### மணிமேகலையும் சிலப்பதிகாரமும்

மணிமேகலையில் உள்ள குறிப்புக்கள் பிற்காலத்தன ஆதலின் அதனோடு சேர்ந்த இரட்டைக் காப்பியமாகக் கருதப்படும் சிலப்பதிகாரமும் பிற்காலத்த தாகும் என்பர் சிலர். மணிமேகலை எழுதிய சாத்தனார் சங்க காலச் சீத் தலைச் சாத்தனாரினும் வேருகலாம். மணிமேகலைக்கும் சிலப்பதிகாரத்துக்கும் எழுதப்பெற்றுள்ள பதிகங்கள் பின்னல் எழுந்தனவும் ஆகலாம். என்ருலும் சிலப்பதி காரப் பதிகத்தினை இளம்பூரணர் (தொல். பொருள். மெய்ப்பாடு. 7 உரை) எடுத்தாளுதலினல் அவர் கால மாகிய பதினேராவது நூற்றுண்டுக்கு முந்தியதே என லாம். பதிகங்களை நம்பாமற் போவதால் குறையொன்று மில்லை. மணிமேகலை சிலப்பதிகாரத்துக்குப் பின்

எழுந்தது என்று கொள்வதாலும் குறையொன்று மில்லை. பிந்திய தென்றால் பல நூற்றாண்டுகள் பிந்திய தென்று கொள்வதற் கில்லை.

**கோவலன் மூதாதை**

மணிமேகலைக் காப்பியத்தில் வஞ்சிமாநகரில் கோவலன் தந்தை மாசாத்துவான் பௌத்தத் துறவியாய் இருந்தான். மணிமேகலை அவனைப் பார்த்தபொழுது, மாசாத்துவான், ''கோவலனுக்கு ஒன்பது தலைமுறை முன்னோன் ஆகிய மற்றொரு கோவலன், வஞ்சிமாநகரின் அரசன் ஒருவனுக்குக் காதற்பாங்கனாக இருந்து தன்னுடைய செல்வத்தை எல்லாம் தானமாக வழங்கித் தவமேற்கொண்டான்'' என்று அவளுக்குக் கூறுகிறான். இந்த முன்னோனைய சேரனை மணிமேகலை, ''குடக்கோச்சேரலன் குட்டுவர் பெருந்தகை விடர்ச்சிலை பொறித்த வேந்தன்'' என்று குறிப்பிடுகிறது. விடர்ச்சிலை பொறித்தல் என்றால் இமய மலையில் சேரனது வில்லாம் சிலையைப் பொறித்தல் எனப் பொருள் கொள்வர். இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன் இவ்வாறு செய்தான் எனப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தின் பதிகம் கூறும். இவன் மகனே செங்குட்டுவன் என்பர். ஆனால், மணிமேகலையோ நெடுஞ்சேரலாதன் என்ற பெயரைக் குறிக்க வில்லை. அது கூறும் சேரன் கோவலனுக்கு ஒன்பது தலைமுறை முந்திய சேரனானால், அச்சேரன் நம் செங்குட்டுவனுக்கும் ஒன்பது தலைமுறை முந்திய சேரன் ஆதல் வேண்டும். எனவே, விடர்ச்சிலை பொறித்ததனைப் பழைய சேர பரம்பரையின் சிறப்பாகவே மணிமேகலை கொண்டதெனல் வேண்டும். அவ்வாறானால் முன்னோர் பெருமையைப் பின்னோர் மேல் ஏற்றிப் பாடும் இந்த நாட்டு வழக்கிற் கேற்பவே, பதிற்றுப்பத்துப் பதிகம் செங்குட்டுவன் தந்தையாகிய இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன்மேல் இமயத்தில் வில் பொறித்த பெருமையை ஏற்றிக் கூறியது எனலாம். மணிமேகலை கூறாத நெடுஞ்சேரலாதன் என்ற பெயரை அது கூறுவ

தாகக் கொண்டு, சிலப்பதிகாரம் செங்குட்டுவனுக்கு எட்டாந் தலைமுறையில் எழுந்தது எனக் கூறுவது அறி வாராய்ச்சிக்கெல்லாம் அப்பாற்பட்டதாய்த் தோன்று கிறது.

### புத்தர் பிறப்பு

புத்தர் கபிலவஸ்துவில் பிறந்து நல்லறம் கூறுவதைக் கேட்டபின் கோவலனும் கண்ணகியும் வீடடைவார்கள் என்றும் மாசாத்துவான் அந்த இடத்தே கூறுகின்றான். புத்தர் என்றால் கௌதம புத்தர் ஒருவரே அல்லர். பல புத்தர்கள் தோன்றுவார்களென்பது பௌத்த புராணம். அப்படிப் பின்வரப் போகிற புத்தர் ஒருவரைப் பற்றி மாசாத்துவான் கூறினானே யன்றி, தனக்கும் முன்னரே பிறந்த கௌதமபுத்தரை அன்றென்பதனையும் உணர வேண்டும்.

### சிலப்பதிகாரம் அறிந்தார்

பதினேழாம் நூற்றாண்டில்தான் கோவலன் கதை எளிய நடையில் அமைந்த அகவலில் வேறொரு நூலாக வழங்கி வந்திருக்கிறது. அதற்கு முன் வழங்கியது சிலப் பதிகாரம் ஒன்றே ஆம். பரிமேலழகர், மயிலைநாதர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், யாப்பருங்கல விருத்தி யுரைகாரர், இளம்பூரணர் முதலியோரால் சிலப்பதிகாரம் காட்டப் பெற்றுள்ளது. (இந்த உரைகளுக்கு முந்திய களவியல் உரையிலும் சிலப்பதிகார எடுத்துக்காட்டுகள் பல உள்ளன. இவ்வுரை ஏழாம் நூற்றாண்டையது தென்று கூறப்பெறும். பிற உரையாசிரியர்கள் இதனைச் சுட்டு தலின் இவ்வுரை 8, 9-ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிந்திய தெனக் கூறுதற்கு இல்லை.)

### நம்பலாமா?

நம்பத்தகாத செய்திகள் வருவதாலே இந்நூலைத் தள்ளி விடுவதற் கில்லை. அத்தகைய நிகழ்ச்சிகளில் இக்

காலத்தின் இயல்பினை நோக்குதல் வேண்டும். தத்துவ சாஸ்திரங்கள் ஐதிகமென்று கூறுவதின் நுட்பத்தை நாம் அறிதல் வேண்டும். தம் நாளைய நிகழ்ச்சிகளைக் கூறும் பொழுது புலவன் இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளைக் கூறுன் என்பதில்லை. காப்பியத்தில் வருவன ஒவ்வொன்றையும் வரலாற்று நிகழ்ச்சி எனக் கொள்ள வேண்டுவதும் இல்லை.

**கண்ணகியின் கதை**

கண்ணகியின் கதையைப் பற்றிய பாடல்கள் பழைய உரைகளிலும் வருகின்றன. பத்தினியே பாடிய பாடலொன்று யாப்பருங்கலவிருத்தியில் ஆரூடச் செய்யுளென எடுத்துக் காட்டப்பெறுகின்றது. நற்றிணை, ஒருமுலை யறுத்த திருமா உண்ணி ஒருத்தி வேங்கை மர நிழலில் நிற்பதைக் கூறுகிறது. உண்ணி என்பது தாமரைப் பூவின் உள் இருப்பதாகிய தாமரைப் பொகுட்டினை உணர்த்துமாஞல் கண்ணகி என்பதனைக் கர்ணிகா (தாமரைப் பொகுட்டு) என்பதன் திரிபாகக் கொண்டு உண்ணி என்பதன் மொழிபெயர்ப்பாகக் கொள்ள இடமுண்டு என்பர். குன்றக் குறவர்கள் வேங்கை நிழலில்தான் ஒருமுலை யிழந்த நங்கையைக் காண்கிருர்கள். கண்ணகி என்ற பெயரும் சங்ககாலத்துக்குப் புதிய தன்று. பேகன் ஒரு கண்ணகியைத் துறந்த கதையைப் பல புலவர்கள் பாடுகின்றனர் அன்ருே? ஆஞல், கண்ணகி என்ற பெயர் ஒப்புமையால் இக்கதைகள் எல்லாம் ஒன்று என்று முடிவு செய்ய இயலுமோ?

**சமய நிலை**

பலராமன், முருகன், மாயோன், சிவன் முதலியோர் கோயில்களைக் குறிப்பதால் சங்க கால வாழ்வு இங்கும் புலஞகிறது. சமயக் காழ்ப்பு இல்லாத ஒரு பொது நெறி சிலப்பதிகாரத்தில் விளங்குகிறது. இத்தகைய காலத்

தைத் தேவார காலத்திலோ தேவார காலத்துக்குப் பின்னே காண்பது அருமையிலும் அருமை. அகவற் பாவாலும் கலி எனத்தகும் பிற இசைப் பாவாலும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாலும் பழைய சங்க இலக்கியம் போல இந்த நூல் அமைந்திருத்தலையும் இங்குக் குறித்தல் வேண்டும். பல்லவ காலத்தைப் பற்றிக் குறிப்பொன்றும் வாராமையும் மனத்திற் கொள்ளுதல் வேண்டும். பல்லவரைக் கூறுது விடுத்தாலும், இது பல்லவர் காலத்து நூலானுல், பல்லவர் காலத்து வழக்க ஒழுக்கங்களேனும் குறிக்கப் பெற்றிருக்க வேண்டு மன்றோ? கயவாகுவும் செங்குட்டுவனும் ஒரு காலத்தவர் எனக் கூறும் கூற்று வரலாற்று அடிப்படையைச் சுட்டுவதாம். ஆதலின், சிலப்பதிகாரம் சங்ககாலத்தின் முடிவிலே தோன்றியதெனலாம். அத்தகைய பழையதொரு நூல் வழங்கி வரும்போது பிற்காலத்தவர்களின் இடைச் செருகல்கள் அதினிடையே புகுந்து மிருக்கலாம்.

### வரலாறு

சிலப்பதிகாரத்தில் காணும் குறிப்புக்களைக் கொண்டு இந்திய நாட்டின் வரலாற்றினை ஆராய்ந்து கி. பி. 2-ஆம் நூற்றுண்டே இக்குறிப்புக்கள் இந்திய நாட்டில் விளங்கிய காலமாகும் என்று இராமச்சந்திர தீக்ஷிதர் அவர்கள் கூறியுள்ளார்.

# 4 மணிமேகலை

**கதை**

மணிமேகலை கோவலனுக்கு மாதவியிடம் பிறந்த மகள். பௌத்த மதத்தில் பற்றுக் கொண்டு தன்னைக் காதலிக்கும் சோழ இளங்குமரன் உதயணன் காதலையும் காதல் வழிச் செல்லும் நெஞ்சினையும் மேற்கொள்ளாமல் தவ ஒழுக்கம் பூண்டு அமுத சுரபி கொண்டு சிறைச் சாலையை அறச்சாலையாக்கிச் சமய உண்மைகளை அறிந்து பௌத்தத் துறவியாகின்றாள். பௌத்த புராணக் கதைகள் நிரம்பிய காப்பியம் இது. இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளின் தொடரே இக்காப்பியம் எனலாம். பொதுமகள் குலத்தில் தோன்றிய பெண் உலகினை உய்விக்கும் துறவியாய் உயர்வதனை இங்கே காண்கிறோம். சாதியை இகழ்தல், பௌத்த அறம் பேசுதல், பிறர் மத இகழ்ச்சி முதலியன இங்கே பொலியக் காண்கிறோம். இதனுள் நாளந்தாப் பல்கலைக் கழகத் தலைவர்களான திங்நாகரும் தருமபாலரும் கண்ட தருக்க நெறியின் மொழிபெயர்ப்பாக வரும் பகுதிகளும் உண்டு. இவை இடைச்செருகல்கள் போலும். மணிமேகலை என்பது பௌத்தக் காப்பியமானாலும் சமண மதத்தினைப் பற்றி அறியவும் உதவுகின்றது. சிலப்பதிகாரப் பெருங்காப்பியத்தில் கூறவேண்டிய வீட்டு நிலையைக் கூறாததால் அதனைக் கூறும் மணிமேகலை சிலப்பதிகாரத்தோடு ஒன்றாக இயைந்து ஒரு காப்பியமாம் என்பர். சிலப்பதிகாரம் நடுக்கின்றி நிலைநின்ற காவிரிப்பூம்பட்டினத்தினைப்

பாட, மணிமேகலையோ புகாரின் ஒரு பகுதியைக் கடல் கொண்டதைப் பாடுகிறது. எனவே, மணிமேகலை பிந்திய நூலென்பது சிலர் கொள்கை.

**மதம்**

அது ஒரு பௌத்த காப்பியம்; பிற சமயங்களை இகழும் நோக்கமும் கொண்டது. சமணர்களைப் பற்றிக் கூறுமிடங்களும் இக் காப்பியத்தில் உண்டு. நல் வாழ்வு வாழாத சுதமதி காரணமாகக் குடர் இழந்த அவள் தந்தையைச் சமணர் தம் பள்ளியில் சேர்க்க மறுத்ததைக் கூறிப் பௌத்தர்கள் தம் புத்தப் பள்ளியில் அவளைச் சேர்த்துக் கொண்டதனைக் கூறுவது சமணர்களைப் பழிப்பதாகுலும் கூடா ஒழுக்கத்தினரோடு எந்த வகையிலும் தொடர்பு கொள்ளாத சமணரது உயர்வையும் குறிப்பாகத் தம்மையும் அறியாமல் மணிமேகலை ஆசிரியர் புகழுகிருர் எனலாம். சமயக்கணக்கர் தந்திறங்கேட்ட காதை, அந்நாளில் தமிழ் நாட்டில் வழங்கிய சமயக் கொள்கைகளைக் கூறிவரும்பொழுது, நிகண்ட வாதமெனச் சமணமதக் கொள்கையையும் கூறுகின்றது.

**ஐவகை மதம்**

இந்தக் காதையில் மணிமேகலை ஐவகைச் சமயம் அறிந்தவள் என முடிவில் கூறப்பட்டாலும் உள்ளே பத்துவகைச் சமயங்கள் விளக்கப் பெற்றிருப்பதை நோக்கும்பொழுது பின் வந்தவர்கள் வேறு ஐந்து சமயக் கொள்கையையும் இதனுள் நுழைத்து விட்டார்களோ என்ற ஐயம் தோன்றுகிறது. வைதிக வாதம், அளவை வாதம் என இரண்டும் ஒன்ருக வழங்கிய பழைய நிலையை இங்குக் காண்கிரேம். சிலப்பதிகாரப் பாத்திரங்களில் சிலர், ஆசீவக மதம், சைன மதம், புத்த மதம் என்ற வற்றில் ஒவ்வொன்றை ஒவ்வொருவர் பின்பற்றித் துற

வடைந்ததனைக் கண்டோம். வேதமதமும், பூதவாதம் என்ற உலோகாயதமும் அன்று பரவி யிருந்திருக்கலாம். இவற்றையே ஐவகைச் சமய மெனலாம். நீலகேசி இந்த ஐந்தொடு சாங்கியம், வைசேடிகம் என்ற இரண்டுங் கூட்டிச் சொல்லும். மணிமேகலை இன்றுள்ள வகையில் அளவை வாதத்தோடு வேதவாதம், பிரம்ம வாதம் என வேறு சில கூறவும் காண்கிறோம். இவை பிற்காலத்தில் வந்தவர் நுழைத்த இடைச் செருகல்களோ? அவ்வாறனால் மணிமேகலை அவை பெருவழக்கானதற்கும் முந்தி எழுந்த நூலாதல் வேண்டும்.

# 5. மணிமேகலையின் விளைவு குண்டலகேசி - நீலகேசி

**வாத காப்பியம்**

மணிமேகலை, பிற சமயத்தாரோடு வாதம் செய்யாது போனாலும் அவர்களுடைய மதங்களில் தனக்குத் தோன்றும் குறைபாட்டைக் கூறிக்கொண்டு அப்பால் செல்கின்றாள். இதிலிருந்து சமயம் அல்லது மதவாதத்தினையே இலக்கியச் சுவைதரும் காப்பியமாகப் பாடலாம் என்ற எண்ணம் பின்னுள்ளார்க்குத் தோன்றியது போலும். குண்டலகேசி அத்தகைய தொரு காப்பியம். நீலகேசி, குண்டலகேசி, பிங்களகேசி எனக் கேசி என்ற சொல்லில் முடியும் நூல்க ளெல்லாம் சமய வாதத்தைக் காப்பியமாகப் பாடிய நூல்களே யாகும். இது யாப்பருங்கல விருத்தியுரையால் தெளிவாகிறது. குண்டலகேசி பௌத்த நூல். ஆனாலும். நீலகேசி முதலிய சமண நூல்கள் தோன்றுவதற்கு வழிகாட்டியாய் இருந்தது எனலாம். குண்டலகேசியினை மறுப்பதற்காகவே நீலகேசி தோன்றிய தென நீலகேசியைப் படிப்பார் அறிவர்.

**கதைப்போக்கு**

நீலகேசி பின்னாளைய நூலானாலும் இந்தத் தொடர்பு பற்றி இங்கே ஆராயத் தக்கது. நீலகேசியை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. ''தேவன் உரைப்பத் தெளிந்தேன்'' என்று தம்முடைய குருவை ஆசிரியர் சுட்டுகிறார் போலும். தாமொரு கனாக் கண்டு இந்நூலை எழுதியதாக ஆசிரியர்

கூறுகின்றார். பாஞ்சால நாடும் குண்டலவர்த்தனம் என்ற நகரும் அதன் அரசனாகிற சமுத்திரசாரனும் அந்த நகரைச் சூழ்ந்த பலாலயம் என்ற சுடுகாடும் அங்கிருக்கும் கோயில்களில் நிகழும் கொலைகளும் பேய்களும் என்றவற்றை முதலில் புனைந்துரைக்கிறது இக்காப்பியம். காளிக்குப் பலியிடுவதைத் தடுக்கின்றார் முனிச்சந்திரர். அதனால், காளி தமிழ்நாடறிந்த ஆலங்காட்டுப் பழைய நீலியின் உதவியைத் தேட அவளும் அந்நாட்டரசி போல வேடங்கொண்டு முனிச்சந்திரர் தவத்தைக் கெடுக்க வருகின்றாள். அதில் தோற்று அவருக்குச் சிஷ்யையாகிக் கொல்லாமை அறத்தை உலகெங்கும் பரப்ப முற்பட்டுப் பௌத்த மதத்தின் தலைவியான குண்டலகேசியையும் அர்த்த சந்திரரையும் மொக்கலரையும் பிற புத்தர்களையும் வென்று, பின்னர் ஆசீவகரோடும் சாங்கியரோடும் வைசேஷிகரோடும் பேதவாதிகளோடும் உலோகாயதரோடும் வாதிட்டு வென்று, அவர்களை எல்லாம் சமணர்களாக்கியதால் அரசன் முதலானோர் வியப்பெய்த நீலகேசியைத் தலைவி யென்று மாந்தர் யாரும் மதித்தனர் என்று கூறி இந்தக் காப்பியம் முடிகின்றது.

### உரையாசிரியர்

இந்த நூலின் பெருமை உண்மையில் அதன் உரையினாலேயே நமக்கு விளங்குகிறது. இந்த உரை எழுதியவர் சமயதிவாகர வாமன முனிவர் ஆவர். இவரே மேரு மந்தர புராணம் எழுதிய வாமனாசாரிய ராவர். இவருக்கு மல்லி சேனாசாரியார் என்ற பெயரும் உண்டு. இவருடைய சிஷ்யரான புஷ்பசேனாசாரியார் விஜயநகர அரசரான ஹரிஹரரின் மந்திரியாக விளங்கிய ஹிருகப்பரின் குருவாவர். எனவே, இவர் பதினாலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனலாம். வாமன முனிவர் திருப்பருத்திக்குன்றத்தில் வாழ்ந்தவர் என்பர். எனவே, நீலகேசி அதற்கு முன்னரே வழக்கில் இருந்திருத்தல் வேண்டும்.

### நீலகேசி காலம்

யாப்பருங்கல விருத்தியுரையும் இந்நூலைக் குறித்த லின் பத்தாம் நூற்றாண்டுக்கு முன்னைய தெனலாம். இந்நூலில் பின்னுளைய சமயங்களாகிய அத்வைதம் முதலியன கூறப்பெருமையும் இங்கு நோக்குதல் வேண்டும். தேவாரத்தில் குறிப்பிடப்படாத ஆசீவக மதம் இந்நூலில் குறிப்பிடப்படுவதால், இந்நூல் தேவாரக் காலத்துக்கும் முன்னையது என்றும் தேவர் என்ற சிறப்புப் பெயர் பெற்ற திருவள்ளுவரின் சீடரே இந்த நூலாசிரியர் ஆகலாம் என்றும் திரு. சக்கரவர்த்தி நயினுர் கருதுகின்ருர். ஆசீவகர் மதம் பிற்காலச் சோழர் அரசாட்சியிலும் தமிழ் நாட்டில் இருந்ததெனக் கல்வெட்டாராய்ச்சியாளர் கருதுகின்றனர். எவ்வாருயினும், சங்கரர் தோன்றிய 8, 9-ஆம் நூற்றுண்டுக்கும் முன்னைய தென இந்நூலைக் கூறலாம். மணிமேகலைக்குப் பின் னெழுந்தது என்பதிலும் ஐயமிருத்தற் கில்லை. வாதம் மும்முரமாக எழுவது பௌத்தர்களோடாதலின் கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் வந்த ஹியூன்ஸ்யாங் பௌத்தமதம் தமிழ் நாட்டில் குன்றிப் போனதைக் காண்பதற்கு முன் இருந்த நிலையை இந்த நூல் குறிக்கிறது எனலாம். ஆனுல், அகளங்கர் 8-ஆம் நூற்றுண்டில் பௌத்தரோடு வாதிட்டமையும் உண்டு.

### பின்னேடிகள்

சமயவாதம் இலக்கிய மாகிற காட்சி தமிழ் நாட்டில் இவ்வாறு வளர்கிறது. பின்னுல் எழுந்த சித்தியார் பரபக்கம், பிரபோத சந்திரோதய காவியம் முதலியவற்றிற்கு இந்நூல் வழிகாட்டி எனலாம். குண்டலகேசி முதலியவை மறைந்தொழிய நீலகேசி ஒன்றுமே இத்தகைய இலக்கிய வளர்ச்சியைக் காட்டுதற்கு நம்முன் நிற்கிறது. போரில் வரும் வெற்றியே அன்றி வாதத்தில் வரும் வெற்றியும் போர்த்திறமைகள் போல வாதத்

திறமைகளும் காப்பியத்தின் போக்காக அமைகிற நுட்பத்தை இவ்வாறு தமிழ் நாட்டில்தான் முதல் முதல் காண்கிறோம்.

# 6 வளையாபதி

வளையாபதி என்பது ஐம்பெருங் காவியங்களின் கடைசியில் வைத்து எண்ணப்படுகிறது. இதன் கதையை அறிதற் கில்லை. நூலில் ஒரு சில பாடல்களே அடியார்க்கு நல்லார் உரையிலும் பரிமேலழகர் உரையிலும் இளம் பூரணர் உரையிலும் நச்சினர்க்கினியர் உரையிலும் யாப்பருங்கல உரையிலும் புறத்திரட்டிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு எழுபதுக்கு மேற்பட்ட பாடல்கள் அகப்படுவனவற்றைச் செந்தமிழ் (1) திரட்டித் தந்துள்ளது. நிக்கந்த வேடத்து இருடி கணமென்றும் அறிவனென்றும் இந்நூல் கூறுவதால் இது ஒரு சைன நூலென்றே கொள்ளுதல் வேண்டும். இந்த நூலில் நாலடியாக வரும் பாக்கள் சில. இரண்டடி வெவ்வேறு எதுகை பெற்று வருதலும் ஆறடி பெற்ற பாக்கள் வருவதும் இதன் பழைய காலத்தையே நினைப்பூட்டுகின்றன. யாப்பருங்கல விருத்திக்கும் இளம்பூரணத்துக்கும் முற்பட்டுப் பத்தாம் நூற்றுண்டிலேயே இந்நூல் வழங்கி இருத்தல் வேண்டும். பலபல வகையாகச் செய்யுட்களை ஆக்கும் முயற்சி தேவார, திருவாசகக் காலத்த தென்றல் இந்நூலும் சிந்தாமணிக்கு முந்தியதெனலாம்.

இந்நூலின் இலக்கிய நலத்தினை ஆராய்தலுக்கு வாய்ப்பில்லை. எளிமையும் தெளிவும் அறத்தின் விளக்கமும்கொண்ட தொரு நூலென இதனைக் கூறலாம். உரை ஆசிரியர்கள் பாராட்டிய நூல் என்பதும் நாம் மறத்தல்

ஆகாது. தக்கயாகப்பரணியின் உரையாசிரியர், அப்பரணியின் நூலாசிரியராகிய கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் ''கவியழகு வேண்டி வளையாபதியை நினைத்தார்'' என எழுதுவதினின்றும் சமணத்தை வெறுத்த சைவராலும் சைவப் புலவராலும் இதன் இலக்கியச் சுவை எவ்வளவு உயர்ந்ததாகக் கருதப்பெற்றதென்பது விளங்கும்.

# 7 பெருங்கதை

## சிறப்பு

வளையாபதி குண்டலகேசி என்பவை பெரும்பஞ்ச காவியம் என்று கருதப்பட்டாலும் அவை பெருங்கதை போலச் சிறந்தன என்று கூறுவதற் கில்லை. காலத்தாலும் அது முந்திய தாகலாம். இதுகூறும் கதை உதயணன் கதையே ஆம். இவனுடைய மந்திரியே யூகி. கிரேக்கக் காப்பியத்தில் வரும் மாயமாக் குதிரை போல மாய யானை இதனுள் வருகின்றது. உதயணன் மகன் நரவாணதத் தன் கதையும் முடிவில் வருகிறது. பெட்டிக்குள் பெட்டி எனத் தோன்றுவது போலக் கதைக்குள் கதையாக இக் காப்பியம் விரிந்துகொண்டே போகவும் காண்போம். இவை உதயணன் கதையாக ஒற்றுமை பெற்று விளங்குவதே இங்குள்ள சிறப்பு.

## சிலப்பதிகாரம் போன்றது

சிலப்பதிகாரம் மணிமேகலையைப் போல் அகவலால் அமைந்த காப்பியம் பெருங்கதை என்பதாம். இதனை இயற்றியவர் கொங்குவேள் எனப்படுவர். சிலப்பதி காரம் மணிமேகலை போல இந்நூலின் ஒவ்வொரு பாட் டும் னகர ஈற்றில் முடியும். இதனைத் தொல்காப்பியர் இயைபு என்னும் வனப் பென்பர். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பொருள் தொடர்ச்சியாம் கதைத் தொடர்ச்சி மட்டுமே கொண்டன. பெருங்கதையோ

இதனோடு அந்தாதி எனக் கூறப்பெறும் சொற்றொடர்ச்சி யுங் கொண்டு விளங்குவது என்பதனை யாப்பருங்கல விருத்தி எடுத்துக்காட்டும்.

## அகலக்கவி

இதற்கு உதயணன் கதை என்ற பெயரும் உண்டு என உரையாசிரியர்கள் வழியே அறிகிறோம். இந்நூலில் வரும் சொற்களும் பொருள்களும் வீரசோழிய உரை யாசிரியர் காலத்திலேயே ஒரு சில விளங்காது போயின என்று அறிகிறோம். ''அகலக்கவி செய்வானுக்கு அப்படி யல்லது ஆகாது'' என்று அந்த உரையாசிரியர் கூறுகிறார். ஒருவேளை நூல்செய்த காலத்து அவை விளங்கி இருக்க லாம் என்றும் அவரே அமைதி கூறுகிறார்.

## தமிழ் மரபு

இந்நூல் திணைவளங் கூறும் பகுதிகளில் வடநாட் டினையே தமிழ் மய மாக்குகின்றது. வாசவதத்தையும் உதயணனும் கம்பருடைய இராமனும் சீதையும் போலத் தமிழ் முறைப்படி, கண்டதும் காதல் கொள்கின்ற தமிழ்ப் பண்பாடும் விளங்கப் புலவர் பாடிச் செல்கின்றார்.

## பெருமைகள்

இந்நூலார் எந்திர வண்டி, விமான முதலிய இயற் கைக் கப்பாற்பட்ட செய்திகளோடு கதையை இயைய வைத்துச் சொல்லிக்கொண்டு போகிறார். அந்நாளைய நாகரிக வாழ்வின் சிறப்பெலாம், வகையெலாம் இந் நூலில் விளங்குவது போல வேறு எந்தத் தமிழ் நூலிலும் விளங்குவ தில்லை. பெண்ணின் பெருமை, கல்வியின் பரப்பு, மக்களியல்பு என்பன வெல்லாம் இதில் விளங் குவதோடு அரசியல் சூழ்ச்சி யெலாம் கருத்தைக் கவரும் கதையாக வேறு நூலில் இல்லாத வகையில் இந்தக்

கதையில் சிறந்து நிற்கக் காண்கிறோம். உதயணன் போல யூகியும் இந்தக் காப்பியத்துக் கொரு தலைவன் எனலாம். இடத்திற்கேற்ப இக்காப்பியத்தின் பாக்கள் ''சிலைத்தன தூசி மலைத்தன யானை ஆர்த்தனர் மறவர் தூர்த்தனர் பல்கணை'' என்பது போல மாறிமாறிப் பொருளின் எதிரொலியாகி வருவதனைக் காணலாம். இந்நூல் முழுவதும் இன்று காணப்படாமையே ஒரு பெருங் குறை. முதலும் முடிவும் காணப்பெற வில்லை. இடையேயும் சிற்சில பகுதிகளும் காணவில்லை.

**சமண ஆசிரியர்**

இந்நூலாசிரியர் சமணராவர். காதிகர்மம் (3. 27-149) வினைதீர் உயிர் மிதத்தல் (1-40-186) ஓதி (5. 3-92) முதலியன இக்கொள்கையை நிலைநாட்டும். இவர் கொங்குமண்டலத்தில் குறும்புநாட்டில் விஜயமங்கலம் என்ற ஊரில் பிறந்தவர் என்பர். மூன்று பிறப்பிற்கு இந்நூலைச் செய்தார் என்று புகழப் பெறுவதிலிருந்து இந்நூலின் திறம் நன்கு விளங்கும்.

**சங்கம்**

''மேதக்க சொற் சங்கத்தார் வெள்கவே'' கொங்கு வேள் அடிமை மாதை கொண்டு உத்தரஞ் சொன்னதாகக் கொங்குமண்டல சதகம் புகழ்கிறது. இங்கே சங்கத் தார் யார்? இவர் ஊருக்கு அருகிலிருந்த நிரம்பை காவலரான அடியார்க்கு நல்லார் ''இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச் சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய அகத்தியனாரும் - கீரந்தையாரும் என்று இத்தொடக்கத்தார் - தம்மாற் பாடப்பட்ட - செய்யுள் இலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதை'' எனக் கூறுவதனால் அவர் இந்த நூலை எவ்வளவு சிறப்பாகக் கருதினார் என்பது விளங்கும். இரண்டாம் சங்கத்து நூல்களைக் கற்றவர் கொங்குவேளென்றதன்றி

இவரே இரண்டாம் சங்கத்தில் வாழ்ந்தவர் என்பதற் கில்லை. ஆகவே, சங்கம் என்பது வச்சிரநந்தி நிலை நாட்டிய சங்கம் போன்றதென்று கொள்ளலாம்.

### இதன் முதல் நூல்

இந்தப் பெருங்கதை குணாட்டியர் இயற்றிய பிருகத் கதை என்ற பெயரை நினைப்பூட்டுகிறது. ஆந்திர நாட்டு அரசன் பேரவையில் வாழ்ந்தவரே, பைசாச மொழியில் இதனை எழுதிய குணாட்டியர் ஆவர். இவர் கி. பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர். உஞ்சை நகர் அரச னை சூத்தரகன் ''வீணாவாசவதத்தம்'' என்ற நாடகம் எழுதியுள்ளார். இந்தச் சூத்தரகன் கதையைத் தண்டியின் நண்பரான காஞ்சிமாநகர்ச் சிற்பி யொருவன் தமிழில் எழுதியுள்ளான் என அவந்திசுந்தரி கதையில் தண்டியே கூறுகிறார். தென்னாட்டில் வழங்கும் பாசனுடைய நாட கங்களிற் சில வாசவதத்தையைப் பற்றியன. மணி மேகலையும் இந்தக் கதையைச் சுட்டுகின்றது (XV. 61). திருமங்கை ஆழ்வாரும் சிறிய திருமடலில் வாசவதத் தையைக் குறிக்கின்றார். எனவே, தமிழ்நாட்டினரது மனத்தை இக்கதை கவர்ந்த தெனலாம். கொங்குவேள் சைனத் திரமிள சங்கம் வீறுபெற்ற கன்னட நாட்டிற்கும் தமிழ் நாட்டிற்கும் தொடர்பு கொண்ட கொங்கு நாட் டில் வாழ்ந்த சைனர். கி. பி. 5-ஆம் 6-ஆம் நூற்றாண் டில் கங்கராஜனை துர்வினீதன் பிற பிருகத் கதைகள் போலச் சைவ மணங் கமழாது கொங்குவேளைப் போலச் சமண மணங் கமழப் பிருகத் கதையை வடமொழியில் எழுதினார். இதனுடைய மொழிபெயர்ப்பே கொங்கு வேள் மாக்கதை என்பர். அப்படி மொழிபெயர்ப் பென்று இந்த நூலைக் கூறுவதற் கில்லை.

### காலம்

ஆனால், இங்குக் கூறிவரும் காலத்தை ஒட்டியே இந்த நூல் எழுந்த தெனலாம். 'உதயண குமார

காவியம்' என்ற தமிழ் நூலொன்று விருத்தப் பாவில் உண்டு. அதுவும் சைன மதச் சார்புடையதே. ஆனால், அது மிகமிகப் பிற்காலத்தில் தோன்றியதாதல் வேண்டும். ஆனால், கொங்குவேள் மாக்கதையோ இளம்பூரணர் காலத்துக்கும் - ஒருவேளை திருமங்கை மன்னர் காலத்துக்கும் - முந்தியதாய் அவர்கள் உள்ளத்தையெல்லாம் கவரும் வகையில், மணிமேகலைக் காலத்தை ஒட்டித் தோன்றிய பெருஞ் சிறப்புடைய தலைசிறந்த காப்பியம் ஆகும். ஏழாம் நூற்றாண்டையதென்று ஒரு சிலர் கூறுவர்.

**நான்காம் அத்தியாயம்**

# காப்பியம் (முடிவு)

## 8. சிந்தாமணி - கதையும் சிறப்பும்

### பெயர்

பெரும் பஞ்ச காவியங்கள் என்று கூறப்பெறுவன வற்றுள் சீவகசிந்தாமணியையே முதலில் வைத்து அறிஞர்கள் வழங்குவார்கள். சீவகசிந்தாமணி, சிந்தாமணி என்றும் வழங்கப்பெறும். நூலின் தன்மையால் இந்தப் பெயர் வந்த தென்று சங்கரநமச்சிவாயர் கூறினுலும், சீவகன் பிறந்ததும் அவன் தாய் ''சிந்தாமணியே கிடத்தி யால்'' என்று அவனைப் புனைந்துரைத்துப் புலம்புதலால் அவனைப் பற்றிக் கூறும் இந்த நூலுக்கும் அதுவே பெயராயிற்று எனலாம். சிந்தாமணியில் காணப்படும் ஓம்படைச் செய்யுளிலும் சிந்தாமணி என்ற பெயரையே காண்கிறோம். சீவகன் பிறந்து கல்வி பயில்வதனை நாமகளை மணத்த லென்றும், அவனது போரின் வெற்றியை மண்மகளை மணத்த லென்றும், அரசனுதலைப் பூமகளை மணத்த லென்றும், வீடு பெறுதலை முத்திமகளை மணத்த லென்றும், சீவகன் பிறமகளிரை மணத்தலோடு ஒருங்கு வைத்து மணமென்றே பாடுதலின் இந்நூலுக்கு மண நூல் என்ற பெயரும் உண்டு.

கதை

சச்சந்தன் தன் மனைவி விசையையோடு இன்பமாய் இருக்கவேண்டி, தன் மந்திரி கட்டியங்காரனிடம் அரசினை ஒப்புவிக்க, வஞ்சகனான அவன் அரசனை முற்றுகை யிட்டுக் கொல்கின்றான். முற்றுகையினின்றும் கர்ப்பிணி யாயிருந்த விசையையை மயிற்பொறியில் பிழைத்துப் போகும்படி அரசன், தான் சாவதற்கு முன் வற்புறுத்தி அனுப்புகிறான். ஆனால், துன்பத்தால் பொறியை இயக்க முடியாதபோது அது சுடுகாட்டில் இறங்க, அங்கேயே தன் மகனைப் பெற்று ஒதுங்கி நிற்கிறாள். கந்துக்கடன் என்பவன் தன் குழவியைப் புதைக்க வந்தவன் அரச குமாரனைக் கண்டெடுத்துத் தன் பிள்ளை என்றே வளர்த்து வருகிறான். அரசி தவத்திற்குச் செல்கின்றாள். சீவகன் கையில் உணவுண்டு யானைத்தீ என்ற நோய் நீங்கிய அச்சணந்தி என்பவர் சீவகனுக்குக் கல்வி கற்பிக்க அவன் சிறந்தோனாய் அவரிடம் தன் பிறப்பின் உண்மையை யும் அறிந்து அவர் கேட்டுக்கொண்டது போல ஓராண்டு தன்னை வெளியாக்காமலே வாழ்ந்து வருகின்றான். வேடர் கள், கட்டியங்காரன் மாட்டு மந்தைகளை அடித்துக் கொண்டு போக, அவன் மக்களால் அவற்றை மீட்க முடியாத போது சீவகன் சென்று வேடர்களைக் கொல் லாமலே போரிட்டு மந்தைகளை மீட்டு வருகின்றான். காந்தருவதத்தை என்பவளை யாழில் வென்று மணக்கி றான். மத யானையினின்றும் குணமாலை என்பவளைக் காப்பாற்ற, அவள் அவன்மேல் காதல் கொண்டு கிளி யைத் தூதுவிட, அவளையும் மணக்கிறான். பாம்பு கடித்த பதுமையையும் நச்சு நீக்கி மணக்கின்றான். கேமசரி என்பவள் தன் கணவனல்லாதார் தனக்கு ஆடவராகத் தோன்றாத இலக்கினத்திற் பிறந்து நாணமென்ப தின் றியே வளர்பவள், சீவகனைக் கண்டபோது நாணிக் காத லுற்று அவனை மணக்கிறாள். ஊர் ஊராய்த் திரிந்து வரும் சீவகன் சில அரச குமரருக்கு வில்வித்தை கற்பித்துக் கனகமாலை என்ற அரசிளங் குமரியையும் மணந்து வாழும்

போது சீவகனுடைய தோழர்கள் தவம் செய்யும் விசையை யைக் கண்டு பின் அவனை வந்தடைகிறார்கள். தன் தாயைச் சென்று காண்கின்றான் சீவகன். சில ஏற்பாடு களைச் செய்துவிட்டு இராசமாபுரம் திரும்பியபோது விமலை என்பவள் தான் ஆடிய பந்து சீவகன் முன் விழ அதனை எடுக்க வந்தவள் இவன்மேல் காதல்கொள்ள அவளையும் மணக்கின்றான். சுண்ணப் போட்டியில் சீவ கன் தீர்ப்புப்படி வென்ற குணமாலையின் தோழியாகித் தோற்ற சுரமஞ்சரி ஒரே ஏக்கமாய்ச் சீவகனையே எண்ணி வேறோர் ஆடவனையும் பாராது வாழ்ந்து வர, அவளை மணப்பதாகச் சீவகன் பந்தயங்கூறிக் கிழவனாய்ச் சென்று அவளை அறிந்து, அவள் கோயிலுக்குப் போகும்பொழுது அங்கே மறைந்திருந்து, சீவகனைத் தரவேண்டும் என்று அவள் காமனை வேண்டும்போது ''சீவகனை நீ பெற்றாய்'' என்று கடவுள் கூறுவதுபோல அவன் ஆணைப்படி அங்கு மறைந்திருந்த அவனுடைய தோழனாகிய புத்திசேனன் கூறப் பின் அவளையும் மணக்கிறான். தாய் கேட்டுக்கொண் டது போலத் தாய்மாமனாகிய கோவிந்தனிடம் செல்கின் றான். கோவிந்தனும் இராசமாபுரம் வந்து திரிபன்றி எந்திர மொன்றை அம்பினால் வீழ்த்துபவனே தன் பெண்ணுக்கு மணாளனாவானெனப் பறை அறைவிக்கிறான். கட்டியங் காரன் முதலானோர் அந்தச் சுயம்வரத்துக்கு வந்து எய்ய முயன்று தோற்கின்றனர். சீவகன் எய்கின்றான். சீவகன் யாரெனக் கோவிந்தன் அங்கு வந்தார்க்கு விளக் கியபோது போர் மூளச் சீவகன் கட்டியங்காரனைக் கொலைக் குற்றத்திற்காகக் கொல்கிறான். பின்பு, முடி சூடிக் கோவிந்தன் மகளாகிய இலக்கணையையும் மணக் கின்றான். முடிவில் தன் பழம்பிறப்புணர்ந்து துறவுக் கோலம் பூண்டு வீடுபேறடைகின்றான்.

### சிறப்பு

இந்தக் கதையினை இலக்கியச் சுவையெலாம் தோன் றத் தமிழின் இனிமையெலாம் விளங்கப் பாடிப் போகின்

ளூர் இந்நூலாசிரியரான திருத்தக்கதேவர். நாட்டினையும் நகரினையும் கூறுகின்ளூர். குறிக்கோள் உள்ள ஒரு புனைந்துரையாக இப் பகுதி விளங்குகிறது. 'உடோப்பியா' என்ற இலட்சிய நாடுபோலத் தமிழில் எழுந்த முயற்சி என இதனைக் கூறலாம். (நாட்டுப் படலம் நகரப் படலம் கூறவந்த பின்னைய ஆசிரியர்களுக் கெல்லாம் இவரே வழி காட்டி எனலாம். இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்பப் புனைந்துரைக்கின்ற சிறப்பும், போர், காதல் என்பவற்றின் விளக்கந் தோன்றப் பாடுந் திறமும், கிளி விடு தூது, களிறுதரு புணர்ச்சி முதலான பல கோவைத் துறைகள் பாடும் தமிழ்ப் பண்பாடும், வடநூற் கதையைத் தமிழ் மயமாக்கிய உயர்வும் இந்த நூலில் தொட்ட தொட்ட இடத்தெலாம் காணலாம். அரசியற் சூழ்ச்சியாகப் பலர் இடத்தும் துணைபெற்ளுேங்க நடந்த முயற்சிக ளெல்லாம் திருமணங்களென்றே தோன்றப் பாடிப் போகின்ளூர் ஆசிரியர். சமணக் கொள்கையின் முடிந்த முடிபுகளை அரசியற் போராட்டம் போல எழும் ஓர் உலகியற் போராட்டமாகவே புனைந்துரைத்து, அங்கும் வெற்றி பெற்று முத்தி மகளை மணப்பதாகக் கூறி முடிக்கும் இவர் போக்கு மிகச் சிறந்ததாம். கடுந்துறவெனப் பிறர் இகழும் சமண மதத்தை இவ்வாறு எல்லோரும் வியக்கும் வெற்றி வாழ்வாகவும் மண வாழ்வாகவும் கற்ளுேர் கருத்தில் உறைத்துவரப் பாடித் தேவர் பெருமை பெற்றுள்ளார். முதலிலிருந்து முடிவுவரை கற்போர் அறியாத வகையில் சமண உண்மைகளை எத்தனையோ பல வகையில் கதையோடு ஒன்றுபடுத்தி விடுகின்ளூர் ஆசிரியர்.

# 9. சிந்தாமணி - காலம்

## கல்வெட்டு

இந்த நூல் எழுந்த குறிக்கோளை அஃது எழுந்த காலத்தோடு வைத்து நோக்குதல் வேண்டும். சிரவண பெள்குளம் என்ற இடத்துக் கல்வெட்டு மகாபுராணத்தின் இரண்டாம் பகுதியை இயற்றிய குணபத்திராச்சாரியாரைப் பற்றியும் அவர்க்குப்பின் சமண சந்நியாச பரம்பரையில் வந்த சிந்தாமணி ஆச்சாரியர் என்ற ஒருவரைப் பற்றியும் அவருக்குப் பின்வந்த சூளாமணி ஆசிரியரான ஸ்ரீவர்த்தமானதேவர் என்ற ஒருவரைப் பற்றியும் கூறுகிறது. குணபத்திராச்சாரியர் ராஷ்டிரகூட அரசன் அகாலவர்ஷன் காலத்தவர். அகாலவர்ஷன் 9-ஆம் நூற்றுண்டின் இறுதியில் பட்டத்திற்கு வந்தவன். இங்கே கூறப்பட்ட ''சிந்தாமணி ஆசிரியர்'' தேவர் என்று முடியும் பெயர் கொண்ட தேவ கணத்தைச் சேர்ந்தவர். இது திராவிட சங்கத்தின் ஒரு பகுதி. நம் ஆசிரியரும் திருத்தக்கதேவர் என்ற பெயரே உடையவர்.

## சிறப்புப் பாயிரம்

''வண்பெரு வஞ்சிப்
பொய்யாமொழிப் புகழ் மையறு சீர்த்தி
திருத்தகு முனிவன்''

என வரும் பாடற் பகுதியால் பொய்யாமொழி என்ற ஒருவரால் திருத்தக்கதேவர் பாராட்டப்பெற்ருர் என அறிகின்ருேம். வஞ்சி என்பது கருவூரையோ படை

எடுப்பையோ உணர்த்தும். எவ்வாருனாலும் பொய்யா மொழி ஓர் அரசர் என்பது தெளிவு. சத்தியவாக்கி என்ற பெயரின் மொழிபெயர்ப் பாகலாம் இது என்பது சிலர் கொள்கை. சத்தியவாக்கி என்ற அரசன் பத்தாம் நூற்ருண்டின் முற்பகுதியில் கங்கர்கள் அரசனுக ஆண்டு வந்தான் என அறிகிரும். இவன் வள்ளிமலையில் ஒரு சைனக் கோயிலும் கட்டியுள்ளான். கருவூர் வஞ்சி எனப் பெயர் பெறும் சோழ கேரள மண்டலமாம் கொங்கு மண்டலத்தின் பகுதியும் சில சில போது கங்கர்கள் கையில் போயிருக்கலாம். அல்லது படை எடுத்துப் போர் புரியும் அவன் பெருமையை வஞ்சி என்ற அடை குறிக்கலாம். இந்தக் காலத்தில் கங்கர்கள் ராஷ்டிர கூடர்களுக்கு அடங்கி இருந்தார்கள் என அறிவதால் ராஷ்டிரகூட அரசனுல் பாராட்டப் பெற்றவர்கள் கங்க ராலும் பாராட்டப்பெறுவது இயல்பேயாம். இஃது உண்மையாளுல் சிந்தாமணி பத்தாம் நூற்ருண்டுக்குப் பிந்தியது அன்று எனலாம். (ஒன்பதாம் நூற்ருண்டின் முடிபிலே எழுதப்பட்டும் இருக்கலாம். பத்தாம் நூற்ருண்டினதாம் யாப்பருங்கல விருத்தியுரையில் எடுத் தாளப் பெறுகிறதன்ருே?)

### சோழர்

நச்சினுர்க்கினியர் ஓம்படைப் பாட்டிற்குப் பொருள் எழுதும்பொழுது நூலாசிரியரை ''முந்நீர் வலம்புரி'' என்று கூறுகின்ற பகுதிக்குச் சோழர் குலமாகிய கட லிலே பிறந்த வலம்புரி என்று பொருள் எழுதுகிருர். இதனுல், திருத்தக்கதேவர் சோழ குலத்தவர் என்பது கர்ண பரம்பரையாதல் விளங்கும்.

### அரிஞ்சயன்

சீவகன் தாயாகிய விசையையைத் திருத்தக்கதேவர் ''அசைவிலாப் புரவி வெள்ளத்து அரிஞ்சயன் குலத்துள் தோன்றி வசையிலா வரத்தின் வந்தாள்'' (சிந். 201) எனப் பாடுகின்ருர். இங்கே அரிஞ்சயன் என்ற பெயரைப்

பயன்படுத்தியதன் நுட்பம் சோழர் குலத்தில் அரிஞ்சயன் என்ற அரசன் பெயர் வழங்கியதன் வரலாறு விளங்கிஞல் விளங்கும். அரிஞ்சயன், அரிந்தமன் என்றும் அரிகுல கேசரி என்றும் சுட்டப்படுகிருன். அரிந்தமன் என்ற அருஞ் சொல்லைக் கம்பரும் வழங்குகிருர். அரிஞ்சயனுடைய மகள் அரிஞ்சிகைப் பிராட்டி எனப் பெயர் பெறுகிருள். அரிஞ்சயனுடைய மகஞன இராசராசன் அரிஞ்சயேச்சுரம் என்ஞெரு கோயிலைத் தன் தகப்பஞருடைய பெயரோடு சேர்த்து விளங்க வைக்கின்ருன். அரிந்தமங்கலம் என்ற ஊரும் உண்டு. அதற்குப் பின் அரிஞ்சயன் என்ற பெயர் கொண்டார் ஒருவரும் இல்லை. இவன் பத்தாம் நூற்ருண்டில் வாழ்ந்தவன். அவன் ஆள வருவதற்கு முன் இந்தப் பெயர் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்ததால் அரசன் பெயராக வழங்க வந்தது போலும். இவன் முதற் பராந்தகனது மகன். முதல் ஆதித்த சோழனின் பேரன். இவன் காலத்தும் இவனுக்கு முந்திய காலத்தும் மார்பில் 96 புண்கொண்டு சோழர் பேரரசைப் புதுப்பித்து நிலைநாட்டிய விசயாலயன் காலம் முதலாக வீரமே சிறப்பிக்கப்பெற்றது. பராந்தகனும் வீரநாராயணன் எனப் பெயர் பெற்ருன். அந்த வீரப் பெருமையே அரிஞ்சயன் என்ற பெயரையும் வழக்கத்திற் கொண்டுவந்தது போலும். பின்னர் உத்தமசீலி, உத்தமன் முதலிய பெயர்கள் ஒழுக்கத்தின் உயர்வை வற்புறுத்தின. பின்னர் இராசராசன் முதலான பேர்கள் சக்கரவர்த்தியாக விளங்கும் தலைமையை எதிர்நோக்கி நின்றன. இந்த மூவகை எண்ணங்களும் முளைவிட்ட காலமே சிந்தாமணியின் காலம் எனலாம். அரிஞ்சயன் என்ற பெயர் அரிஞ்சயன் பாட்டனுக்கு வழங்கிய பெயராக இருந்திருக்கலாம். ஆஞல், அதனைப் பற்றி ஒரு குறிப்பும் நமக்குக் கிடைக்கவில்லை. அவ்வாறு நினைப்பதற்குத் தடை யொன்று மில்லை. விசயாலயன் சோழப் பேரரசை நிலைநாட்டுவதற்கு உண்மையில் உதவியவன் அரிஞ்சயன் பாட்டஞன முதல் ஆதித்தனே யாவன்.

பராந்தகனுடைய மற்றைய மக்கள் மூவரும் தங்கள் பாட்டனுடைய பெயரையே கொண்டு ''இராசராசன்'', ''கண்டராதித்தன்'', ''உத்தமசீலி என்ற ஆதித்தன்'' என விளங்கினுர்கள். அவர்களுடன் பிறந்த அரிஞ்சயனும் பாட்டனது மற்ருெரு பட்டப்பெயர் என உய்த்துணரத் தக்க அரிஞ்சயன் என்ற பெயரையே பெற்று விளங்கினுன் என்று சொல்லுவது பொருத்தமே யாம்.

*அரிகுலம்*

சைன மதத்தோர்கள் ஐந்துவகை அரசகுலங்களையே பழைய குலங்களாகக் கொள்வர். இட்சுவாகு குலம், ஹரி குலம், குருகுலம், நாதகுலம், உக்கிரகுலம் என்பவையே அந்தப் பழைய குலங்கள். இந்த ஐந்து குலங்களில் ஹரி குலத்தில் சோழர்குலம் உட்பட்டதெனச் சமணர்கள் கூறவந்ததால் ஹரிகுலகேசரி என்ற பட்டம் வழங்கி யதோ எனக் கருதலாம். ஆனுல், அரிஞ்சயனுக்கு வழங் கிய பெயர்களின் முதலில் ஹ என்பதன்றி அ என்பதே வழங்குகிறது. பகைவரை அழித்தவன் பகைவர்க்குச் சிங்கம் என்ற பொருளேதான் தோன்றுகிறது. தமிழுக்கு ஏற்பப் பெயர் மருவி வழங்கியதால் இந்தப் பொருள் மாருட்டம் எழுந்திருக்கலாம் எனக் கூறலாம். ஆனுல், சோழர் பரம்பரை இட்சுவாகு குலமென்றே தன்னை வழங்கிவந்தது.

சிந்தாமணியில் வரும் அரிஞ்சயன் விதேய நாட்ட ரசன். அந்த அரசர்களுக்குள் சோழர்கள் அப்போது பெண் கொண்டார்களோ என்பதும் தெரியவில்லை. எனவே, அரிஞ்சயன் என்ற பெயரை ஏன் திருத்தக்க தேவர் தம் கதையில் புகுத்தினுர் என்பது நன்கு விளங்க வில்லை. எனவே, ஒன்பதாம் நூற்ருண்டின் முடிவுக்குள் இந்த நூல் எழுந்து விளங்கி இருக்கலாம் என்பதற்கு இந்தப் பெயர் தடையாவ தில்லை.

# 10 சிந்தாமணி – குறிக்கோள்

**சோழரும் கதையும்**

ஆசிரியரும் சோழ குலமானால், சோழ குலப் பெயரைத் தம் காப்பியத்தில் புகுத்தி இருப்பாரானால், சோழப் பேரரசு எப்படி வாழவேண்டும் என அவர் எண்ணிய எண்ணத்தை எல்லோருக்கும் விளங்கக் கூறிய கதையே இந்தக் காப்பியமாதல் வேண்டும். சமணராதலின் சமணர்கள் போற்றும் அரசன் ஒருவன் கதையைக் கூறத் தொடங்குகிறார். பல அரச குடும்பங்களோடு அன்புத் தொடர்பு கொண்டு வன்மை பெறப் பல மனைவியரை அவர் நாளில் வாழ்ந்த சோழர்கள் மணந்தனர். அவர்களைப் போலப் பல மனைவியருடன் வாழ்ந்த சீவகன் வரலாறு அவரது நினைவுக்கு வருகிறது. ஒடுங்கி நின்ற நிலையிலிருந்து உயர்ந் தோங்கிய சீவகனைப் போலச் சோழர் குலமும் மறைந்தழிந்த நிலையிலிருந்து மேலோங்கி வருகின்ற காலமது. சக்கரவர்த்தியாகச் சோழனும் ஆகவேண்டும் என்று திருத்தக்கதேவர் கண்ட கனவு இராசேந்திரன் காலத்தில் நனவாகப் போகிறது. சமண வாழ்க்கைக்கும் அரசியல் இன்பத்திற்கும் பகை இல்லை என்பது தோன்றச் சீவகன் கதையைப் பலவகையான திருமண வாழ்வாகவே பாடிக் காட்டுகின்றார் தேவர்.

**அஹிம்சை**

ஆனால், அவர் அங்கு உயிர்நிலையாக வற்புறுத்துவது கொல்லாமை என்னும் அஹிம்சா தர்மமேயாம். மாடு

பிடி சண்டையில் சீவகன் வேடர்களைக் கொல்லாமலே வெருட்டி வெல்கின்றான். குணமாலைமேல் வந்த யானையையும் கோவலனைப் போலக் கொல்லாமலே அடக்கிக் கருணை மறவனாக விளங்குகிறான். முடிவில் நடந்த போரில் கட்டியங்காரனும் அவன் மக்களும் கொலையுண்டது உண்மையே. ஆனால் அது கொலையன்று. ''கொலையிற் கொடியோரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட்டதனொடு நேர்'' என்றபடி செங்கோலின் திறமாகும். அஹிம்சையின் அடிப்படையில் அரசியல் அமையவேண்டும் எனக் காப்பியம் பாடுபவர் திருத்தக்கதேவர் ஒருவரே எனலாம். அவர் காப்பியத்தின் பொருளாழம் காந்தி யுகத்தில் நன்கு விளங்கும். எனவே, அவர் கண்ட அரசு அருள் அரசு. அது மட்டுமா? பண்பாட்டின் நலமெல்லாம் விளங்கும் கலையரசாகவும் அந்த அரசு ஓங்கவேண்டும் என்பதும் அவருடைய எண்ணம். இல்லையானால் அரசு ஏன்?

# 11. சூளாமணி - காலம்

## கல்வெட்டு, ஆசிரியர் பெயர்

மேலே, சிந்தாமணி ஆசிரியருக்குப் பின் சூளாமணி ஆசிரியர் வர்த்தமானதேவர் வந்தார் என சிரவண பெள்குளக் கல்வெட்டு ஒன்று கூறுவதாகக் கண்டோம். அங்குக் கண்டது போல வர்த்தமானதேவர் என்ற பெயர் சூளாமணி ஆசிரியர்க்குத் தமிழில் இன்று வழங்கவில்லை. தமிழில் இவர்க்குத் தோலாமொழித்தேவர் என்றே பெயர் வழங்குகிறது. இந்தக் காப்பியத்தில் ''தோலா நாவில் சுச்சுதன்'' (308) ''ஆர்க்கும் தோலாதாய்'' (1473) என வழங்கிய அருமை நோக்கி இவரே தோலா மொழியார் எனப் பேர் பெற்ருர் என்பாரும் உண்டு. சிரவணபெள்குளக் கல்வெட்டு தமிழ் நூலேத்தான் குறிக்கின்றது என்பது தெளிவாகக் கூறமுடியாமையால், அதுகொண்டு இந்த நூல்களின் காலத்தை வரையறுத்தல் ஆகாது என்பர் ஒரு சிலர்.

## சூளாமணி புரவலன்

சூளாமணியின் பாயிரத்தில் இந்த நூல் ''சேந்தனென்னும் தூமாண் தமிழின் கிழவன்'' அவையுள் அரங்கேற்றப் பெற்றதாகக் கூறும். தமிழின் கிழவன் என்பதால் இவனைப் பாண்டியன் என்று கொள்வர். சேந்தன் என்ற பாண்டியன் ஒருவனே உளன். ''ஜெயந்தவர்மன்,

(செழியன் சேந்தன்)'' கூன்பாண்டியனின் தந்தை என்பர். இவன் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசாண்டான். அதனால், ஏழாம் நூற்றாண்டையது இந்த நூல் என்பர். அவனி சூளாமணி என்ற அரசன் பெயராலேயே இந்த நூலும் சூளாமணி என வழங்கியது என்றும் கூறுவர். ஆனால், இந்த நூல் ''தன்மையால் சூளாமணி எனப் பெயர் பெற்றது'' என்று மயிலைநாதர் முதலானோர் பின்னாளில் கூறலாயினர். இந்த நூலின் தலைவனாகிய திவிட்டனது தந்தையாம் பயாபதியும் சூளாமணி என்றே இந்த நூலில் புகழப்பெறுகிறான். ''உலகின் முடிக்கொரு சூளாமணி ஆக்கினான்'' என்று ஆசிரியர் முடிக்கிறார். ஆசிரியர் இரத்தின பல்லவ நகரத்தினையும் சூளாமணி என்கிறார். வேறோர் அரசனையும் சூளாமணி என்கிறார். திவிட்டன் குன்றெடுத்து நின்றபோது முடிமேல் சூளாமணி முளைத்த ஜோதியைக் கூறுகிறார். இவ்வாறு பல இடங்களிலும் சூளாமணி என வரும் அழகிய சொற்றொடரால் இந்நூல் இப் பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

**கார்வெட்டி**

அன்றியும் தனிப்பாடல் ஒன்று, விசயன் கார்வெட்டி அரையன் என்பவன் கேட்டதற்கு ஏற்பத் தோலாமொழியார் சூளாமணி இயற்றினார் என்று கூறும். கார்வெட்டி என்பது காடுவெட்டி என்பதன் மரூஉ வாகும். காடுவெட்டி என்பது பல்லவருடைய பெயர். விசயன் என்பது இங்கே இயற்பெயர் ஆகாமல் வெற்றியுடையோன் என்பதை மட்டும் குறிப்ப தாகலாம். அப்போது பாயிரத்தில் குறிப்பிட்ட சேந்தனே இவனாகலாம். ''தமிழின் கிழவன்'' என்பதால் பாண்டியனையே எந்தக் காலத்தும் அத்தொடர் குறிப்பதாகக் கொள்ளுவதற் கில்லை. ''சேந்தன் திவாகரம்'' முதலியவற்றை இயற்றுதற்கு உதவிய புரவலனைப் போலச் சேந்தன் எனப் பல்லவர் குலத்தில் தோன்றிய வேறொரு சிற்றரசன் சூளாமணியைப் பாடு

தற்கு உதவியிருக்கலாம். அப்படியானுல் சிரவணபெள் குளக் கல்வெட்டும் தமிழ் நூலையே குறிப்ப தாகலாம். இந்தத் தனிப் பாடல் தோலாமொழித் தேவரைத் தரும தீர்த்தன் திருவடித் தொடர்புடையார் என்றும் கூறு கிறது. எனவே, இந்த நூல் ஏழாம் நூற்ருண்டுக்கு முற்படாமல் ஒன்பதாம் நூற்ருண்டுக்குப் பிற்படாமல் தோன்றியதென ஒருவாறு கூறலாம். பத்தாம் நூற் ருண்டில் யாப்பருங்கல விருத்தியுரையில் எடுத்தாளப் பெறுவதால் முந்திய காலத்தையே கூறுவதும் பொருந்தும்.

# 12. சூளாமணியின் சிறப்பு

**கதை**

இந்தக் காப்பியத்தின் கதை ஸ்ரீபுராணத்திற் கண்டதேயாம். கல்வெட்டில் கண்ட குணபத்திரர் ஸ்ரீபுராணத்தை வடமொழியிற் பாடினார். ஆனால், தமிழ் நூலில் வரும் பெயர்கள் தமிழ்நூலுக் கேற்பவோ பிராகிருத முறைப்படியோ மாறியுள்ளன. திரிபிருஷ்டன், திவிட்டன் என்றாகிறது. அஸ்வக்கிரீவன் அசுவக் கண்டன் என வருகிறது. ஸ்வயம்பிரபா சயம்பவை ஆகிறாள்.

**கண்ணன் கதை போன்றது**

கண்ணனும் பலராமனும் போன்றவர் திவிட்டனும் விசயனும். அசுவகண்டன், பௌண்டர வாசுதேவன் போன்றவன். பயாபதியின் மகனாகிய திவிட்டன், தனக்கு வணங்காமை காரணமாக அசுவகண்டன் கோபம்கொண்டு அனுப்பிய மாயச் சிங்கம் திவிட்டனுக்கு அஞ்சி ஓடிவிடக் குகையிலிருந்து வந்த உண்மைச் சிங்கத்தைக் கொன்று விஞ்சையர் மகளாம் சயம்பவையை மணக்கின்றான் திவிட்டன். திவிட்டனுடைய படையும் அசுவகண்டன் படையும் போரிட அசுவகண்டன் இறக்கின்றான். திவிட்டன் கோடிக் குன்றெடுத்து வாசுதேவன் எனக் காட்டுகிறான். திவிட்டனுக்குச் சோதிமாலை என்ற பெண் பிறக்க, அந்தச் சோதிமாலை என்ற பெண்ணின் சுயம்வரத்தில்

தன் மாமன் மகன் அமுததேசனை அவள் மாலையிடுகிருள். அந்த மணமகனின் தங்கையும் திவிட்டன் மகன் விசயனையே சுயம்வரத்தில் மாலையிடுகிருள். பயாபதி அரசன் துறவு மேற்கொள்கின்ருன். உலகுக் கொரு சூளாமணியாகிருன்.

**பாடும் முறை**

இந்த வரலாற்றினை மிக மிக இனிக்கும் தமிழிற் பாடுகின்ருர் தோலாமொழித்தேவர். அரசியல் நீதிகள், தூது செல்லும் முறை, குடிகளின் திருவிழா, வேனில் விழா, மந்திரிகள் சபை, சுயம்வரம், தெய்வப்போர், மாயப்போர் முதலிய எல்லாம் வர ஆசிரியர் காப்பியத்தை இயற்றுகின்ருர். தமிழ் முறைப்படி ஐந்திணை வளங்கூறி, நாடு நகரங் கூறினுலும் வடமொழி வர்ணனைகளின் நிழலையும் இங்கே காணலாம். இவர் பாடும் ஐந்திணை வர்ணனைகளைச் சேக்கிழார் பின்பற்றுகிருர். சுயம்வரச் சருக்கத்தில் விதூஷகன் வடமொழி நூல்களில் வருவதுபோல வந்து மோதகத்திற்கு அழுது புலம்பி நம்மைச் சிரிக்க வைக்கின்ருன். முடிவிலே துறவுச் சருக்கத்தோடும் முத்திச் சருக்கத்தோடும் இந்த நூல் முடிவினை அடைகிறது. தாம் உலகிலும் வடமொழியிலும் தென் மொழியிலும் பல இடங்களிலும் கண்ட அழகுகளின் உண்மைகளை யெல்லாம் தோலாமொழித் தேவர் இனிக்க இனிக்கப் பாடுகின்ருர். வாசுதேவனும் பிரதி வாசுதேவனுமானவரின் போராட்டத்தைக் கூறும் இந்நூல், அதற்கேற்ப இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் செல்கிறது. இருந்தாலும், இயற்கையின் அழகும், மக்கள் உள்ளத் தெழுச்சிகளும் இயற்கைக்கு மாருமல் உள்ளத்தைக் கவர்ந்துசெல்ல ஆசிரியர் பாடிப் போகின்ருர். இவ்வளவு இனிமையாகச் செல்லும் செய்யுள்கள் தமிழில் சிலவே எனலாம். சிந்தாமணியிலும் இந்த ஓட்டமும் இனிமையும் இல்லை. ஆதலின் இந்த வளர்ச்சி பின் எழுந்த வளர்ச்சி என்பாரும் உளர்.

### கண்ணன்

திருமாலின் அவதாரமாகக் கருதப்படும் கண்ணன் தமிழர் உள்ளத்தைக் கவர்ந்தான். பக்தி இயக்கம் கரைபுரண் டோடிய பல்லவர் காலத்தில் கண்ணனைப் பற்றிய பாடல்கள் சிறந்த இலக்கிய மாயின. கண்ணன் கதை தூயநிலையில் சமணரிடையே வழங்குவதனைக் காப் பியமாக்கிக் காட்டுகின்றார் தோலாமொழித்தேவர். அரசன் நெடுமாலே என நம்பிய உலகத்தில் அரசனின் தெய்வத் தன்மையும், ஆற்றலும், கலையும், அழகும், இன் பமும் எல்லாம் விளங்குவதைத் தோலாமொழித்தேவர் பாடி முடிக்கின்றார். வாழ்க்கையின் முடிவில் துறவு மேற்கொள்ளும் கொள்கை அரசனின் சிறப்பெனக் காளிதாசர் இரகுவம்சத்தில் பாடுகிறார். துறவுநிலை ஒவ்வொருவருக்கும் எழவேண்டுவதொரு நிலையே என்று காட்டுவார் போலத் துறவினையும் முத்தியினையும் கூறிக் காப்பியத்தை முடிக்கின்றார் ஆசிரியர் தோலாமொழித் தேவர்.

### குறிக்கோள்

சூளாமணியில், சிந்தாமணியிற் போலக் குறிக்கோ ளின் ஆழம் இல்லை எனலாம். பயாபதி உலகின் சூளா மணி ஆதலைக் கூறுவதே இந்தக் காப்பியம் என்று கொள் ளும்போது இந்த வரலாற்றைப் பயாபதியின் மகனுன திவிட்டன் வரலாறு மழுங்கச் செய்துவிடுகிறது. திவிட் டன் வரலாறு மனத்தில் வேரூன்றுவது போலப் பயாபதி யின் வரலாறு வேரூன்றிவிடுகிறது என்று கூறுவதற் கில்லை. வாசுதேவர் இனி எதிர்காலத்தில்தான் நரகத்தி லிருந்து முக்தி பெறவேண்டுதலின் சிந்தாமணி ஆசிரியர் சீவகனைக் கூறியதுபோலத் திவிட்டன் முத்தி யடைந்ததாகச் சூளாமணி ஆசிரியர் கூறுவதற் கில்லை. இந்த இடர்ப்பாடு கதையிலேயே அமைந்து கிடக்கிறது. திவிட்டன் என்ற மகனைப் பெற்ற பெருமையும் பயாபதி

யினுடையதேயாம். அந்த வகையில் செல்வமெலாம் பெற்ற பயாபதியின் செல்வத்தின் சிறப்பினைக் கூறுவ தற்கே திவிட்டன் வருகிறான் என்று கொள்ளுதல் வேண்டும். ஆனால், அவனே அவனது வியத்தகு செயல் களால் நம் மனத்தைக் கவரும்போது பயாபதி என்ன ஆகிறான்? கண்ணனைப் பாடுவதுபோல் திவிட்டனைப் பாட வந்த புலவர் பெருமான் கண்ணன் நம் உள்ளத்தை உருக்குவது போல் திவிட்டன் உருக்குவதாகப் பாடுவதற் கிடமில்லாமற் போகிறது.

*உறுப்புகளின் சிறப்பு*

இவ்வாறு காப்பிய முழுதும் செல்லும் பாவிகப் பண்பு பொதுவான புராணக்கதை யளவிலும் குறிக்கோள் ஆழம் இல்லாமற்போனாலும், ஒவ்வொரு செய்யுளும் ஒவ் வொரு படலமும் முறையே முழு முழு மணியாகவும் சிறந்த மணிமாலையாகவும் நம் காதையும் கருத்தையும் கவர்ந்து இன்பத்தில் நம்மை ஆழ்த்துகின்றன. இத் தகைய இன்பத்தை வேறெங்கும் நாம் பெறுவ தில்லை. வடமொழிச் சொற்கள், வடமொழிக் கருத்துக்கள், வட நூல்களின் எதிரொலிகள் இங்கே கேட்டாலும் அவை யெல்லாம் இவர் பாடும் இனிய தமிழோசையில் தமி ழொடு தமிழாய்க் கலந்துவிடுகின்றன.

*இயற்கை*

இவர் இயற்கை அழகினைப் பாடும் வழியே புதிய தாகும். காடும் இவர் பாட்டில் சிறந்ததொரு கலியாண மண்டபமாக நகர வாழ்வின் நன்மையெலாம் ஒருங்கு திரண்ட நாகரிக நிலையமாகத் தோன்றப் பாடுகிறார். பூக்களின் திணைமயக்கங் கொண்டே துறக்க வாழ்வைச் சுட்டிக் காட்டுகின்றார். இவ்வாறு இயற்கையும் செயற்கை அழகெல்லாம் தோன்ற வீற்றிருப்பது இவர் காண்பதோர் புதுக் காட்சியாம்.

*பெருங்காப்பியம்*

ஐம்பெருங் காப்பியம் எனச் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்ற இவற்றைக் கூறுவர். இவற்றில் சிலப்பதிகாரம், சிந்தாமணி, வளையாபதி என்பன சமண நூல்களாகும். மற்றையன பௌத்த காவியங்கள். ஐஞ்சிறு காப்பியங்களென்று சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், உதயண குமாரர் காவியம், நாககுமார காவியம் என்பனவற்றைக் கூறுவர். இவற்றுள் சூளாமணி நீங்கலாக வேறெவையும் காப்பியம் என்ற வகையில் சிறந்தன ஆகா. நீலகேசியினை முன்னரே ஆராய்ந்தோம். உதயண குமார காவியம் பெருங்கதை யன்று. பிற்காலத்தே எழுதப்பட்டது போலும். உதயண குமார காவியம் 367 செய்யுட்கள் கொண்டது. உதயணன் கதையையே கூறுவது. திருத்தமான நடையையுடைய தன்று என இதனைப் பதிப்பித்த சாமிநாதய்யர் அவர்களே கூறுகின்றார். நாககுமார காவியம் இன்று பெயரளவில் விளங்குகிறது. ஐம்பெருங் காப்பியம் என்ற வழக்கு மயிலைநாதர் காலத்திலேயே 13-14-வது நூற்றாண்டிலேயே தோன்றியுள்ளது. (சூத்திரம் 387-உரை). ஐம்பெருங் காப்பியம் என்பதனால் ஐஞ்சிறு காப்பியமும் வழங்கியன போலும். சமணரிடையே வழங்கிய வழக்காகலாம் இது. எவ்வாறாயினும் சூளாமணி பழமையாலும், இலக்கியச் செறிவாலும் சமண மதத்தினைப் பாடும் தெளிவாலும், ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாக மதிக்கத் தக்க தாகும். சிறு காப்பியம் என்று கூறுவது எவ்வாறும் பொருந்தாது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளும் வரப் பாடுவது பெருங் காப்பியம் என்பர். ஒன்று குறையப் பாடுவது சிறு காப்பியம் என்பர். இந்த வகையாலும் நாற்பொருளும் கூறும் சூளாமணி பெருங் காப்பியமே ஆகும்.

# சிறு காப்பியங்கள்

## 1. யசோதர காவியம்

**கதை**

யசோதர காவியம் என்பது 330 பாடல்களால் ஆயது. கர்மத்தின் பயனை வற்புறுத்த வந்த ஒரு கதை இது. உதய நாட்டு மன்னன் மாரிதத்தன், சண்டமாரி தேவதைக்கு இரட்டையரைப் பலியிடுதற்கு ஆளைத் தேடும் போது தேடியவர்கள், இளஞ் சமணத் துறவிகளான அபயருசியையும் அவன் தங்கை அபயமதியையும் கொண்டுவர, அவர்கள் பஞ்சபரமேட்டிகளைத் தொழுது உயிர்விடத் துணிகின்றனர். அவர்களுடைய நகைமுகங் கண்டு வியக்கின்றான் அரசன். இதனை விளக்கும்படி அவன் கேட்க, இளந்துறவிகள் பழம்பிறப்பினைக் கூறுகின்றனர். அசோகன் நரைமயிர் கண்டு துறவு மேற்கொள்ள, அவன் மகன் யசோதரன் அமிர்தமதி என்பாளோடு அரசேற்கின்றான். அட்டபங்கன் என்ற யானைப்பாகன் பாடிய பாடலைக் கேட்டு அவன் மேல் காதல்கொண்டு அவனொடு அரசி உறவாடுவதைக் கண்ட அரசன் காமத்தை வெறுத்துத் துறவுகொள்ள எண்ணுகிறான். அவனுடைய தாயோ சண்டமாரிக்குப் பலியிட்டால் கேடெல்லாம் நீங்கும் என்றதும் கொலைக்கஞ்சி அவன் மாவால் கோழி செய்து பலியிட அதுவும் உயிர் பெற்றுப் புலம்புகிறது. அமிர்தமதி நஞ்சிட்ட சோறிட, யசோதரன் தாயுடன் அதனை

உண்டு மாள்கிறுன். இறந்த இருவரும் பலபல விலங்கு களாக மாறிமாறிப் பிறந்து வருகின்றனர். கடைசியாகக் கோழியாகப் பிறக்கின்றனர். அப்போது யசோதரன் மகன் யசோமதி அரசாள, அங்கு வந்திருந்த சமண ஞானி பழம்பிறப் பெல்லாம் கூறுகிறுர். பின் யசோமதி வேட்டையாடச் செல்லும்போது சுதத்த முனிவரைக் கண்டு உய்கிறுன். அவனுக்கு இரட்டை மக்களாகப் பிறந்தவர் தன் தந்தையும் பாட்டியுமே எனப் பழம் பிறப்பின் கதையெலாம் அறிந்து துறவு மேற்கொள் கிறுன்.

## முதல் நூல்

10-ஆம் நூற்றுண்டில் யசோதரன் கதை மக்கள் மனத்தைக் கவர்ந்தது. சோமதேவசூரி, வாதிராஜசூரி, புஷ்பதந்தர் முதலியோர் இக்கதையை வடமொழியில் எழுதியுள்ளனர். புட்பதந்தர் சொன்ன பொருள்சேர் கதை தன்னைத் தமிழில் செப்பியதே யசோதரர் காவிய மென்றும், அதனை இயற்றியவர் வெண்ணுவலுடையார் வேள் என்றும் ஒரு தமிழ்ப் பாடல் கூறுகிறது. கதையை அழகுபடப் பொருத்தமாக வளர்த்துப் போகின்றுர் ஆசிரியர்.

## இசை

சங்கீதம் காமத்தை விளைவிப்பது என்பது சைனக் கொள்கை. அதனை வற்புறுத்த இந்த ஆசிரியர் ஓர் அரசி யானைப்பாகன்மேல் காதல் கொண்டதற்குக் காரணம் யானைப் பாகனின் இசைவளமே என்று வற்புறுத்து கின்றுர்.

## காலம்

யானைப்பாகன் பாடிய பண் மாளவ பஞ்சமமாம். இதனைப்பற்றி முந்நூறு ஆண்டுகளுக்குப் பிற்பட்ட நூல் களிலன்றி முன்னூல்களில் காணப்படாமையால் விசய

நகர அரசிற்கு முந்தியது அன்று இந்த நூல் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். புறத்திரட்டு முதலிய நூல் களில் எடுத்தாளப்பெருமையும் இங்கு நாம் நோக்குதல் வேண்டும். உதயணகுமார காவியத்தைவிடப் பொருள் நயஞ் சிறந்திருந்தாலும் சூளாமணி முதலியன போலச் சிறந்ததென்று இதனைக் கொள்வதற் கில்லை.

## 2. சிறு புராணம் :-

## சாந்தி புராணம், நாரத சரிதை

### புறத்திரட்டு

புறத்திரட்டில் நாரத சரிதை என்ற நூலி லிருந்தும் சாந்தி புராணம் என்ற நூலி லிருந்தும் சில செய்யுட்கள் எடுத்தாளப்பெறுகின்றன. சாந்தி புராணச் செய்யுட்கள் எனக் காட்டப்பட்டவற்றில் இரண்டு மேருமந்திர புராணத்தில் உள்ளன. மேருமந்திர புராணக்காரரர் பழம் பாட்டினைப் பொன்னே போல் தம் நூலில் அமைத்துக் கொள்கின்றார் போலும். சாந்தி புராணம் என ஒன்று கன்னடத்தில் 9-ஆம் நூற்றாண்டில் 16-ஆம் தீர்த்தங்கர ராகிய சாந்திதேவரைப் பற்றிக் கூற எழுந்தது போலத் தமிழிலும் எழுந்த ஒரு நூலே சாந்தி புராணம் எனலாம். நாரத புராணம் என்பது கொல் என்ற சொல்லும் சொல்லாத ஓர் அரசனின் கதை போலும். துறவினைப் பேசும் பாடல்கள் இங்கும் உண்டு. ஸ்ரீ புராணத்தில் நாரதன், பர்வதன் என்ற இருவர் கதை வருதலின் அந்த நாரதன் கதையைக் கூறும் இந்த நூலும் சைன நூலே எனலாம்.

# 3. சிறு காப்பியம்:

# மேருமந்திர புராணம்

**காலம் - ஆசிரியர்**

நீலகேசிக்கு உரை எழுதிய வாமனமுனிவர் மேரு மந்திர புராணம் என்ற காப்பியத்தை இயற்றியுள்ளார் என்றும் இவர் 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் கண்டோம்.

**கதை**

வைசயந்தனும் அவனுடைய சகோதரர்களான சயந்தனும், சஞ்சயந்தனும் சுயம்பு என்ற தீர்த்தங்கரர் உபதேசத்தால் துறவிகளாகின்றனர். வைசயந்தன் மூவுலகுக்கும் சூளாமணி யாகின்றான். சஞ்சயந்த முனிவரை வித்தியாதரன் ஒருவன் வீணாக வற்புறுத்தியதனைப் பொறுத்து அதனால் அவரும் உலகுச்சியை அடைகின்றார். சயந்தன் இந்தக் கொடுமையைப் பொறாமல் பொங்கி எழுந்தபோது அதித்தியாபன் என்பவர் பழம் பிறப்பு கூறி விளக்குகின்றார். பத்திரமித்திரன் என்ற ஒரு வணிகன் தான் தேடிய பொருள்களை யாருக்கும் தெரியாமல் மந்திரி ஒருவனிடம் கொடுத்துப் பின்வந்து கேட்க, மந்திரி வஞ்சனையால் வணிகனைப் பித்தன் என்று உலகம் நம்புமாறு செய்கிறான். அரசி உண்மையைக் கண்டு பிடித்துவிடுகின்றாள். மந்திரி துன்பம் பொறாமல் செத்துப் பாம்பாகிறான். வணிகன் சமணத் துறவியின் நல்

உரை கேட்டு அறம்பல செய்கின்றான். அதனைப் பொறாத அவன் தாய் மனமெலிந்து செத்துப் புலியாகப் பிறக்கிறாள். வணிகன் அரசியின் வயிற்றில் பிறக்கின்றான். மந்திரிப் பாம்பு அரசனைக் கடிக்க அரசன் உயிர் இழக்கின்றான். ஆனால், பாம்பு இறந்து விலங்காகிறது. அரசனும் யானையாகப் பிறக்கிறான். அரசிளங் குமரனாகப் பிறந்த வணிகன் துறவுக்கோலம் பூண்டு சாரணத் தன்மையை அடைகின்றான். விலங்காய்ப் பிறந்த மந்திரி பின்னர்க் கோழிப் பாம்பாகப் பிறந்து யானையாகப் பிறந்த அரசனைக் கடிக்க அரசன் இறந்து அமரனாகிறான். இப்படி மாறிமாறிப் பிறப்பதையெல்லாம் இந்தப் புராணத்தில் கேட்கிறோம். இவர்கள் பூமியிற் பிறந்து பின் சுவர்க்க லோகத்திற்குப் போகின்றனர். மந்திரிப் பாம்பே பின் சஞ்சயந்த முனியை எதிர்த்த வித்தியாதரனாகப் பிறக்கிறது. பழைய காலத்தில் நடந்த இந்தக் கதையைக் கேட்டிருந்த அந்த வித்தியாதரனும் தன் தீமையெலாம் நீங்கி நல்வழி அடைகிறான். சயந்தனும் அவன் தாயும் மேரு என்றும் மந்தரன் என்றும் இரு அரசகுமாரர்களாகப் பிறந்து சமவசரணம் அடைகின்றனர். இவ்வாறு நல்வினையும் தீவினையும் பல பிறப்பிலும் தொடர்ந்து வருவதனைச் சங்கிலிபோல் பிணித்துப் பலபல கதையாகக் கூறுவதே இந்த மேருமந்தர புராணமாம்.

**சிறப்பு**

இதன் ஆசிரியர் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லவர். அறிவின் விளக்கமே இலக்கிய நயத்தை விட இந்நூலில் மேலோங்கித் தோன்றுகிறது.

**பாடல் தொகை**

1406 பாடல்கள் என்று ஒரு பாட்டு இப்புராணத்தின் பாடற் றொகையைக் கூறும். ஆனால், இப்பொழுது கிடைத்துள்ளன 1405 பாடல்களே. இப்புராணத்தி

லுள்ள இரண்டு பாடல்கள் சாந்தி புராணப் பாடலெனப் புறத்திரட்டு கூறுதல் கண்டோம். இந்நூலின் கடைசிப் பாடல் நரிவிருத்தத்தின் ஈற்றிலும் வரக் காண்கிறோம். எனவே, பழைய பாடல்களைத் தம் நூலில் அமைத்து வாமனர் பாடுகின்றார் என்பது தெளிவாகின்றது.

***பிற்காலச் சமண இலக்கியம்***

கர்மச் சங்கிலியின் பிணைப்பில் ஈடுபட்டு அது பின்னிப் பிணைவதனைக் காண்பதில் பிற்காலச் சைன இலக்கியம் தன் மனதைப் பறிகொடுக்கின்றது எனக் காண்கிறோம். காலத்தின் கோலம் இது.

# 4. சமணப் பெண் கவிகள்

### கவுந்தி

குரத்திகள் என்று சமண மதத்துப் பெண்துறவிகள் வழங்கப் பெறுவர் எனக் கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் காண்கிறோம். ஆர்யாங்கனைகள், இயக்கிகள், கவுந்திகள் என்ற பெயர்களும் இவர்களுக்கு வழங்கும். சிலப்பதிகாரத்தில் வரும் கவுந்தியடிகளை யாரே அறியாதார்? சிந்தாமணியில் இடைச் செருகல்களாக வந்த பாடல்களை நச்சினார்க்கினியர் கவுந்தியார் பாடல் எனக் கூறுவர். பெண் துறவி பாடிப் புகுத்தியவை என்பது இதனால் தெளிவாகிறது. அவர் காலமாகிய 14-15 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இவ்வாறு இந்தப் பாடல்கள் சிந்தாமணியில் புகுந்திருத்தல் வேண்டும். சிந்தாமணிப் பாடல்கள் என்றே உலகம் நம்பும் வகையில் பாடல் பாடக்கூடிய பெண்மணியின் பெருமையை என் என்பது? நச்சினார்க்கினியரும் இரண்டு பாடல்களையே கந்தியார் பாடல் எனப் பிரித்துக் காட்டுகிறார். பிறவற்றை அவராலும் பிரித்தறிய முடியவில்லை. இந்தக் கந்தியார் என்ற பெயர் கவுந்தி என்பதன் மருவோ பாட பேதமோ ஆகலாம்.

### அவ்வை

இப்பெண் துறவிகளுக்கு அவ்வை என்பதும் பெயர் எனச் சிந்தாமணி நூலின் வழியே அறிகின்றோம். தமிழில் அவ்வையார் பாடல்கள் என வழங்கும் அறநூற்

களில் சில இவ்வாறு பெண் துறவியின் பாடலாகவும் இருந்திருக்கலாம். சாரணர்களைப் போல ஊர் ஊராகத் திரிந்து அறிவுரை கூறும் வாழ்க்கை துறவுப் பெண்கள் வாழ்க்கை போன்றதே அன்றோ?

### வேறு பெண்கள்

வேறு பிற பெண் துறவிகளும் பாடி இருக்கலாம். உறுதியாய் ஒன்றும் தெரியவில்லை யானாலும் பல பெண்கள் துறவிகளாக உலகில் வாழ்ந்தது கல்வெட்டுக்களில் தெரிகிறது. ''பிருதிவி விடங்க குரத்தி'' (3561—1909) என்பவரும், ''குணசீர்த்திபடாரகரின் வழிமாணுக்கியர் கனகவீரக் குரத்தியர்'' (S. I. I. vol. III. No. 92) என்பவரும் சமணத் துறவிகளில் சிறந்தவராகக் கல்வெட்டில் இடம் பெறுகின்றனர். மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மர் காலத்து ''அரிஷ்ட நேமிபடாரர் மாணுக்கியர் பட்டினி குரத்தி அடிகள்'' பெண் பள்ளியும் கிணறும் கண்டதனைக் கூறும் ஒரு கல்வெட்டு (S. I. I. vol. IV. No. 56). ஸ்ரீமிழலூர்க் குரத்தி, சிறிவிசைக் குரத்தி, நால்கூர் குரத்தி, இள நேச்சுரத்துக் குரத்தி, அரிட்டநேமிக் குரத்தி, திருப்பருத்திக் குரத்தி, கூடற் குரத்தி என ஊர்ப் பெயரோடு விளங்கியவர்களையும் கல்வெட்டுக்கள் கூறும்.

### பிற பெயர்கள்

கந்தி, அவ்வை, அம்மை, கன்னி, பைம்மை, சாமி, பெருமாட்டி, ஆசான், தலைவி, ஐயை என்பன சமணப் பெண் துறவிகளின் பெயராகும். இந்தப் பெயர்கள் வரும்போது சமணம் இப்பெண்களால் பரவிய வரலாற்றை அறியலாம். இவர்கள் பெண்களிடையே அறிவை வளர்த்தவர் ஆவர். சிரவண பெள்குளக் கல்வெட்டுக்களும் நாகமதி கந்தியார், சசிமதி கந்தியார், நவிலூர் ராஜிமதி கந்தியார், அநந்தமதி கந்தியார், ஸ்ரீமதி கந்தியார், மாங்கப்பெ கந்தியார் என்பன முத

லான பெயர்களும் கூறும் நீதி நூல்கள் என்பது பல வடமொழிப் பாடல்களின் மொழிபெயர்ப்புப் போல் தோன்றுகிறது. இதனை எழுதிய அவ்வையார் என்பவர் இத்தகைய சமணப் பெண் துறவியாய்ப் பெண்களிடையே அறிவையும் சமணக் கொள்கையையும் வளர்த்துத் தாம் கற்ற நூல்களின் கருத்துக்களையும் தமிழ்ப் பாட்டாகப் பாடிவந்தவர் ஆகலாம்.

# 17. கலிங்கத்துப் பரணி

**பரணி**

ஆயிரம் யானையைப் போர்க்களத்தில் வென்ற வீரனைப் பாடும் நூலே பரணி என்ற பிரபந்தம் ஆகும். பரணி என்பது காடுகிழாஅள் எனப் பெறும் காளியின் நட்சத்திரமாதலின் போர்மகளான காளிப் பாட்டாகவும் இதன் போக்கு அமையும். காளியிருக்கும் பாலைவனம் காடுகிழாளின் நடுக்கந்தரும் கோயில். அங்கு அவளைச் சூழ்ந்திருந்து அச்சமுறுத்தும் பேய்கள், பேய்கள் உணவின்றிப் பட்டினிக் கோலத்தில் வருந்துதல், அப்போது பேய் ஒன்று வருதல், அஃது அரசன் குல வரலாறு கூற வழி செய்தல், அவன் போர் எழுச்சியும் போரும் கூறி, அங்குப் பேய்களுக்குக் கிடைக்கும் பேரரசப் பிண விருந்தினையும் பாடுதல், போர்க்களம் பாடுதல், பிண விருந்து அமைத்தலைக் கூழடுதலாகப் பாடுதல், இப் படி எல்லாம் பரணி பாடிச் செல்லும். முதலில் காவற் கடவுளரோடு அரசனையும் பாடி அவனைக் காக்கவேண் டும் எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்து. பகைவர் நாட்டுப் பெண்களைப் பிடித்து வைத்திருக்கும் இடமே வேளம் (விரும்பத்தக்க இடம், Harem) எனப் பெயர் பெறும். வேளத்தி லிருக்கின்ற பெண்கள், அரசன் மேல் காதல்கொண்ட மகளிராய் இவ்வரலாற்றைக் கேட்கக் கதவினைத் திறக்கும்படி முதலில் பாடுவது வழக்கம். இவை எல்லாம் கலிங்கத்துப் பரணியிலிருந்தே நாம் அறிகிறோம்.

*வளர்ச்சி*

கலிங்கத்துப் பரணியே தலைசிறந்த பரணி. சோழர்கள் பிற நாடுகளை வென்றுவரத் தொடங்கியபோது போரைப் பாடும் வழக்கம் பரவியது. சங்க காலத்தில் ஏதோ ஒரு பாடலில் போரின் கொடுமையைப் பேயின் விருந்தாகப் பாடியது உண்டு. களவழி என்ற நூலாகவும் தனித் தனியான பாடலின் தொகையாகவும் பாடியது உண்டு. ஆனால், தொடர்ந்த காவியம் போல் போரைப் பாடியது பரணிப் பிரபந்தமே ஆம். போரின் கொடுமையை, அருவருப்பை, அச்சநடுக்கத்தை, வீரத்தை இங்குக் காணலாம். இளிவந்த சுவை எல்லாம் பிற சுவையோடு ஒன்று சேர்ந்த தனிச் சுவையாகச் சிறக்கின்றது இங்கே. அருவருப்பும் அழகாகும் சிறப்பினை இங்கே காணலாம். அழகில்லாமையை அழகாக்கிக் காட்டும் அருமை இங்கு எளிமை ஆகுகிறது. இதற்கே பேயுலகம் என்றதொரு தனியுலகினைப் படைக்கின்றனர் புலவர். அங்கே ஜாலம், விருந்து முதலியன அந்த உலகிற்கு ஏற்றாற்போல நிகழ்கின்றன.

*பிற பரணிகள்*

சோழர்கள் வெற்றியை எல்லாம் கொப்பத்துப் பரணி, கூடல்சங்கமத்துப் பரணி, குலோத்துங்கச் சோழன் காலத்தில் கருணாகரத்தொண்டைமான் கலிங்கத்தின் மேல் படை எடுத்து வென்ற கலிங்கத்துப் பரணி, விக்ரம சோழன் கலிங்கம் வென்ற கலிங்கப் பரணி எனப் பல பரணிகள் தோன்றியவற்றில் கலிங்கத்துப் பரணி தான் மற்றவற்றை யெல்லாம் மறைந்தொழியச் செய்து இன்றும் நின்று நிலவுகிறது. தெய்வப் போரினைப் பாடுவதாகக் கூத்தர் பாடியது வேறு ஒரு முறை. பரணிப் போரை ஞானப் போராகத் தத்துவராயர் முதலியோர் பாடியது மூன்றாவது போக்கு. இந்த இரண்டு போக்கும் தோன்றுவதற்கு முன் எழுந்தது கலிங்கத்துப் பரணி.

அதனை விஞ்ச முடியாமையாலேயே இந்த இரு வேறு போக்கும் எழுந்தன எனலாம். பொருளால் மட்டுமே அன்றித் தாழிசைகளை இப்பொருளுக் கேற்ற சந்தத்தில் போர் நடை போலவும், போர் ஆரவாரம் போலவும் பொருளை ஒலியே வெளியிடுவது போலவும் வரப் பாடி, இந்த வகையில் வெற்றி எல்லாம் தனதே ஆக இந்த ஆசிரியர் அமைத்துப் புத்துயிர் தந்து வழக்கத்தில் கொண்டு வந்து விட்டார்.

**வரலாற்றுக் காப்பியம்**

இந்த நூல் சோழ வரலாற்றினை அறிவதற்குப் பேருதவியாதலால் வரலாற்றுப் புனைந்துரை (Historic Romance) போலவும் மாயாவி (Fairy) க் காப்பியம் போலவும் விளங்குகிறது.

**ஆசிரியரும் காலமும்**

இதனை இயற்றியவர் தீபங்குடி சயங்கொண்டார். சயங்கொண்டார் என்பது சோழ சக்கரவர்த்திகள் பெயரைச் சோழ அரண்மனைகளில் மந்திரி முதலியோர் பெறுவது போலச் சோழ அரண்மனைப் புலவரும் பெறுகிறார் போலும். இவரைக் கவிச்சக்கரவர்த்தி என்று அழைப்பதும் உண்டு. இவர் தீபங்குடிச் சமண வகுப்பினைச் சேர்ந்தவர். இவர் காலம் குலோத்துங்கன் காலமாதலின் 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பதில் ஐயம் இல்லை.

## 6. பக்திப் பாடல்கள்

### பிரபந்தங்கள்

பல்லவர்கள் காலத்தில் பக்தி வெள்ளம் தமிழ் நாட்டில் எங்கும் பரந்தோடியது. தேவாரம், நாலாயிரம் என்பவை இந்த வெள்ளம் தேங்கிய ஏரிகளாக இன்றும் காட்சி அளிக்கின்றன. மதப் பிணக்குகள் எழுந்தன. சமயங்கள் அரசியலைப் பெருஞ் சார்பாகக் கொண்ட போது மேனாட்டுச் சமயப் போர் போல இங்கு ஒன்றும் எழவில்லை. மஹேந்திரன் சைவனாய பின்னும் சமணர்களைப் பாராட்டுவதில் அவன் பின்வாங்கவில்லை என்று கல்வெட்டுக்கள் கூறும். இங்கே சமணத்தின் அடிப்படை சமுதாயத்தின் அடிப்படை ஆனமையை நாம் காண வேண்டும். கொல்லாமையை எல்லோரும் உடன்படுகின்றனர். சமுதாயத் தொண்டினைக் கடவுள் தொண்டு என்று எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். சைவரது பெரியபுராணம் இதனை வற்புறுத்தவில்லையா? திருநாவுக்கரசர் சமணராக இருந்து பின் சைவரானவர். தம் கடவுளைத் தயாமூல தத்துவன் எனப் பாடுகின்றார். சமண மதத்தின் அடிப்படை எல்லாம் இவ்வாறு அவர் பாட்டில் சைவமாகின்றன. ஒரு வகையில் நோக்குமிடத்து இது சமணரின் புதுப் பிறப்பே எனலாம்.

பக்திப் பெரு வெள்ளம் சமண மதத்தையும் தன்னுள் ஆழ்த்தியது. யாப்பருங்கல விருத்தியுள் எடுத்துக் காட்

டப்பெறும் பல சமணப் பாடல்கள் பக்திப் பாடல்களாக அந்நாளைய சைவ வைணவப் பாடல்களைப் போலவே உள்ளத்தினை உருக்கக் காணலாம். திருநாவுக்கரசர் சமணராய் இருந்தபோது பாடியனவாகப் பல செய்யுட்கள் சமணரிடையே வழங்குகின்றன. இவற்றில் தேவாரத்தின் எதிரொலி கேட்பது இயல்பே. பின்வந்த நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்களில் எல்லாம் இந்தப் பக்திப் பெருவெள்ளம் சுழி இடக் காணலாம்.

# 7. பிற நூல்கள்

### *பிரபந்தங்கள்*

பல்லவர் காலத்தில் உலா, கலம்பகம், அந்தாதி போன்ற பிரபந்தங்கள் வளர்வன ஆயின. பன்னிரு பாட்டியல் இவற்றிற்கு இலக்கணம் கூறும். சமணர் களும் இந்த வகையில் பல பிரபந்தங்களைப் பாடியிருக்கக் கூடுமென்பது யாப்பருங்கல விருத்தியில் எடுத்துக் காட்டப்பெறும் பாடல்களால் அறியலாம். அங்கே கலிப்பாக்களாகக் காட்டப்பட்டவை இலக்கிய வளம் சிறந்து விளங்கக் காண்கிறோம். அருகன்மேல் ஒரு பாவைப் பாட்டும் இருந்ததென அறிகிறோம். இவை யெல்லாம் முழு நூல்களாகக் கிடையாமை வருந்தத் தக்கதேயாம். ஆனால், திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி என்ற நூல்கள் முழுதும் கிடைத்துள்ளன. இவை பிற் காலத்து நூலாயினும் சமணப் பிரபந்தங்கள் மற்றைய பிரபந்தங்கள் போலவே அமைந்திருத்தல் கூடுமென் பதனை விளக்குகின்றன. திருக்கலம்பகம் செய்தவர் உதீசிதேவர். உதீசி என்றால் வடக்கு என்று பொருள். திருநூற்றந்தாதி செய்தவர் அவிரோதியார். இந்தப் பெயரே பிற்காலச் சமணத்தின் பொது நோக்கை உணர்த்தும். இது மயிலைநாதர் என்ற நேமிநாத தீர்த்தங்கரர் கோயில் திருமயிலையில் இருந்ததைப் பாடுகிறது. இவர்கள் பிராகிருத அறிவினை, இவர்கள் பயன்படுத்தும் சொல் வடிவங்கள் வழியே அறியலாம்.

பிரகிருதி என்பது படி என வருதல் காண்க. ஆதிநாதர் பிள்ளைத் தமிழ் என்ற ஒரு நூல் அண்மையில் வெளியிடப் பெற்றுள்ளது. விசயநகர அரசர் காலத்து எழுந்த புத்துணர்ச்சியால் தோன்றிய நூல்களில் இதுவும் ஒன்றாக லாம்.

*பெயர் விளக்கம்*

கலம்பக மென்பது பலவகையான பாவகைகளின் தொகையாம். செய்யுள் வழக்கிலும் உலக வழக்கிலும் வழங்கிவரும் பல பாட்டுக்களைப் பின்பற்றிப் பாடுவன வற்றை ஒருங்கு சேர்த்த கதம்பமாகும் இது. அந்தாதியைப் போல இதுவும் ஒரு பாட்டின் முடிபே அடுத்த பாட்டின் முதலாகக் கடைசி பாட்டின் முடிவே முதல் பாட்டின் முதலாக அமைந்து மாலையாக வரும். பிள்ளைத்தமிழ் என்பது கடவுளை (அல்லது புரவலனை)க் குழந்தையாக வைத்து, அதன் பலவகைப் பருவங்களைப் பாடுவதாம். இத்தகைய சமணப் பிரபந்தங்கள் பல அச்சில் வராமலே உள்ளன.

*விசய நகர ஆட்சி*

விசய நகர ஆட்சியில் எல்லாச் சமயத்தினர்க்கும் பேராதரவு கிடைத்தது. சகல வர்ணாஸ்ரம தர்மங்கட்கும் காவலாக அமைந்தது அந்த அரசு. அன்று பொதுமை பெற்ற நான்கு சமயங்களாவன மஹேச்வரம், பௌத்தம் வைஷ்ணவம், ஆருகதம் என்பன. சைனர்களும் பொது நோக்குடையவர்களாக வாழ்ந்தார்கள். சிவனும் தாத்திரியும் சுகதனும் ஆன ஜீன பரமாத்மனுக்கு வணக்கம் என்று கூறுகிறது ஒரு கல்வெட்டு. 1151-ல் தோன்றிய கல்வெட்டு ஒன்றின்படி, இந்துக்களும் சினாலயங்களைப் பேணுதற்குக் காப்புக்கட்டிக் கொண்டனர். விசய நகர அரசுக்கு முந்தியும் வழங்கிய நிலையே இது. விருபாட்ச உடையார் காலத்திலும் புக்கராயர் காலத்திலும்

சைனர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே நில எல்லைத் தகராறு எழுந்தபொழுது அனைவரும் ஒன்றுகூடிச் சைன தர்சனத்துக்கும் வைணவ தர்சனத்துக்கும் வேற்றுமை இல்லை என்று கூறி, வைணவர்களே சைனக் கோயில் களுக்கு மெய்க்காப்பாளரை அமைப்பதென்றும் வெள்ளை பூசுவதென்றும் ஒப்புக்கொண்டு, கல்லில் எழுதி வைத் தனர். இருகப்பர் என்ற தண்டநாயகர் சைனராயிருந்து மேருமந்திர புராணம் இயற்றிய வாமன முனிவர் காலத் தில் திருப்பருத்திக்குன்றச் சைனக் கோயிலை வளம் செய்தமையும் முன்னரே கண்டோம். பதினாறும் நூற்றாண் டிலும் சமணர்கள் தம் சைனக் கொள்கையே வெல்ல வேண்டும் என்று வாழ்த்தினாலும் ஆதிவராக மூர்த்தியை யும் சம்புவையும் வாழ்த்துகின்றனர் (EC. VI K. P. 47). வீர சைவர்களும் சைனர்களும் தம்மிடையே பல தகராறுகள் எழுந்தபோதும், ஒத்து வாழ்ந்ததோடு வீர சைவர்கள் சைன மதத்தை எதிர்ப்பாரையெல்லாம் சிவனுக்கும் சங்க மர்களுக்கும் துரோகிகள் என்று முடிவு செய்வதையும் காண்கிறோம் (EC. V v/128). சைன விக்கிரகங்கள் லிங் கங்களோடு ஒருங்கு அமையத் தொடங்கின (Mysore E. R. 1925 P. 15). விசயநகர அரசர்களின் மனைவியர் சிலர் சைனர்களாகவும் விளங்கினர். அரசர்களும் அரசி யரும் சினாலயங்களைக் கட்டுவதோடு அவற்றிற்குப் பல கொடைகளும் வழங்கினர். நகரங்களிலெல்லாம் சைன அறிஞர்கள் திரண்டனர். கிருஷ்ணதேவராயர் காலத் தில் வாதி வித்தியானந்தர் சைன மதப் பேரறிஞராகவும் பெரும் பேச்சாளராகவும் விளங்கினார். கிருஷ்ணதேவ ராயர் காலத்தில்தான் மண்டலபுருடர் சூளாமணி நிகண்டு இயற்றிப் பேரும் புகழும் பெற்றார். இந்தக் காலத்தில் எழுந்த சமண இலக்கியங்களில் சிலவற்றை முன்னரே குறிப்பிட்டோம். ஏட்டில் இருக்கின்றன வற்றை ஆராய்ந்தால் இன்னும் பல வெளிவருதல் கூடும்.

### இன்றும்

பல சமணப் பெரியோர்கள பழைய தமிழ நூல களைப் போற்றி வளர்த்து வந்தார்கள். வைதிக அந் தணரான நச்சினார்க்கினியர் சமணராய்ச் சிந்தாமணிக் குப் பொருளறிந்து உரை எழுதினார் என்ற செய்தியும் வழங்கி வருகிறது. இந்தப் பரம்பரை தமிழ் நாட்டில் தொடர்ந்து விளங்கி வந்துகொண் டிருக்கிறது. அதன் இந்நாளைய விளக்கமாகப் பேராசிரியர் சக்கரவர்த்தி நயி னார் விளங்குகிறார். அவருடைய தந்தையார் அப்பாசாமி நயினார் வழியேதான் சாமிநாதய்யர் முதலியோர் சைனப் பெருநூல்களையும் விளக்கங்களையும் பெற்றார்கள். அவர் களது **வீடூர்** சைன சமயக் கொள்கையின் இருப்பிடம் எனலாம். சித்தாமூர் மடம் தமிழ்ச் சைனர்களின் ஞான பீடமாம். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் போன்ற வர்கள் சமணக் கொள்கையின் பொதுமையினை விளக்கி எழுதியும் பாடியும் வருவா ராயினர்.

### பெண்கள்

சைனப் பெண்மணிகளும் சமண இலக்கிய அறிவில் தலைசிறந்து இருந்தார்கள் என்றும் அவர்களில் கணவ னோடு கும்பகோணத்தில் வாழ்ந்த ஓரம்மையாரிடமிருந்து பல நுட்பங்களைத் தாம் அறிந்து கொள்ள முடிந்ததென் றும் சாமிநாதய்யர் கூறுகின்றார். சைன இலக்கிய ஆராய்ச்சிக்குத் தாமோதரம் பிள்ளையும் சாமிநாதய்யரும் செய்த உதவியை மறக்க முடியாது. எனவே, சமண இலக்கிய அறிவு இன்றும் நின்று தமிழ் நாட்டில் விளங்கு கிறது எனலாம்.

# வசனம், இலக்கணம், நிகண்டு முதலியன

## 1. வசன காப்பியம்: ஸ்ரீ புராணம்

### 1. பழைய நிலை

*பழைய உரைகள்*

தமிழில் வசன நூல்கள் இலக்கியமாக அமைந்தவை கிறித்தவர்கள் எழுதத் தொடங்குவதற்கு முன் இல்லை என்றே சொல்லிவிடலாம். தொல்காப்பியர் கூறும் உரைச்செய்யுள் வகையில் சிறுகுரீஇயுரை முதலியன வழங்கி இருத்தல் வேண்டும். சிலப்பதிகாரம், பெருந்தேவனுர் பாரதம் முதலியவற்றில் சில சில வசனத் தொடர்கள் வருகின்றன. ஆனுல், அவற்றை உண்மையான வசன இலக்கியம் என்று சொல்வதற்கு இல்லை. இலக்கண நூல்களுக்கு உரையாக எழுந்த இறையனுரகப்பொருள் உரை முதலியவற்றில் ஒரு சில பகுதிகள் இலக்கிய நயங்கொண்டு விளங்கினுலும் அவை நூலுக்கு உரையாக எழுந்தனவே யன்றி உரைநடை இலக்கியமாக எழுந்தன அல்ல. இவ்வாறே மணிப்பிரவாள நடையில் எழுந்த வைணவப் பேருரைகள் மிகச் சிறந்தன ஆனுலும் உரைநடை இலக்கியங்கள் ஆவதற்கில்லை.

## *புராணம்*

*இன்று உரைநடை இலக்கியமாகக் கிறித்தவர்கள் எழுதுவதற்கு முன் தோன்றி விளங்குவது ஸ்ரீ புராணம் என்பதேயாம். இது சைனநூல் என்பது சொல்லாமலே விளங்கும். குணபத்திராச்சாரியார் ஒன்பதாம் நூற்றுண்டில் இயற்றிய 63 பெரியோர்களின் வரலாறு கூறும் உத்தர புராணத்தினைப் பின்பற்றிய நூலாகும் இது. புராணம் என்பது பழைமை அல்லது பழைய வரலாறு என்று பொருள்படும். ஸ்ரீ என்பது தமிழில் திரு என்பது போலச் சிறப்பினைக் குறிக்கும் அடையாகும். முனிகள் கூறும் புராணத்தில் தலம், காலம், வீட்டுவழி, நல்லோர், அவரது நற்செயல் என்ற ஐந்தும் கூறப்பெறும். பாவலர் இயற்றும் புராணத்தில் உலகம், நாடு, நகரம், அரசு, வீட்டுவழி, ஈகையறம், கொடையறம், பிறப்புக்களின்வகை, பயன் என்ற எட்டும் கூறப்பெறும். நாடும் நகரமும் அரசும் கூறித் தொடங்கும் பின்னைய தமிழ்ப் புராண மரபு இந்தச் சைன மரபை ஒட்டி எழுந்ததே எனலாம்.*

## *வடமொழிக் கலப்பு*

*ஸ்ரீ புராணம் என்ற இந்த நூல் மணிப்பிரவாள நடையில் அமைந்தது. பிறமொழி வல்லவர் தமிழில் எழுதும்போது பிறமொழி கலந்தே தமிழில் எழுதுவது இயல்பு. கி. மு. மூன்ரும் நூற்ருண்டைய குகைக் கல்வெட்டுக்கள் இத்தகையனவே எனலாம். பௌத்தர்களும் சமணர்களும் தத்துவக் கருத்துக்களை வெளியிடுவதற்குத் தாமறிந்த பிராகிருதக் கலைச்சொற்களைப் பயன்படுத்தி யிருக்கலாமென்று நாம் எதிர்பார்க்கலாம். இத்தகைய நடையைச் சம்பந்தர் ''ஆரியத்தோடு செந்தமிழ்ப் பயன் அறிகிலாது'' (இரண்டன் தூய்மையையும் தனித் தனி வைத்து அழகு காணுது) ''சங்க பங்கமாக'' (சமஸ்க்ருதத்தைப் பங்கப்படுத்திச் சிதைக்கும் பிராகிருதமாகிறது) உரைப்*

பதே என இகழ்வார் ஆயினர் போலும். ஆனால், இந்த மணிப்பிரவாள நடை வளர்ந்துவரத் தொடங்கியது. பெருந்தேவனார் பாரதத்தில் இன்று காணப்பெறும் உரை நடைப் பகுதிகளில் பல வடமொழிச் சொற்கள் வரு தலைக் காணலாம். இந்தப் பாரதம் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காலமான 9-ஆம் நூற்றாண்டையதெனலாம். 10-ஆம் நூற்றாண்டு முடிகின்ற தறுவாயில் (கி. பி. 988) எழுந்த செம்பியன் மகாதேவிக் கல்வெட்டு ''மாணிக்கங்க ளிரண்டினால் மரகதைர் அஷ்டாபிர் உஷ்ணம்சு திக்வனர்'' என்று பாடிப் போகின்றது. இதனுள் ''பாயாத்'' என்ற வினையும் வடமொழியாகவே வருகிறது. இங்கே பெயர்ச்சொற்கள் வடமொழி வேற்றுமை உருபேற்றே வருவதும் காணலாம்.

*மணிப்பிரவாளம்*

இவ்வாறு இந்த நடை பெருவழக்காக வழங்கியதால் 11-ஆம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழியம் இதற்கு இலக்கணம் கூறவேண்டுவதாயிற்று.

''இடையே வடவெழுத்தெய்தில் விரவிய வீண்டெதுகை
நடையே துமில்லா மணிப்ரவாள நற்றெய்வச் சொல்லின்
இடையே முடியும் பதமுடைத்தாங் கிளவிக் கவியின்
தொடையே துறைநற் பிரளிகை யாதி துணிந்தறியே''

என்பது வீரசோழியம். மணிப்ரவாளம் என்பதற்கு முத்துமணியும் பவளமும் கலந்த மாலை போலத் தமிழ்ச் சொல்லும் வட சொல்லும் கலந்த இலக்கிய நடை என்று பொருள் கூறுவர் தமிழர். மலையாளத்தில் மணிப்பிரவாளத்திற்கு இலக்கணங் கூறும் லீலாதிலகம் என்ற நூல் மணிப்பிரவாளம் என்பதற்குச் சிவந்த மாணிக்க மணியும் சிவந்த பவழமும் கலந்து கோத்த மாலையில் இரண்டும் நிற வேறுபாடு தோன்றாது ஒன்றாகக் கலந்து விடுவது போல இரு மொழிச் சொற்களும் எளிதில் விளங்குவனவாக அமையும் நடையே எனப் பொருள் கூறும்.

# 2. தமிழ் வசன புராணம்

*சொற்கள்*

தமிழில் வழங்கும் ஸ்ரீபுராணத்தில் உருபேற்ற வடமொழிச் சொற்களும் வினைச்சொற்களும் வருவதோடு தத்துவத்தை விளக்கும் இடங்களில் வடமொழிச் சொற்கள் தொடர்ந்து வரவும் காண்கிறோம். ஆனால், மலையாள மணிப்பிரவாளத்தில் போலத் தமிழ்ச் சொற்கள் வடமொழி உருபு கொண்டு முடியக் காணோம். தனித் தமிழாக வரும் அழகிய சொற்றொடர்களும் இடையிடையே தமிழ்ப் புராணத்தில் உண்டு.

*பாடல்கள்*

வடமொழிப் பாடல்களை ஒவ்வொரு பகுதியின் தலைப்பிலும் நூலாசிரியரே எழுதுகின்றார் எனலாம். இடையிடையே பழைய மகாபுராணத்தின் வடமொழிப் பாக்களை எழுதுவதோடு தமிழ்ப் பாக்களையும் பழைய நூல்களிலிருந்து தருகிறார் என்று கொள்ளவும் இடமுண்டு. இந்தப் பாடல்கள் பெரும்பான்மையும் இராம கதையைப் பற்றியன. இந்தச் செய்யுட்கள் ஆசிரியப் பாவாகவும் அறுசீர் விருத்தமாகவும் வருகின்றன. உரையாசிரியர்கள் காட்டும் பழைய இராமாயணம் பஃறொடை வெண்பாவால் அமைந்திருக்கக் காணலால் இவை அவர்கள் காட்டும் இராமாயணத்திற்கும் பின்னே தோன்றிய

வேருெரு மொழிபெயர்ப்பாகலாம். வேருெரு தமிழ்ச் சைன இராமாயணமும் ஆகலாம். இனி, மல்லிநாத சுவாமி புராணத்தில் வரும் அகவற் பகுதிகள் ஆசிரியரே இயற்றியன போலும். மோனை நயம் வர இந்நூல் எழுதப் பட்டிருப்பதை ஆராய்ந்து படிப்போமாஞல் இந்த உரை நடையின் சந்த நயம் நன்கு விளங்கும்.

# 3. பேச்சு நடை

சொற்றொடர்கள் நீண்டும் குறுகியும் பொருளுக்கேற்ப அமைந்து செல்கின்றன. நீண்டு செல்லும் சொற்றொடர்களில் பொருள் மயக்கம் நேராதபடி எழுவாயோ உருபேற்ற பெயரோ சுட்டாகவும் பெயராகவும் இடையிடையே திருப்பிச் சொல்லப் பெறுதலும் உண்டு. இந்த மயக்கம் நேராதபடி பெயரையே இரண்டு முறை கூறுவதும் உண்டு. சொற்களைப் பொருள் விளங்கும் வகையில், ஆனால் இலக்கணத் தொடர்பு இல்லாத முறையில் இடைப்பிறவரலாக இந்நூல் எழுதிச் செல்லுதலையும் காணலாம். இத்தகைய நடை 20-ஆம் நூற்றாண்டில் பரவிவருதல் குறிப்பிடத் தக்கது. பேச்சு நடையில் இடத்துக்கேற்ப இலக்கண முறைக்கு மாறாக முடிபுகள் மாறிப்போதல் போல, இந்நூலிலும் வரக் காணலாம். எனவே, பேச்சு நடையை ஒட்டி இந்தப் புராண நடை செல்கிறது என்று கூறலாம்.

### அறவழிக் கதைகள்

எத்தனையோ வகையான கிளைக் கதைகளையெல்லாம் கூறிக்கொண்டு இந்த நூல் செல்லுதலின் அறவழிக் கதைகள் என்ற இலக்கிய அமைப்பிலும் சிறந்ததோர் இலக்கியமாக இதனை எடுத்துக் காட்டலாம்.

# 4. காலம்

### பெருமண்டூரரா?

இந்த நூலாசிரியரின் பெயர் இதன் ஏடுகளில் காணப்படவில்லையாம். பெருமண்டூரில் வாழ்ந்த சமணத் தமிழர் ஒருவர் சிரவணபெள்குளம் சென்று அங்கே ஸ்ரீ புராணத்தைக் கற்றுத் தமிழில் எழுதினுர் என ஒரு கதை வழங்குகிறதாம்.

### மண்டலபுருடர்

ஆனுல், இந்த நூலை இயற்றியவர் சூளாமணி நிகண்டு இயற்றிய மண்டலபுருடரே என்று அறிஞர்கள் எழுதி வருகின்றனர். மண்டலபுருடன் தன்னுடைய நிகண்டில் ''திருந்திய கமல வூர்தி திருப்புகழ்ப்புராணம் செய்தோன் குணபத்ரன் தாள் பணிந்த மண்டலவன்'' என்றும், ''இறந்தது நிகழ்வு மற்றை எதிர்வுமாம் புராணம் செய்தோன் அறந்தகு குணபத்ரன் தாள் அரணெனச் சரணமானேன் மறந்தலைப் படா வீரை மன்னன் மண்டலவன் செய்தான்'' என்றும் பாடுகிறுர். இந்தக் குணபத்திரரை 9-ஆம் நூற்ருண்டில் உத்தர புராணத்தை வடமொழியிற் பாடிய குணபத்திரர் என்றே உயர்திரு டி. எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரியார் கொண்டு அவருடைய மாணவரே மன்டலபுருடர் என்பர். ஆனுல், மண்டலபுருடர் கிருஷ்ணதேவராயர் காலத்தவர் என

நிகண்டு என்ற பகுதியில் கண்டோம். இவன் அமோக வர்ஷனுக்குப் பின்வந்த கிருஷ்ணன் என்ற ராஷ்டிரகூட மன்னன் அல்லன். இந்தக் குணபத்திரர் குன்றை வேந்தன் என்றும், தமிழ்வளர்த்த பாண்டியன் போன்றவர் என்றும் மண்டலபுருடரால் பாராட்டப் பெறுகிறுர்.

**ஐயங்கள்**

இவ்வாறு மண்டலபுருடர் இந்த நூலினை இயற்றினுர் என்று கொள்வதில் சில ஐயப்பாடுகளைத் தமது கலைத்திற மெல்லாம் விளங்க ஸ்ரீபுராணத்தைப் பதிப்பித்த திரு. வெங்கடராயலு ரெட்டியார் எடுத்துக் காட்டுகிறுர்.

**முதலாவது :** ஸ்ரீபுராணத்தில் குணபத்திரர் வணக்கத்தினையோ பெயரையோ எங்கும் கூருமை முதலாவது எழும் ஐயம். பெரியோர் வரலாறு கூறும் நூலில் அருகபரமேட்டியின் வணக்கம் ஒன்றே அன்றித் தன்னுடைய வணக்கம் அந்நூலில் புகவேண்டா மெனக் குணபத்திரர் விரும்பி இருக்கலா மெனக் கருதுவது இங்கே பொருத்த மன்ரோ?

**இரண்டாவது :** இரண்டாம் ஐயம் நரகவட்டங்கள் ஏழும் ஸ்ரீபுராணத்தில் கால வரையறையின் அடிப்படையில் முறைசெய்யப்பெற்றதனைப் பற்றியது; அந்த முறையைச் சூளாமணி நிகண்டு முறைபிறழ வைத்தும் தவருக மொழிபெயர்த்தும் கூறுகிறது. இரண்டு நூல்களுக்கும் ஆசிரியர் ஒருவர் ஆனுல் இவ்வாறு நேராது என்பதே அந்த ஐயத்தின் அடிப்படை என்ருலும் பெயரை மட்டும் திரட்டிக் கூறும் நிகண்டில் இந்த முறையையே பின்பற்றவேண்டுமா என்று ஆராய்தல் வேண்டும். அன்றியும், நரகங்களைக் கூறும் நிகண்டின் பாடல் திருத்தமான உண்மைப் பாடத்தோடு நமக்குக் கிடைத்ததாகவும் காணேம். பின் எவ்வாறு முடிவு கூறுவது?

***மூன்ருவது :*** மூன்ரும் ஐயம், சரகம் என்னும் வட சொல்லைச் சாகம் எனத் தவருகப் படித்து அதற்குத் தேனீ என்ற பொருளையும் சூளாமணி நிகண்டு கூறு மாளுல் அத்தகைய தவற்றினை வடமொழிப் பயிற்சி மிக்க ஸ்ரீபுராண ஆசிரியர் கூறியிருப்பாரா என்பதாம். தமிழ் நூல்களில் கண்ட இருவகை வழக்குச் சொற்களுக் குத் தமிழ் நிகண்டு உரை கூறுமேயன்றி வடமொழிச் சொல்லை வடமொழியில் கண்டு அதனைச் சரியாகவோ தவருகவோ படித்துப் பொருள் கூறுமென்று கொள் வதற் கில்லை. ஆதலின், தமிழ் நூலிலோ அல்லது தமக்கு முன் வழங்கிய நிகண்டிலோ தாம் கண்டதையே நிகண் டாசிரியர் கூறுகின்ருராதலின், இவ்வாறு ஒரு தவறு நிகழ்ந்திருக்குமாளுல் அஃது இவருக்கும் முந்தியதே எனல் வேண்டும்.

***நான்காவது :*** நான்காம் ஐயம், இப்பொழுதுள்ள மணிப்பிரவாள ஸ்ரீபுராணம் இறந்த காலமும் நிகழ் கால மும் எதிர் காலமும் ஆன முக்காலத்தும் வாழ்ந்தவர் களைப் பற்றிக் கூறும் புராணம் அன்று. ஆதலின், சூளா மணி நிகண்டு கூறுவதுபோல ''இறந்தது நிகழ்வு மற்றை எதிருமாம் புராணம்'' என்று இதனை எவ்வாறு கூறக்கூடும் என்ற ஐயமேயாம். ஆளுல், ''இறந்தது நிகழ்வு மற்றை எதிர்வுமாம் புராணம்'' என்பதற்கு முக் காலத்துக்கும் ஒத்தியல் பொருளாம் புராணம் என்றும் பொருள் கொள்ள இடம் இருக்கின்றது. அவ்வாறு கொண்டால் ஸ்ரீபுராணம் அத்தகையதெனச் சமணர் எல்லோரும் ஒப்புவர்.

## *16-ஆம் நூற்ருண்டு*

எனவே, மண்டலபுருடர் இயற்றிஞர் என்று கொள் வதில் பெருங்கேடு ஒன்றுமில்லை. மண்டலபுருடர் விளம்-மா-மா என்ற அமைப்பு இரட்டித்து வரும் அறு

சீர் விருத்தத்தாலேயே நிகண்டைப் பாடியுள்ளார். இந்தச் சந்தம் ஸ்ரீபுராணத்தின் வசனநடைக்கு ஒரு சிறிது ஒத்ததெனலாம். எவ்வாறுயினும், விசயநகர அரசர் காலத்தில் இந்த நூல் எழுந்ததென்று கொள்வதில் தடையொன்று மிராது.

# II. நிகண்டு

**திவாகரம்**

நிகண்டுகள் ஒரு மொழியை அறிவார்க்குப் பெருந் துணையாவன. இந்தத் துறையிலும் தமிழை வளர்த்தவர்கள் சமணப் பெரியோர்களே என்று கூறலாம். தொல்காப்பிய உரியியல் ஒரு நிகண்டே என முன்னரே குறிப்பிட்டோம். உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டும் பகுதிகள் சில நிகண்டுகளின் சூத்திரங்கள் எனத் தோன்றினும் அவற்றின் முதல் நூல்களின் பெயரை நாம் அறிவதற் கில்லை. பல்லவர் காலத்திலேயே இத்தகைய முயற்சிகள் எழுந்திருந்திருத்தல் வேண்டும். இப்போது கிடைக்கும் நிகண்டுகளில் பழமையானது திவாகரமாம். ஆதி திவாகரம் என்று ஒரு சிலர் கூறுவதும் இதுவே எனலாம். அம்பர் என்ற ஊரைச் சேர்ந்த சேந்தன் என்பவனைப் புரவலனாகக் கொண்டதால் ''சேந்தன் திவாகரம்'' என இது வழங்கும். இதனை எழுதியவர் திவாகர முனிவர் என்பவர். இன்று சிவன் பெயரோடு இந்த நூல் தொடங்கினாலும் சமண நூலென்று பலர் இதனைக் கருதுகின்றனர். இதில் சளுக்கரைப் (Chalukyas) பேரரசராகவும் இரட்டர் அல்லது அரட்டரைக் (Rashtrakutas) குறும்பர் ஆகவும் கூறுவதால் ராஷ்டிரகூடர் மேலோங்கிய எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கு முந்தியதெனலாம். 9500 சொற்கள் இதில் விளக்கப்பெறுகின்றன. பல பொருள் ஒரு சொற்கள் 384 ஆம்.

### பிங்கலந்தை

இதற்குப் பிந்தியது பிங்கலந்தை. இதனை இயற்றியவர் பிங்களர். திவாகரரின் புதல்வர் என இவரைக் கூறுவர். ஆனால், இந்தத் திவாகரர் மேலைய நிகண்டியற்றியவரோ என்பது ஐயத்திற்கு இடமாம். பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய நன்னூல் இந்தப் பிங்களரைச் சுட்டுவதால் அதற்கும் முந்தியதாகும் இந்த நூல். இதில், முதல் ஒன்பது பகுதிகளில் மட்டும் 14700 சொற்கள் உள்ளன என்பர். பத்தாம் பகுதியில் பலபொருள் ஒருசொற்கள் 1091 ஆக வருகின்றன. இது திவாகரத்தினும் மேல் சென்று வளர்கின்ற தன்றோ?

### சூடாமணி

இதற்கு அடுத்ததாகத் தோன்றித் தமிழ்நாடெங்கும் பரவி வழங்குவது சூடாமணி நிகண்டு என்பதாம். இதன் பெயர் ''நிகண்டு சூடாமணி'' என்பதாம். இதன் ஆசிரியர் கிருஷ்ணதேவராயனை

> ''படைமயக் குற்ற போதும்
> படைமட மொன்றி லாதான்
> மடைசெறி கடகத் தோளான்
> மதிக்குடை மன்னர் மன்னன்
> கெடிமன்னர் வணங்குந் தாளான்
> கிருட்டின ராயன் கைம்மேற்
> கொடைமட மென்று சொல்ப
> வரையாது கொடுத்த லாமே''

எனப் புகழ்கின்றார். எனவே, இவர் கிருஷ்ணதேவராயர் காலத்தவர் எனலாம். 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இவர் வாழ்ந்தார் எனக் கொள்ளலாம். இவருடைய ஆசிரியர் குணபத்திரர் என்பவராம். வடமொழியில்

உத்தரபுராணம் எழுதி ஒன்பதாம் நூற்றூண்டில் வாழ்ந்த குணபத்திரர் இவரேதான் எனக் கொள்வதற் கில்லை. *1583*-ல் ஒரு குணபத்திரதேவரின் சீடரான வீரசேன தேவர் நிலம் வாங்கக் காண்கிறேம் (Mysore 1931/P. 106 to 112 E. C. VI K. P. 21–24–p. 79). இந்தக் கல்வெட்டுக்களும் குணபத்திரரே கிருஷ்ணதேவராயர் காலத்தில் வாழ்ந்து சூடாமணி நிகண்டு பாடினராதல் வேண்டும் என்று கூறுகின்றன. எனவே, *16*-ஆம் நூற்றூண்டினர் என்பதே பொருத்தம். மண்டலபுருடர் வீரை நகரத்தார் என்று இந்த நிகண்டின் கடைசிப் பாட்டு கூறுகிறது. சிறப்புப் பாயிரச் செய்யுட்களும் இந்தப் பாட்டும் குணபத்திர ருடைய மாணவர் இவர் எனக் கூறும். சிறப்புப் பாயிரத் தின் கடைசிப் பாட்டும் ''திருந்திய கமலவூர்தி திருப்புகழ் புராணம் செய்தோன்'' என்று கூறுவது இவர் மணிப் பிரவாளத்தில் எழுதிய ஸ்ரீபுராணத்தையே போலும்.

# III. இலக்கணம்

## 1. இலக்கண வளர்ச்சி

### யாப்பதிகாரம்

தமிழுக்கு இலக்கணப் பெருமையைத் தந்தவர்களும் சமணர்களே எனலாம். தொல்காப்பியத்தினைப் பற்றி முன்னரே கண்டோம். தமிழ் இலக்கணம் முதலில் எழுத்து, சொல், பொருள் என மூன்றாக இருந்தது. இறையனார் அகப்பொருள் உரையின் காலத்து யாப்பு என்பது தனியாகப் பிரிந்து நான்காவது இலக்கண ஆராய்ச்சியாக விளங்கியது. ''யாப்பு'' பாவினையும் பா வகைகளையும் விளக்கி ஆராயப், 'பாட்டியல்' பிரபந்த வகைகளையும் நூலின் முதல் பாட்டில் வரும் முதற் சீருக்கும் எழுத்துக்கும் பாட்டுடைத் தலைவன் பெயருக்கும் அப்பெயரின் முதல் எழுத்துக்கும் உள்ள சோதிடப் பொருத்தங்களையும் ஆராயத் தொடங்கியது.

### பொருள்

இறையனார் அகப்பொருள் எனத் தனி ஆராய்ச்சி நூலாகப் பெயர் பெறுதலின் பொருளிலக்கணமும் அகப்பொருள் புறப்பொருள் என வெவ்வேறு ஆராயப்பெற்றமையை அறியலாம். பொருளதிகார ஆராய்ச்சி அருகியதனையும் இறையனார் அகப்பொருள் உரையிலிருந்துமே

அறிகிறோம். எனவே, இறையனார் அகப்பொருள் அகப் பொருளை விளக்கப், புறப்பொருள் வெண்பாமாலை புறப் பொருளை விளக்கத் தோன்றியது. இப்புறப்பொருள் வெண்பாமாலைக்கு முதனூல் அகத்தியர் மாணாக்கர் பன்னிருவரில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு படலமாகப் பாடிய பன்னிரு படலமாம். இந்தப் பன்னிரு புலவர் களில் தொல்காப்பியரும் ஒருவர் என்பது இளம்பூரணர் என்ற உரையாசிரியர் காலத்தில் வழங்கிய கதை. ஆனால், அதனை அவரே ஒப்புக்கொள்ள வில்லை.

**பாட்டியல்**

பன்னிருபடலம் என்பது மேலே கூறிய பாட்டியல் ஆராய்ச்சியிலே ஈடுபட்டது. இதிலே 11 வகைப் பொருத்தமும் 12 -ஆம் பிரிவாக எழுத்தின் பிறப்பும் கூறப்பெறுவதால் பன்னிருபடலம் என்று பெயர்பெற்ற தென்பர் சிலர். இதிலே 13 புலவர்கள் பாடிய சூத்திரங்கள் மேற்கோள்களாக வருகின்றன. இவற்றில் அகத்தியரை மற்றையவர்களின் ஆசிரியர் எனக் கொண்டால், எஞ்சி நிற்பன 12 பேர் செய்த பாட்டியல்களாம். இப்பாட்டி யல்களினைத் தொகுத்துப் பாடியதே இந்தப் பன்னிரு பாட்டியல் எனலாம். பொய்கையார், பரணர், இந்திர காளியார், அவிநயனார், கல்லாடர். கபிலர், சேந்தம் பூதனார், கோவூர்கிழார், மாபூதனார், சீத்தலையார், பல்காயனார், பெருங்குன்றூர்கிழார் என்பவரே அப் பன்னிருவரும். இவையே அன்றி மாமூலர் பாட்டியல் என ஒன்றினையும் இலக்கண விளக்க உரை கூறுகின்றது. ''பாட்டியன் மரபுடையார்'' என்ற ஒரு நூலாசிரியரை யாப்பருங்கல விருத்தி கூறும்.

**யாப்பு**

இனி, யாப்பினைத் தனியே ஆராய்ந்த நூல்களும் பலப்பல. சங்க யாப்பு, சிறுகாக்கைப் பாடினியம், பெருங்காக்கைப் பாடினியம், மயேச்சுரர் யாப்பு, அவி நயர் யாப்பு, நக்கீரர் நாலடி நாற்பது, வாய்ப்பியம்

முதலியன யாப்பருங்கல விருத்தியில் காட்டப்பெறுகின்றன.

### அணி

இறையனார் அகப்பொருளுரைக்குப் பின்னே அலங்காரம் என்பது அணியியல் என இலக்கண ஆராய்ச்சியின் ஐந்தாம் பகுதியாயிற்று. தண்டி ஆசிரியர் தமிழ்நாட்டில் வாழ்ந்ததால் அவர் இயற்றிய அணி இலக்கணம் தமிழ் நாட்டில் பரவியது இயல்பேயாம். ஆனால், அதற்கும் முந்திய அணி ஆராய்ச்சியைத் திவாகரம் பிங்கலந்தை என்ற நூல்கள் கூறும் அணி வரிசையிலிருந்தும் அறியலாம். இதனையே யாப்பருங்கலமும் பின்பற்றுகிறது எனக் கூற இடமுண்டு.

### சங்கத்துச் சான்றோரா?

இவ்வாறு பல்கிப் 'பெருகிய ஆராய்ச்சி பல்லவர் காலத்தில் 7, 8, 9 நூற்றாண்டுகளில் விளங்கியது எனலாம். இங்கு வரும் பெயர்கள் சங்கத்துச் சான்றோர் பெயர்களாகத் தோன்றினாலும் களப்பிரரது இருட்காலம் நீங்கியபின் வடமொழிப் பெயர்கள் பரவி வந்த காலத்துப் பலர் பழைய சங்க காலப் பெயர்களைப் பொன்னே போற் போற்றி வழங்கி வந்தமையே இதனால் விளங்குகிறது எனல் வேண்டுமே அன்றி இவர்கள் பாடியன எல்லாம் சங்க காலப் புலவர்களின் சூத்திரங்கள் என்று சொல்வதற்கு இல்லை. அகத்தியர் சூத்திரம் என வருவன தொல்காப்பியர் கூறாத ஆல் உருபு முதலியன கூறுதலின் இவரும் இவ்வாறு முன்னோர் பெயரைத் தம் பெயராகக் கொண்டவரே எனலாம். அகத்தியரை ஒருவரிடம் பாடங் கேட்டவர் என்றும் கூறுப. 'அத்தகைய அகத்தியரின் மாணாக்கரே அவிநயனார் முதலியோர் எனலாம். இந்தப் புத்துணர்ச்சியின் காரணமாகவே திருவள்ளுவமாலை, பதினோராந் திருமுறை முதலியவற்றில் வரும் புலவர்கள் பழைய சங்கப் புலவர்கள் பெயர்களைச் சிறப்பாகச் சூடிக்கொண்டு விளங்குகிறார்கள்.

## 2. அவிநயம்

இப்படி எண்ணற்றனவாய்த் தோன்றிய இலக்கணங்களில் எவை எவை சமணப் பெரியோர்களால் இயற்றப் பெற்றவை என்று சொல்ல முடியாமற் போனாலும் சமணர்களும் இந்த ஆராய்ச்சியில் கலந் துழைத்தனர் என்றும், பெரும் பங்கு கொண்டனர் என்றும் துணிய இடம் உண்டு. அவிநயனார், அகத்தியர் மாணவரில் ஒருவர் என்பர். இவருடைய நூலிலிருந்து யாப்பருங்கல விருத்தி எடுத்துக்காட்டுக்கள் பல தருகிறது. இந்த அவிநயனார் சமணர் என்பது நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர் உரையால் விளங்குகிறது. எழுத்துக்கு முதற் காரணம் அணுத்திரள் என்பது பவணந்தி முனிவருக்குப் போல முன்சென்ற அவிநயனார்க்கும் கொள்கையாய் முடிதலின் அவர் சமணர் என்பது வெள்ளிடை.

### வெண்பாக் காலம்

இந்த அவிநயம் அகவற் பாவாலும் வெண்பாவாலும் ஆயது என்பதும் விளங்குகிறது. இலக்கியத்தில் வெண்பாக் காலம் வளர்ந்தது போல இலக்கணத்திலும் வெண்பாக் காலம் வளர்ந்தது எனலாம். மாபுராணம், புறப்பொருள் வெண்பாமாலை என்ற முன் நூல்களோடு நேமிநாதம் வச்சணந்திமாலை முதலிய பின் நூல்களையும் காண்க.

உரை

அவிநயம், தொல்காப்பியம் போலச் சிறந்திருந்தமையால் முதற் காலத்தில் பெரிதும் வழங்கி வந்தது என்றும் அதற்கு இராசபவித்திரப் பல்லவதரையர் உரை எழுதிப் புகழ்பெற்ருர் என்றும் அறிகிருேம்.

''புவிபுகழ் புலமை அவிநய னூலுள்
தண்டலங் கிழவன் தகைவரு நேமி
எண்திசை நிறைபெயர் இராசபவித்திரப்
பல்லவ தரையன்''

என மயிலைநாதர் எழுதுவதினின்றும் அவிநயத்தின் பெருமையும் அதனுரையாசிரியர் சிறப்பும் விளங்கும். தொல்காப்பிய மரபு அவிநய மரபினும் வேறு என்பது அவிநயனூர் முதலியோர் எழுதிய பன்னிருபடலப் போக்குத் தொல்காப்பியப் போக்கினும் வேருதல் கொண்டு தெளியலாம். இந்த நூல்களின் போக்கினுல்தான் தொல்காப்பிய மரபு இடையே மறைந்ததோ என்று எண்ணவும் இடம் உண்டு.

# 3. யாப்பருங்கலம்

### *யாப்பருங்கலமும் காரிகையும்*

அவிநயத்திற்குப் பிறகு சிறந்த இலக்கண நூலாக விளங்குவது யாப்பருங்கலமே ஆம். யாப்பருங்கலம் இயற்றிய அமிதசாகரரே யாப்பருங்கலக் காரிகை என்ற நூலையும் இயற்றினார். இவருடைய இந்த நூலின் சிறப்பால் காரிகைக் களத்தூர் இவர் பெயரால் வழங்கியது. இந்தப் பெயர் கொண்டு இந்த ஊரை 11-ஆம் நூற்றாண்டில் இராசேந்திரன் கல்வெட்டு வழங்குவதால் இந்த நூல் அதற்கும் முந்திய பத்தாம் நூற்றாண்டின் ஈற்றில் எழுந்தது என எண்ண இடம் உண்டு. யாப்பருங்கலம் முன்னைய யாப்பாராய்ச்சியை யெல்லாம் மழுங்கச் செய்து இன்றுவரை தன் கொள்கையையே எல்லோரும் கற்கும் வகையில் சிறந்து விளங்குகிறது.

### *உரை*

காரிகையின் உரையாசிரியர் குணசாகரர் என்பவர். இவர் அமிதசாகரரது குருவாகிய குணசாகரரோ வேறு ஒருவரோ தெரியவில்லை. நூலின் சிறப்பினை நோக்கி ஆசிரியரே உரை கூறுவது புதிதன்று. இக்கொள்கை உண்மையானால் யாப்பருங்கல விருத்தி யுரையும் இவர் காலத்ததே ஆதல் வேண்டும். அதாவது விருத்தியுரை எழுந்தபின் காரிகை உரை எழுந்ததாதல் வேண்டும்.

காரிகை உரையாசிரியர் (10 செய்யுள் உரை) விருத்தியுரையை எடுத்தாள்கிருர். இந்த விருத்தியுரை போலச் சிறந்த உரை ஒன்று இல்லை எனலாம். காரிகை யுரை ஆசிரியரும் யாப்பருங்கல ஆசிரியரும் சமணர்கள் என்பதில் ஐயமில்லை. விருத்தியுரை ஆசிரியரோ மயேச்சுரர் யாப்பு என்ற நூலெழுதிய மயேச்சுரர் என்ற பேராசிரியரைப் பல இடங்களிலும் சிவபெருமான் பெயரோடு தொடர்பு படுத்திப் புகழ்கிருர் என்பதால் மட்டும் அவரைச் சைவர் என்று கொள்வதற் கில்லை. அல்லது மயேச்சுரரது சீடர்கள் வந்த யாப்பிலக்கணப் பரம்பரையில் யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் வந்தவ ராகலாம். இலக்கண பரம்பரை சமய பரம்பரையாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பத்தாம் நூற்ருண்டு வரை தோன்றிய தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் நரம்பறிவதற்கு இந்த விருத்தியுரை பெரிதும் உதவுவது ஆகும். பல்லவ கால இலக்கியத்தினை அறிவதற்கு இதுவே பெருந்துணை. பல்லவ மல்லன் முதலானேர்மேல் பாடப்பெற்ற பாக்கள் இதனுள் எடுத்துக்காட்டாக வருகின்றன.

### பிற நூல் அறிவு

இந்த உரையாசிரியர்களில் குணசாகரர், பாளித்தியம் எனும் பிராகிருத இலக்கணமும் பிங்கலம் போன்ற சந்தோபிசமும், குணசாங்கியம் போன்ற கருநாடகச் சந்த நூல்களும் நிருத்தம் வியாகரணம் முதலியனவும் அறிந்திருந்தார் என்றும் விளங்குகிறது. வடமொழிக் கொள்கைகளையும் பின்பற்றிக் காரிகை செல்கிறது என்பதனை ''ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர்'' எனக் குணசாகரர் கூறுவதி லிருந்தும் அறியலாம். ஆரியக் கொள்கைகளைப் பின்பற்றுவதனை இப்படிக் கூறுகிருர் எனக் கொள்ளாது வடமொழி நூலைத் தமிழில் மொழிபெயர்க்கின்ருர் என்று கொள்

வது இன்று நாம் காணும் காரிகைக்குச் சிறிதும் பொருந்தாது. 11-ஆம் நூற்றுண்டில் பௌத்த நூல் ஆக எழுதப்பெற்ற ஐந்திலக்கண நூலாம் வீரசோழியத்திற்கு அதன் நூலாசிரியரின் சீடரால் எழுதப்பெற்றது எனக் கூறப்படும் உரையும், யாப்பருங்கலத்தை எடுத்துக் காட்டுகிறது. இளம்பூரணர் முதல் பின்னவர்கள் எல்லாம் இதன் கொள்கைகளேயும் சூத்திரங்களேயும் எடுத்தாளுதல் வெளிப்படை.

# 4. இளம்பூரணர்

யாப்பருங்கலத்தின் காலத்துக்குப் பிந்தி எழுந்த சிறந்த இலக்கண ஆசிரியர் இளம்பூரணர் ஆவர். தொல்காப்பிய பரம்பரை செய்யுளியலைப் பொறுத்த வரையில் யாப்பருங்கல விருத்தியுரையால் புத்துயிர் பெற்றதெனலாம். தொல்காப்பியத்துக்கு மாருக எழுந்த கொள்கைகளை ஒருவாறு அங்கே நாம் அறிகிறோம். பிற இயல்களை அறிய முனைந்து இருட் காலத்தினின்றும் தொல்காப்பியத்தைப் பகலொளியில் கொண்டு வந்து முதல் முதல் உரை கூறிய பெருமை காரணமாக உரையாசிரியர் என்றே சிறப்புப் பெயர் பெற்றவர் இளம்பூரணராம். இவர் கூறும் உரைகளை இவரே முடிந்த முடிபாகக் கொள்ளுவதில்லை. தயக்கத்தோடேயே உரை கூறிச் செல்கின்றார்: இவர், மணக்குடியைச் சேர்ந்தவர் என்றும் இளம்பூதியின் மகனார் என்றும் ஒரு சிறப்புப் பாயிரம் கூறும். இவரைத் துறவி என்று மயிலைநாதர் சுட்டிக் காட்டுகின்றார். படிமை என்ற சொல் சைன மதத்தில் பிற்காலத்தே வழங்கும் சொல்லென முன்னே கண்டோம். அதற்கேற்ப இதற்கு மெய்யுரை கூறிய இவ் வுரையாசிரியர் சமண ராகலாம். இவர் ''அகர முதல னகர இறுவாய்'' எனத் தொல்காப்பியர் னகரத்தை ஈற்றில் அமைத்தமைக்குக் காரணம், வீடு பேற்றிற்குரிய ஆண்பால் ஈருகும் சிறப்புடைமையே என்று காட்டுகின்றார். பெண்களுக்கு வீடுபேறு இல்லை என்ற திகம்பர சமணக் கொள்கையினர்

இவர் என்பது இதனுல் விளங்குகிறது. இவர் யாப்பருங் கலத்துக்குப் பிந்தியவ ராதலின் 11-ஆம் நூற்றூண்டை யர் எனலாம். இவர்க்குப் பின்னர்த் தொல்காப்பிய ஆராய்ச்சி சிறந்து வளரத் தொடங்கியது.

# 5. நேமிநாதர்

சொல்லதிகாரமே வியாகரணம் என வழங்கப்பெற்றது. பன்னிரண்டாம் நூற்றூண்டில் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தைக் குணவீர பண்டிதர் என்பவர் வெண்பாவில் சுருக்கியும் விளக்கியும் நேமிநாதம் என்ற பெயரால் பாடினுர். நேமிநாதம் பாடியதால் நேமிநாதர் என்ற பெயரும் இவருக்கு உண்டு போலும். பேராசிரியர் என இவரும் வழங்கப்பெற்றுர் எனத் தமிழ் நாவலர் சரிதையால் அறிகிறேம். நேமிநாதர் பட்டோலை பிடிக்க ஒட்டக் கூத்தர் பாடியது என அங்கு வருவதிலிருந்து ஒட்டக்கூத்தர் காலத்தில் இவர் இருந்தனர் எனக் கொள்ளலாம்.

இவர் வெண்பா யாப்பில் எழுதிய பாட்டியலே வச்சணந்திமாலை என்பதாம். அதனுரையால் இந்த நூல் திரிபுவனதேவர் காலத்தது என அறிகிறேம். 12-ஆம் நூற்றூண்டின் கடைப் பகுதியில் அரசேற்ற மூன்றுவது குலோத்துங்கனே இந்தத் திரிபுவன தேவன். இந்தக் குணவீர பண்டிதருடைய ஆசிரியர் வச்சணந்தி என்ற சமணர் ஆவார். நேமிநாதரும் தம் நூலிரண்டிலும் அருகப் பெருமானை ஏத்துகின்றுர். ஆதலின் அவரும் சமணர் என்பதில் ஐயமில்லை. வச்சணந்திமாலைக்கு முதல் நூல் இந்திரகாளியம் என்ற பாட்டியலாகும். அதுவும் சமண நூல் போலும்.

# 6. அடியார்க்கு நல்லார்

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்குச் சிறந்ததோர் உரை எழுதியுள்ளார். இதற்கும் முந்தியது அரும்பத உரை என்ற ஒன்று. அடியார்க்குநல்லார் உரை, சொல் பொருள் கூறிப் பொழிப்புத் திரட்டி விசேட உரையும் தருவது. சிலப்பதிகாரத்தில் வரும் இசை நடனம் முதலிய நுட்பங்களை விளக்கிக் கூறுவதற்கு இவ்வுரை ஒன்றே உதவுவ தாகும். அவர் காலத்தில் அதற்கு வேண்டிய தமிழ் நூல்கள் பல வழங்கின என அறியலாம். கொங்குவேளது விசயமங்கலத்துக்கு அருகில் இருக்கும் நிம்பை என்பது இவர் ஊர். இவரும் கொங்கு மண்டலத்தவரே. பொப்பண்ண காங்கேயர் இவருடைய புரவலர் எனப் பெறுவர். இராமானுசரால் வைணவஞன போசளவிஷ்ணுவர்த்தன மகாராசரின் மந்திரியும் படைத் தலைவனுமான சமணப் பொப்பண்ண காங்கேயர் பன்னிரண்டாம் நூற்ருண்டினர் என்பர். அவ்வாருஞல் உரையில் காட்டப்பெறும் இராமாயண உத்தரகாண்டப் பாடலும் இவருக்கு முந்தித் தோன்றி இருத்தல் வேண்டும். இளங்கோவடிகளைச் சமணத் துறவி என்று இவ் வுரையாசிரியர் கூறுவர். இவரது புரவலரும் சமணர். இந்த உரையாசிரியரின் சமணச் சார்பு இதஞல் நன்கு விளங்கும். நச்சிஞர்க்கினியர் முந்நீர் முதலியவற்றிற்குக் கூறும் உரை அடியார்க்குநல்லார் உரையை மறுப்பது போல வருதலில் அவர் அடியார்க்குநல்லார்க்குப் பிந்தியவரே எனல் வேண்டும்.

# 7. நன்னூல்

குலோத்துங்கச் சோழன் III காலத்தில் சீயகங்கன் என்ற கங்க அரசன் விருப்பத்திற் கிணங்கிச் சனகாபுரத்துப் பவணந்தியார் நன்னூல் என்ற இலக்கணத்தை எழுதினார். இப்போது இதில் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் கூறும் இரண்டு அதிகாரங்களே உள்ளன. ஐந்திலக்கணத்தையும் ஐந்து அதிகாரங்களாக எழுதினாரோ என்ற ஐயப்பாடும் உண்டு. பின்வந்தவர்கள் எல்லோராலும் புகழப்பெற்ற நூல் இது. அகத்தியம் அவிநயம் என்பவற்றோடு சிறப்பாகத் தொல்காப்பியத்தையும் பின்பற்றி இந்நூல் எழுதப்பெற்றது என்பர். தெளிவும் எளிமையும் வரையறையின் நுட்பமும் பாகுபாட்டின் சிறப்பும் இந்நூலின் அழகுகளாம். தொல்காப்பியக் கடலை எளிதே நீந்துவதற்கு மிதவையாகவும் வழிகாட்டியாகவும் இந் நூல் அமைந்துள்ளது. பிற்காலத்திற் கேற்ற இலக்கணமாகச் சிறந்தாலும் இதில் குற்றம் கூறுவார் இல்லை என்றில்லை. இலக்கண விளக்க ஆசிரியர் போன்றோர் குற்றம் கூறும்பொழுதும் இவரைப் பெரிதும் பின்பற்றுவதனைக் காணலாம். மயிலைநாதர் என்ற சமணப் பெரியார் இதற்கு ஒரு பழைய உரை எழுதி உள்ளார். இலக்கணக் கொத்து நூலின் ஆசிரியரின் மாணவரான சங்கரநமச்சிவாயர் சிறந்த தொரு விருத்தியுரை எழுதியுள்ளார். அதனைத் திருத்திச் சிவஞான முனிவர் விருத்தியுரை எழுதித் தந்தார். நச்சினார்க்கினியர், சேனாவரையர் முதலானோர் இந்த நூலினைக் குறிப்பதாகக் கொள்ள இடம் உண்டு.

# 8. நம்பி

### நம்பி அகப்பொருள்

தமிழ்ப் பஞ்ச இலக்கணமும் தனித்தனியே எழுதப் பெற்று வந்தன எனக் கண்டோம். பொருளாராய்ச்சி இரண்டாகப் பிரிந்ததனையுங் கண்டோம். புறப்பொருளைப் பொறுத்தமட்டில் புறப்பொருள் வெண்பாமாலையே முடிந்த முடிபாயிற்று. தொல்காப்பியத்தின் கொள்கையை அதன் உரைகளே விளக்க முற்பட்டன. தனியே ஒரு நூல் எழவில்லை. அகப்பொருளை, இறையனாரகப் பொருள் தேவாரத்துக்கு முந்திய காலத்தில் விளக்கத் தொடங்கியது. ஆனால், அந்த விளக்கமும் போதாத முறையில் பிற நூல்கள் தோன்றியிருத்தல் வேண்டும். ஆனால், அவற்றிலிருந்து இன்றுவரை நின்று நிலவுவது நம்பியகப்பொருள் என்ற நூலேயாகும். இதன் ஆசிரியர் நாற்கவிராச நம்பி என்பவராவர். இவர் தொல்காப்பியத்தின் அகப்பொருள் இலக்கணத்தையும் சான்றோர் இலக்கியங்களையும் ஆராய்ந்து தாம் கண்டவற்றைத் தொகுத்து முறைப்படுத்திச் சூத்திரங்களாக எழுதுகின்றார். இவர் புளிங்குடி உய்யவந்தார் என்னும் முத்தமிழாசானின் மைந்தராம். ''இருபெருங்கலைக்கும் ஒரு பெருங் குரிசில்'' எனப் பாராட்டப்படுவதால் இவர் வடமொழியும் தமிழ்மொழியும் அறிந்தவர் போலும். நாற்கவிராச நம்பி என்ற பெயரே இவர் பலவகைப் பாக்களையும் பாட வல்லாராதலால் பெற்ற சிறப்புப்

பெயர் இது என்பதனை விளக்கும். இவருடைய நூல் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்ற ஐந்து பிரிவுகள் கொண்டது; தான் கூற வந்ததை மிகத் தெளிவாக எல்லாம் அடங்கக் கூறுவது. இவர் சமணர் என்பதும் ''மாந்தரும் தேவரும் வாழ்த்த முக்குடைக்கீழ் -- தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்தியவர்'' என்று சிறப்புப்பாயிரம் கூறுவதால் விளங்குகிறது. இவரே அந்நூலுக்கு உரை ஒன்று எழுதினார் என்றும் தெரிய வருகிறது.

**காலம்**

சிறப்புப் பாயிரப்படி இவரே எழுதிய உரை எனக் கொள்ளப்பெறும் இதன் பழைய உரை கூறுகிறபடி இவர் குலசேகர பாண்டியன் காலத்தவ ராவர். இந்தக் குலசேகரன் முதல் சடைய வர்மன் குலசேகரனே ஆவன். இவன் வாழ்ந்தது 12-ஆம் நூற்றாண்டாகும். இவர் பாடிய அகப்பொருளை ஒட்டிப் பொய்யாமொழிப் புலவர் தஞ்சைவாணன் மேல் கோவை ஒன்று பாடியுள்ளார். 13-ஆம் நூற்றாண்டில் வாணர்கள் பாண்டியநாடு சென்றனர் எனக் கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது. அத்தகைய வாணன் ஒருவன் சேரனை வென்றதாகக் கூறிக் கொள்ளும். 13-ஆம் நூற்றாண்டைய பாண்டியர்க்குப் படைத் தலைவனாய் இருந்து அவர்கள் சார்பில் சேரனை வென்றதாகப் பாராட்டப்பெறுவான்; அவனே தஞ்சை வாணன். இவனைப் பொய்யா மொழியார் நம்பியகப் பொருள் வழியே பாடியிருப்பாராகுல் அவரும் 13-ஆம் நூற்றாண்டையர் ஆவதோடு அதற்குள் நம்பியகப் பொருள் சீரும் சிறப்பும் பெற்றுத் தமிழுலகெங்கும் பரந்து அறிஞர் உள்ளத்தை அடிமையாக்கியது என்பதும் விளங்கும்.

# 9. நச்சிஞர்க்கினியர்

நச்சிஞர்க்கினியர் நன்னூலை வெளிப்படையாக அன்றிக் குறிப்பாகக் குறிக்கின்ருர். ஆதலின் பவணந்தி யாருக்குப் பிற்பட்டவரே ஆவர். கபார்தியின் பாடலைச் சிந்தாமணி யுரையில் எடுத்துக் காட்டலின் அவர் காலமாம் 13-ஆம் நூற்ருண்டிற்குப் பிற்பட்டவர் எனலாம். இவர் வைதிக அந்தணர். மதுரையிற் பிறந்தவர். தொல்காப்பியம், சிந்தாமணி, கலித்தொகை, குறுந்தொகை (சில பாடல்) முதலியவற்றிற்கு உரை எழுதி அவற்றை உலகில் வாழவைத்தவர். இவர் சிந்தாமணிக்கு உரை காண்பதற்குச் சமணராகிச் சைனர்களிடம் அதன் உரையை அறிந்து அவர்கள் ஒப்புக்கொள்ளும் வகையில் உரையினை எழுதிஞர் என்று ஒரு செய்தி வழங்குகிறது. ஆதலின், சிலகாலமேனும் சமணராய் வாழ்ந்த உரையாசிரியர் என்று இவரைக் கொள்வோம். சிந்தாமணியின் உரை தலைசிறந்த உரை என்று சமணர்களும் போற்றுகின்றனர். தொல்காப்பியத்தில் ஒரு சில பகுதிக்கு உரை எழுதியபின் சிந்தாமணி உரை எழுதியதால் சிந்தாமணி உரையில் தமது தொல்காப்பிய உரையைக் குறிப்பிடுகின்ருர். எழுத்ததிகாரத்தில் 'னகரம் நெடுங்கணக்கின் ஈருதற்குக் காரணம் வீடு பேற்றிற்குரிய ஆண்பால் எழுத்தாதலே' என்று இளம்பூரணர் போலவே இவரும் கூறுகின்ருர். இந்தப் பகுதி இவர் சமணராய் இருந்தபோது எழுதியதோ என்ற ஐயம் எழுகிறது. இவருடைய உரை, முடிபு காட்டி எழும் பொழிப்பாகவும் விசேடக் குறிப்பாகவும் அமைந்துள்ளது.

# IV. பிற நூல்கள்

## கணக்கு

தமிழில் கணக்கைப் பற்றிய நூல்கள், சோதிடத்தைப் பற்றிய நூல்கள் முதலியன பல இருந்திருத்தல் வேண்டும். கணக்கதிகாரம் போன்ற நூல்கள் ஒரு சிலவே நம் கைக்கு எட்டுவன. எண்ணைப் பற்றிய நூலிலிருந்து எடுத்துக் காட்டு ஒன்று மயிலைநாதர் தருகிறார். இந்த வகையில் சமணருடைய ஆராய்ச்சியின் பயனெலாம் நமக்குக் கிட்டவில்லை என்றே கூறவேண்டும்.

## சோதிடம்

சோதிடத்தில் சினேந்திரன்மாலை என்பதொன்று சமணர்களுடைய சோதிட ஆராய்ச்சியை விளக்க நமக்குக் கிடைத்துள்ளது. இது வெண்பா யாப்பாலானது, நல்ல இலக்கண நடையில் அமைந்தது. இன்னும் எத்தனையோ நூல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. மண்டல புருடர் தன்னுடைய ஆசிரியர் குணபத்திரரைச் சோதிட நீதிவல்லோன் எனப் புகழ்கிறார். இப்படி எத்தனையோ துறையிலும் அறிவு ஆராய்ச்சி செய்து தமிழ் நாட்டுப் பண்பாட்டை வளர்த்தனர் சமணர். அதன் ஆழத்தை எதிர்காலத்தேதான் காணமுடியும். எல்லா நூல்களும் வெளிவந்துவிட்டன என்று யாரே கூறுவர்?

# 5. முடிவு

*எத்துறையும்*

எனவே, சமணர்கள் எல்லாத் துறைகளிலும் தமிழை வளர்த்துத் தமிழை வாழச் செய்து தமிழ் ஆழத்தைத் தம்மைப்போல் பிறரும் அறியப் பெரிதும் உதவ முயன்றனர். அம் முயற்சியில் வெற்றி கண்டனர். இதில் யாரும் ஐயங் கொள்வதற்கில்லை. சிறந்த இலக்கண நூல்களில் பெரும்பான்மையன சமணர்கள் எழுதினவையேயாம். தொல்காப்பியம் சமண நூல் என உறுதி கூற முடியாமற்போனாலும், சமணம் பரவிய காலத்தெழுந்த தமிழ் வழக்கிற்கே இலக்கணம் கூறுகிறதெனலாம். இறையனாரகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், பிரயோகவிவேகம், நீங்கிய மற்றைய இலக்கணப் பரப்பெலாம் சமணர் இட்ட பிச்சையே எனலாம். இவையும் சமண இலக்கணங்களின் துணைகொண்டு விளங்குவனவேயாம். பாட்டுக்களை எல்லோரும் ஒப்புக்கொள்ளும் வகையில் சீர் பிரிப்பதற்குப் பொதுவழி ஒன்று காட்டியவர் யாப்பருங்கலக்காரரே ஆவர். எழுத்து, சொல் ஆராய்ச்சியைச் சிறுவரும் கொண்டு விளையாடும் படியாகச் செய்தவர் நன்னூல் எழுதிய பவணந்தி ஆவர்.

நிகண்டிற்குக் கடைகாலிட்டுக் கோட்டை கட்டியவரெல்லாம் சமணர்களே ஆவர். மேனாட்டார் அகராதி தொடங்குமுன் சமணர் முயற்சியே சிறந்து விளங்கியது.

இலக்கியத்தில் பழைய காப்பியங்கள், மணிமேகலை, குண்டலகேசி நீங்கலாக, வழங்கியவை யெல்லாம் சமணக் காப்பியங்களே யாம். காப்பிய வழியினைக் கம்பர் முதலோர்க்குச் செவ்வனே அமைத்துத் தந்தவர்களும் அவர்களேயாம். வசனத்திலும் பழைய இலக்கியமாக நின்று நிலவுவது சமணரது ஸ்ரீபுராணம் ஒன்றேயாம். அறவழி நூல்களைச் செய்தவர்கள் பெரும்பான்மையிலும் சமணர். பிறர் எழுதிய அறநூல்களும் சமணர்களிட்ட அறநூல் திட்டத்தைப் பின்பற்றுவனவே யாம். திருவள்ளுவர் சமணர் அல்லர் என்று கொள்வோரும் சமண அடிப்படையாம் அருளறத்தின் மேலேதான் திருவள்ளுவர் எக்காலத்துக்கும் எந்நாட்டினர்க்கும் தக்கதான தொரு அறக் கோயிலை எழுப்பியுள்ளார் என்று ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். ஆதலின், எந்தத் துறையை நோக்கினும் சமணர் செய்த பேருதவியைத் தமிழர் எந்த நாளும் மறப்பதற் கில்லை. இந்த உண்மையை 20-ஆம் நூற்றுண்டைய தமிழர்கள் நன்குணர்ந்து போற்றிவருகிறுர்கள்.

### இனிச் செய்யவேண்டுவது

இங்கு மனத்தை வாட்டும் பெருவருத்தம் ஒன்று உண்டு. உலகத்துக் கெல்லாம் உதவும் வகையில் ஓங்கி வளர்ந்த தமிழ்ச் சமண நூல்கள் உலகிற் குதவாமல் தமிழில் மட்டும் ஒளிந்து கொண்டு கிடக்கின்றனவே என்ற வருத்தமே இந்த நிலையில் எல்லோர்க்கும் தோன்றும். உலகம் அறியாதது ஒருபுறம் கிடக்கட்டும். இந்தியாவில் பிற பகுதிகளில் வாழும் சமணர்களும் சமண அறிஞர்களும் இந்தச் சமணப் பழஞ்சொத்தை அறியாமல் கிடப்பதனைப் பற்றி என்ன சொல்வது? இந்தத் தமிழ் நூல்களைத் தத்தம் மொழியிலும் இந்தியப் பொது மொழியிலும் மொழிபெயர்க்கச் செய்வது சமணர்களது முதற் கடமை ஆகும். உலகப் பொது மொழியாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தருவதும் தானங்களி லெல்லாம் சிறந்த தானமாகும்.